NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
WE OFFER SERVICES IN:
Real Estate
Corporate Law
Litigation
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

November 2019
# எகுருவி
ekuruvi.com
$1

Bring your parents & Grandparents worry free!
SuperVisa. Today
416 321 6000
support@supervisa.today



## மாவீரர் நாள் நவம்பர் 27

# தாயகக் கனவுடன் சாவினை தழுவிய சந்தனப் பேழைகளே!

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Buying or selling a home?
Thipan Raj
Sales Rep.
Cell: 416-629-2444

JOIN OUR TEAM OF GUARDIANS
GINI ANNARASA
MORTGAGE ALLIANCE
LET US BE YOUR GUARDIANS
mortgageguardian.ca 416.556.7002 • 80 NASHDENE RD

DOVE SQUARE
PROPERTY MANAGEMENT INC.
www.dovesquare.ca
Integrity | Community | Commitment
416-335-DOVE (3683)
10 Milner Business Court, Suite 510, Toronto, ON, M1B 3C6

Ideal Auto Tech
For all your domestic and imported vehicle repairs and services
Oil Change
$24.99 + tax
Conditions apply.
Tel: 416-752.LUBE(5823)
Fax: 416-752-0457

Century 21
Regal Realty Inc., Brokerage*
Jeyan Inpanayagam Comm.Eng
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
www.ihomeandcondo.com

GT Brokers
Do you want to become a Professional Advisor?
"NOW HIRING"
Full & Part Time Life & Health Insurance Advisors
Get your industry licence at no cost... Free in class teaching
guna@gtbrokers.ca | www.gtbrokers.ca
Guna Thuraisingham M.A.Sc (Eng.), P.Eng. 416 528 1407

Navajeevan Anantharaj
Sales Representative
416 272 8543
203-1265 Morningside Ave,
Scarborough, ON M1B 3V9
RE/MAX COMMUNITY REALTY INC., BROKERAGE

PRO-LIFE WELLNESS CENTRE
PHYSIOTHERAPY CLINICS
Our Services:
• Physiotherapy
• Chiropractic
• Massage
• Acupuncture
• Spinal Decompression
• Orthotics/Braces
• Car Accidents
• WSIB
PAIN? WE CAN HELP YOU!
OPEN 7 DAYS
416.357.2808
www.prolifewellnesscentre.com
AJAY THAVAM | 416.704.8074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன் வழிகாட்டி 25-ம் ஆண்டு சிறப்பு வெளியீட்டில் உங்கள் விளம்பரமும் இடம்பெற...

CELEBRATING 25 years ANNIVERSARY

செந்தியின்... தமிழன் வழிகாட்டி Tamils' Guide

உடன் அழையுங்கள்

**416-615-4646**

**info@tamilsguide.com**

**www.tamilsguide.com**

ACCIDENT INJURIES
ACCOUNTING & TAX CONSULTANT
ACUPUNCTURE
ADVERTISING AGENCY
AIR CONDITION
ALARM SYSTEM
APPARTMENT & HOUSE RENT
APPLIANCES SALES & REPAIRS
ARCHITECTURAL & ENGINEERING SERVICES
ASTROLOGICAL SERVICE & MARRIAGE CONSULTANT
ATTIC INSULATION
AUDIO, VIDEO & CD
AUTO ACCESSORIES
AUTO BODY WORK AND PAINTING
AUTO WASH
AUTO WINDSHIELD & GLASS
AUTOMOBILE & MAINTENANCE & REPAIRS
AUTOMOBILE COLLISION CENTRE
AUTOMOBILE DEALERS
AUTOMOBILE DETAILING
AUTOMOBILE PARTS
AUTOMOBILE RENTAL
AUTOMOBILE SCARAP CARS
AUTOMOBILE TINTING
AUTOMOBILE TIRE
AUTOMOBILE TOWING
AUTOMOTIVE LEASING
AYURVEDIC CLINIC
BAKERY
BANK
BANKRUPTCY
BANQUET HALL
BARRISTER & SOLICITORS
BASEMENT WATER PROOFING
BLINDS
BOOKS & PUBLICATION
BRIDAL ORNAMENTATION & BEAUTY CARE
BUILDERS
BUILDING DESIGN SERVICES
BUS SERVICES
BUSINESS REGISTRATION
CABLE SERVICE
CAKE MAKING
CAMERA REPAIR
CAMPING
CARPENTARY
CARPET CLEANING & JANITORIAL
CARPET SALE
CATERING
CELLULAR
CHAIR RENTAL
CHURCHES
CLEANING & MAINTENANCE
COLLEGE
COMMUNITY EVENTS
COMPUTER NETWORKING
COMPUTER SALES & MAINTENANCE

COMPUTER SALES & MAINTENANCE
COMPUTER TONERS & CARTRIDGE
COMPUTER TRAINING
CONCREATE
CONSTRUCTION & DEVELOPMENT
COSTUME RENTALS
COMUNITY SERVICES & ASSOCIATION
COTTAGE RENTAL
COUNSELLING
COUNTER TOPS
COURIER SERVICES
CUSTOM HOMES
DAY CARE
DECKS
DENTISTS
DIAPERS
DIRECTORY
DJ SERVICES
DOCTORS
DOOR – WINDOW
DRAMA – DANCE SUPPLIES
DRAPERY AND BLINDS
DRESS MAKING
DRIVEWAY
DRIVING SCHOOL (CAR)
DRIVING SCHOOL (TRUCK)
DRY CLEANERS
DUCT CLEANING
EDUCATION - CENTRE
EDUCATION – FINE ARTS
EDUCATION- SCHOLARSHIP FUNDS
EDUCATION SCHOOL
ELECTRICAL
ELECTRONICS SALES & REPAIRS
EMPLOYMENT
ENGINEERING
EVENT PLANNING
EYE DOCTOR
FENCE
FINANCIAL SERVICES
FISH & MEAT SHOPS
FLOORING
FLORISTS
FOOD EQUIPMENT
FUNERAL SERVICES
FURNITURE
GARAGE DOOR & OPENERS
GARBAGE REMOVAL & RECYCLING
GLASS & MIRROR
GRASS CUTTING
GROCERIES
HAIR DRESSING
HEATING & COOLING
HOME HEALTH CARE SERVICES
HOME INSPECTION
HOME SERVICES
HOME STAGING

HOMEO CLINIC
IMMIGRATION & LEGAL SERVICES
INDIA
INSURANCE
INTERLOCK & PAVING
INTERNET
INTERPRETATION
JANITORIAL & MAINTENANCE
JEWELLERY
JUNK REMOVAL
KTICHEN CABINET MAKING
LAND SURVEYING
LANDSCAPING
LAWN MOVER REPAIR
LAWYERS
LEAKING BASEMENT
LEGAL SERVICES
LIBRARY
LIGHTING
LIMOUSINE SERVICE
LOCK SMITH
MACHINE RAPIR
MAKE UP & STAGE DECORATION
MALL
MARRIAGE CONSULTANTS
MEAT & POULTRY
MEMORY
MONEY TRANSFER
MONTESSORI SCHOOL
MORTGAGE
MOVING
MUSIC GROUP
MUSIC RECORDING
NATHASWARAM
NEWSPAPER
OPTICIANS
OPTOMETRIST
PAINITNG
PARALEGAL
PARTY SUPPLIES RENTAL
PAVING
PAWN BROKERS
PEST CONTROL
PHARMACY
PHONE SERVICE
PHOTO BOOTH
PHOTOGRAPHY
PHYSIOTHERAPHY & REHABILITATION
PICTURE FRAMING
PLUMBING
POOJA STORES
PRIESTS
PRINTING
PROPERTY MANAGEMENT
RADIO
RAILING
REAL ESTATE

REAL ESTATE – APPRAISALS
REAL ESTATE– COMPANY
REAL ESTATE STAGING
RECYCLE
REGISTRAR
RENOVATION
RESTAURANT
RESTAURANT SUPPLIES
RESUME
ROOFING
SECURITY CAMERA
SECURITY GUARD & PATROL
SENIOR CARE
SEWING CLASS
SHIPPING
SHUTTERS
SIGNS
SNOW REMOVAL
SPORTS
SPRAY FOAM INSULATION
SRILANKA
STAGE DECORATION & MAKEUP
STAGING FOR HOUSE
STEEL CONSTRUCTION
SURVEYING
SWEETS
TAILORING
TELECOMMUNICATIONS
TELELPHONE- LONG DISTANCE CALLING
TELEPHONE – INSTALLATION
TELEVISION
TEMPLE
TEXTILES
TOURIST
TOWING
TRAFFIC TICKET
TRANSLATION
TRAVELS
TREE CUTT
TROPHIE ONS
VACUUM
VIDEO P
VIDEO RE
WASTE RE
WATER LEAK
WATE
WEB
WEB
WEB F
WELDI
WHOL
WIND
YOGA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகுருவி இணைய இதழ் November 2019

ekuruvi.com

www.ekuruvi.com
Tel: 416-272-8543
Email: ekuruvi@gmail.com
PO Box 15 Pickering
Pickering ON
L1V 2R2

# மாவீரர் நாள் பாடல்

மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழ்மீது உறுதி!
வழிகாட்டி எம்மை உருவாக்கும் தலைவன் வரலாறு மீதிலும் உறுதி!
விழிமூடி இங்கே துயில்கின்ற வேங்கை வீரர்கள் மீதிலும் உறுதி!
இழிவாக வாழோம்! தமிழீழப்போரில் இனிமேலும் ஓயோம் உறுதி!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!
தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!
இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!
உங்களைப் பெற்றவர் உங்களின் தோழிகள் உறவினர் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே உங்களோடாடிய தோழர்கள் வந்துள்ளோம்!
அன்று செங்களம் மீதிலே உங்களோடாடிய தோழர்கள் வந்துள்ளோம்!

எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே! எங்கே! ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே

வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!
வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!
உங்கள் கல்லறை மீதிலும் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்!
உங்கள் கல்லறை மீதிலும் கைகளை வைத்தொரு சத்தியம் செய்கின்றோம்!
வல்லமை தாருமென்றுங்களின் வாசலில் வந்துமே வணங்குகின்றோம்!

சாவரும்போதிலும் தணலிடைவேகிலும் சந்ததி தூங்காது!
சாவரும்போதிலும் தணலிடைவேகிலும் சந்ததி தூங்காது!
எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும்புலிகளின் தாகங்கள் தீராது!
எங்கள் தாயகம் வரும்வரை தாவிடும்புலிகளின் தாகங்கள் தீராது!

எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!
உயிர்விடும் வேளையில் உங்களின்வாயது உரைத்தது தமிழீழம்!
உயிர்விடும் வேளையில் உங்களின்வாயது உரைத்தது தமிழீழம்!
அதை நிரைநிரையாகவே இன்றினில் விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்!
அதை நிரைநிரையாகவே இன்றினில் விரைவினில் நிச்சயம் எடுத்தாள்வோம்!

உயிர்விடும் வேளையில் உங்களின்வாயது உரைத்தது தமிழீழம்!
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியர சென்றிடுவோம்!
தலைவனின் பாதையில் தமிழினம் உயிர்பெறும் தனியர சென்றிடுவோம்!
எந்தநிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்!
எந்தநிலைவரும் போதிலும் நிமிருவோம் உங்களின் நினைவுடன் வென்றிடுவோம்!

எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
எங்கே எங்கே ஒருதரம் விழிகளை இங்கே திறவுங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!
ஒருதரம் உங்களின் திருமுகம் காட்டியே மறுபடி உறங்குங்கள்!

தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!
இங்குகூவிடும் எங்களின் குரல்மொழி கேட்கிதா? குழியினுள் வாழ்பவரே!
தாயகக்கனவுடன் சாவினை தழுவிய சந்தனப்பேழைகளே!

மாவீரர் நாள் அன்றும் விடுதலைப் புலிகளின் போராளிகளின் இறுதிச் சடங்களின் அன்றும் ஒலிக்கப்படும் பாடல் மாவீரர் நாள் பாடல் ஆகும். புதுவை இரத்தினதுரை இந்தப் பாடலை இயற்றியிருந்தார். வர்ண ராமேஸ்வரன் இப்பாடலைப் பாடியிருந்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழில் முகவர்கள் ஊடாக தற்காலிக வேலையினை பெற்றுக்கொள்பவர் கவனத்துக்கு:
## (Attention to temp agency workers!)

கனடாவுக்கு குடிவருபவர்கள் பலர், தொழில் முகவர்களூடாக கைகாசுக்கு தொழில் புரிவதுண்டு. இவர்களுக்கு வேலை உத்தரவாதமோ, பாதுகாப்போ கிடையாது. உயிரிழப்புக்கான சந்தர்ப்பங்களும் உண்டு. அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தை இங்கு கவனிக்கலாம்:

Fiera Food Company - 50 Marmora Street, North York - கனடாவில் உள்ள மிகப்பெரும் வெதுப்பகத் தொழிலகமாகும். இங்கு *1200* பேர் வரை தொழில் புரிகின்றனர். இவர்களில் *70%*மானவர்கள் தொழில் முகவர்களூடான தற்காலிகப் பணியாளர்கள். *1999*க்குப் பின்பு, இங்கு பணிபுரியும் *5* பேர் போதுமான தொழிற்துறை பாதுகாப்பு பேணப்படாதமை காரணமாக இடம்பெற்ற விபத்துக்களில் மரணமாகியுள்ளனர்.

1999 -Ivan Golyashov - 17 வயதானவர் மா பிசையும் இயந்திரத்தை சுத்தம் செய்துகொண்டிருக்கும் போது, இயந்திரம் இயக்கப்பட்டு மரணம்.

2011 - Aydin Kazimov தொழிற்சாலை டிரக் இனால் நெரிக்கப்பட்டு மரணம்.

2013-Amina Diaby- *23* வயது பெண் தலையை மூடி அணியும் hijab, இயந்திரத்துக்குள் சிக்குப்பட்டு மரணம்.

2016 - 40 வயதான ஒருவர், பொருட்களை ஏற்றும் பகுதிக்கும், டிரக் க்கும் இடைப்பட்ட பகுதியில் டிரக் இனால் நெரிக்கப்பட்டு மரணம்.

2019 Sep 25 - Enrico Mirando இயந்திரத்தை சுத்தம் செய்த போது, இயந்திரம் இயக்கப்பட்டதில் மரணம்.

இதிலே கவனிக்க வேண்டியவை :

*1.* தற்காலிக பணியாளர்களுக்கு மிகக்குறைந்த நேரமே பயிற்சி வழங்கப்படுகிறது.

*2.* நோய்வாய்ப்பட்ட நாட்களுக்கு (sick days) ஊதியம் வழங்கப்படுவதில்லை.

*3.* இலகுவில் மாற்றப்பட்டுவிடுவோம் என்ற பயத்தை ஏற்படுத்தி, பிரச்சனைகள் ஏற்படும் போது புகார் அளிக்க முடிவதில்லை.

*4.* சம்பள இடைவெளியில்லாமல் (paid breaks) நீண்ட நேரம் பணி புரியவைக்கப்படுகின்றனர்.



*5.* கைக்காசாக வழங்கப்படுவதால் pay stubs or Record of Employment கிடையாது. வேலை இழப்பு ஏற்பட்டாலும் எதுவும் செய்ய முடியாது.

கடந்த *20* வருடங்களாக உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மீறல்களுக்காக இந்நிறுவனத்துக்கு *191* உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. ஆனாலும், தொடர்ந்து அவர்கள் விதி மீறல்களைப் புரிவதாகவே தெரிகிறது.

இவ்வகையாக நிறுவனங்கள் செயற்படுவதற்கான காரணம், தொழிலாளர் தொடர்பான சட்டங்கள் போதுமானதாக இல்லாதமையே ஆகும். ஒரு தற்காலிக பணியாளர் பணியிடத்தில் எதிர்கொள்ளும் ஆபத்துக்களை அந்த நிறுவனம் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும். இதன்போது அதிக இழப்பீடுகளை வழங்கவேண்டி வரும் எனும் போது தான் பணியிடங்கள் பணியாளரின் பாதுகாப்பில் போதிய அக்கறை எடுத்துக்கொள்ளும்.

கடந்த லிபெரல் மாகாண அரசு, தொழிலாளர் இழப்பீட்டு வாரியத்தின் மூலமான (WSIB) நிதி பாதுகாப்பினை தற்காலிக பணியாளர்களும் பெறும் வகையில் சட்டத்தை மாற்றியது. ஆனாலும் அதனை நடைமுறைப்படுத்தத் தேவையான விதிமுறைகளை உருவாக்கியிருக்கவில்லை. Section 83(4) of the Workplace Safety and Insurance Act என்பதை செயல்படுத்த வேண்டும் என்று தற்போதுள்ள Conservative அரசை பல தரப்புக்களும் கோரி, Ford அலுவலகத்தை முற்றுகையிட்டு போராடியபோதும் இன்னும் சரியான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது வருத்தத்துக்குரியது.

பல தமிழர்களும் இவ்வாறாக தற்காலிக பணியாளர்களாக பணிபுரிகின்றனர். அவர்கள் இது தொடர்பில் விழிப்பாக இருக்கவேண்டும்.

**தர்ஷினி உதயராஜா**


வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.

SERIOUS PERSONAL TRAUMATIC INJURIES AS RESULT OF A
MOTOR VEHICLE ACCIDENT
Fractures | Spinal Cord Injury | Brain or Head Injury | Internal Injuries | Scarring or Disfigurement | Catastrophic Injuries

FOR CASH SETTLEMENT KNOW YOUR RIGHTS AGAINST THE INSURANCE COMPANY.

MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

Over 30 Years Combined Experience

Even if you are at fault:
Unemployed . Employed
Passenger . Pedestrian
Cyclist . Travelling in public transit . Student
Housewife.




DON'T BE MISLEAD INTO TAKING A POOR OR SMALL
CASH SETTLEMENT
IF YOU ARE INJURED PHYSICALLY AND/ OR PSYCHOLOGICALLY
CALL US NOW!

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்.

தீபன்
(416) 505-9804
(416) 831-4444
24 Direct Line

2190 Warden Ave., Suite 202,
Toronto, ON M1T 1V6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடியதேர்தல் - களவாடியபொழுதுகள்



| | | |
|---|---|---|
| லிபரல் | LIBERAL | 157 |
| கொன்சவேற்றிவ் | CONSERVATIVE | 121 |
| புளொக் கியுபெக் | BLOC QUÉBÉCOIS | 32 |
| என்.டி.பி | NDP | 24 |
| பசுமைபு | GREEN | 3 |
| சுயேட்சை | OTHERS | 1 |
| மக்கள் கட்சி | PEOPLE | 0 |

எதிர்பார்த்ததைப் போலவே லிபரல் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்றது. எனினும் அவர்களால் பாராளுமன்றத்தின் மொத்த ஆசனங்களில் 50வீதத்துக்கு மேலே பெறமுடியாமல் போய்விட்டது. விளைவு என்.டி.பி மற்றும் பசுமைக் கட்சியின் ஆதரவுடனேயே தனது அடுத்துவரும் காலங்களை செலவிட வேண்டும். இங்கு செலவு என்று கூறுவதற்கு காரணம், லிபரலின் தொடர்ச்சியை இவ்விரு கட்சிகளும் கட்டுப்படுத்தலாம். என்.டி.பியிடம் 24 ஆசனங்கள் இருப்பதனால் அதன் செல்வாக்கு தொடரப் போகும் லிபரல் அரசில் அதிகமாகவிருக்கும்.

ஜஸ்ரின் ரூடோவின் தந்தையார் பியரிஎலியட் ரூடோ 1972ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் (ஒக்ரோபர் மாதம்) 2019 தேர்தல் முடிவுகளைப் போலவே 50 வீதமான ஆசனங்களைப் பெறவில்லை. 264 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 109 ஆசனங்களையே பெற்றார். கொன்சவேற்றிவ் கட்சி 107 ஆசனங்களைப் பெற்றது. என்.டி.பி 31 ஆசனங்களையும்,சோசல் கிறடிற் கட்சி அல்பேட்டாவை மையமாகக் கொண்டது 15 ஆசனங்களையும் பெற்றது. என்.டி.பி தலைவர் டேவிட் லூயிஸ் பல நல்ல திட்டங்களை அமுல்படுத்துமாறு வலியுறுத்தினார். அக் காலத்தில் ஒபெக்கின் ஆதிக்கத்திலிருந்து கனடாவைக் காப்பாற்ற பெற்றோ கனடாஉருவாக்கப்பட்டது. இதன் உருவாக்கத்தில் டேவிட் லூயிசின் பங்கு அதிகம். வைகாசி 1974ல் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தபோது, பியறிரூடோஅரசு, என்.டி.பியின் கோரிக்கைளை கருத்திற் கொள்ளவில்லை. விளைவு பியறிரூடோ தேர்தலைச் சந்திக்க வேண்டிவந்தது. இதனை திட்டமிட்டே பியறிரூடோ செய்தார் எனக் கருதப்படுகின்றது.

பியறிரூடோவின் கணிப்புசரியாகவேயிருந்தது. கொன்சவேற்றிவ் கட்சி, விலைக் கட்டுப்பாடு, ஊதியக் கட்டுப்பாடு ஆகியவற்றை முன்வைத்து தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொண்டிருந்தது. ஊதியக் கட்டுப்பாட்டை என்.டி.பி தொழிற்சங்க ஆதரவாளர்கள் எதிர்த்தனர். இவர்கள் கொன்சவேற்றிவ் கட்சி ஆட்சிக்கு வருவதற்கு எதிராக வாக்களித்தனர். 141 ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைத்தது. 53 வீதமான ஆசனங்களை பாராளுமன்றத்தில் லிபரல் பெற்றிருந்தது. என்.டி.பி 16 ஆசனங்களையே பெற்றது. 1979ல் நடைபெற்ற தேர்தலில் பியறிரூடோ, ஜோ கிளார்க்கிடம் தோல்வியடைந்தார். கொன்சவேற்றிவ் கட்சி சிறுபான்மை அரசை அமைத்தது. எனினும் வழமைபோல் வரவுசெலவுத் திட்டத்திற்கு எதிராக லிபரலும், என்.டி.பியும் வாக்களிக்க சோசல் கிறெடிற் கட்சி வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. மீண்டும் ஒரு தேர்தல். இம் முறை பியறிரூடோவின் லிபரல் 147 ஆசனங்களைப் பெற்று பெரும்பான்மைஅரசானது. சோசல் கிறெடிற் கட்சிக்கு ஆசனங்களே கிடைக்கவில்லை. அதன் பின்னர் சோசல் கிறெடிற் கட்சி பாராளுமன்றத்திற்கு தேர்வாகவில்லை.

தந்தையின் பாராளுமன்ற வாழ்வைபோன்றே தனயனதும் உள்ளது. அப்போதும், இப்போதும், எப்போதும்(?) லிபரல் கட்சிக்கு அல்பேட்டாவில் குறைந்தளவு ஆசனங்களே கிடைக்கும். கொன்சவேற்றிவ் கட்சி எப்போதும் அல்பேட்டாவில் அதிகஆசனங்களைப் பெறும். இச் சரித்திரம் ஏனோ தெரியவில்லை தொடர்கின்றது. தந்தை ஆட்சியிலிருந்தபோது, கியுபெக்கில் லிபரல் மிக அதிகமானஆசனங்களைப் பெற்றது. இப்பொழுது மிக அதிகத்தை இழந்து அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. புளொக் கியுபெக் பெற்றுள்ள வெற்றியை சாதாரணமாக கடந்து போகமுடியாது.

2019 தேர்தல் முடிவுகள் இரு விடயங்களை கனடிய மக்கள் கவனத்திற் கொண்டுள்ளார்கள் என்பதனை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. முதலாவது பொருளாதாரம்,இரண்டாவது சுற்றுச் சூழல். அல்பேட்டா மற்றும் சஸ்கட்சுவான் மாநிலலிபரல் நிராகரிப்பு என்பது அவர்களது பொருளாதார முன்னேற்றத்திற்கான மத்திய அரசின் கவனமின்மை என்பதனையே சுட்டிக் காட்டுகின்றது. தேர்தல் முடிவுகளின் பின்னர், ஊடகங்கள் கனடாவில் தோன்றியுள்ள பிரிவினை எனச் சுட்டிக் காட்டியுள்ளார்கள். இது ஏற்பதற்குரியதல்ல. முன்பும் இதே நிலைமையிருந்தது.

சுற்றுச் சூழல் நடவடிக்கைகளில் கடந்த லிபரல் அரசு அதிக கவனம் செலுத்திய போதும், பெரும் நிறுவனங்களின் சுற்றுச் சூழல் வன்முறைகளை, மீறல்களை அரசு கவனத்திற் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டும், தேர்தலின்போது முன்வைக்கப்பட்டது. ஒருவிடயத்தை இங்கு குறிப்பிட வேண்டும், கொன்சவேற்றிவ் கட்சி முன்வைத்த, "எப்படியாயினும், எண்ணெய் குழாய்கள் அமைப்போம்" என்ற பிரச்சாரத்தின் பின்னால் சுற்றுச் சூழல் பாதுகாப்பு மீறல்களும் உள்ளது.

இதே எண்ணெய் குழாய் அமைப்பதனை அல்பேட்டாவின் மாநிலஅரசு எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றது. சிறுபான்மை லிபரல் அரசு எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது என்பவற்றை நாம் மிகவும் கவனத்துடன் அவதானிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| Party | Candidate | Votes | % | ±% | |
|---|---|---|---|---|---|
| Liberal | Gary Anandasangaree | 31,339 | 62.3 | +2.06 | |
| Conservative | Bobby Singh | 10,088 | 20.1 | -7.26 | |
| New Democratic | Kingsley Kwok | 5,735 | 11.4 | +1.04 | |
| Green | Jessica Hamilton | 2,324 | 4.6 | +2.57 | |
| People's | Dilano Sally | 466 | 0.9 | - | |
| Christian Heritage | Mark Theodoru | 353 | 0.7 | - | |
| Total valid votes/Expense limit | | | 100.0 | | |
| | | | markhamstouffville | | |

| Party | Candidate | Votes | % | ±% | |
|---|---|---|---|---|---|
| Liberal | Helena Jaczek | 24,743 | 38.9 | | |
| Conservative | Theodore Antony | 19,570 | 30.7 | 42.77 | |
| Independent | Jane Philpott | 13,216 | 20.8 | 49.21 | |
| New Democratic | Hal Berman | 4,013 | 6.3 | | |
| Green | Roy Long | 1,581 | 2.5 | | |
| People's | Jeremy Lin | 531 | 0.8 | | |
| Total valid votes/Expense limit | | 63,654 | 100.0 | | |

| Scarborough Guildwood Party | Candidate | Votes | % | ±% | Expenditu |
|---|---|---|---|---|---|
| Liberal | John McKay | 26,123 | 61.1 | +1.1 | |
| Conservative | Quintus Thuraisingham | 9,553 | 22.4 | -4.1 | |
| New Democratic | Michelle Spencer | 4,806 | 11.2 | -0.1 | |
| Green | Tara McMahon | 1,220 | 2.9 | +1.5 | |
| People's | Jigna Jani | 648 | 1.5 | - | |
| Independent | Kevin Clarke | 112 | 0.3 | -0.1 | |
| Canadian Nationalist | Gus Stefanis | 85 | 0.2 | - | |
| Independent | Stephen Abara | 70 | 0.2 | - | |
| Independent | Kathleen Marie Holding | 70 | 0.2 | - | |
| Canada's Fourth Front | Farhan Alvi | 55 | 0.1 | - | |
| | Total valid votes/Expense limit | 42,742 | 100.0 | | |

Proportion of seats won in each province/territory, by party (2019)

| Province | Liberal | Conservative | NDP | Bloc | Green |
|---|---|---|---|---|---|
| Ontario | **79 / 121** | 36 / 121 | 6 / 121 | N/A | 0 / 121 |
| Quebec | **35 / 78** | 10 / 78 | 1 / 78 | 32 / 78 | 0 / 78 |
| Nova Scotia | **10 / 11** | 1 / 11 | 0 / 11 | N/A | 0 / 11 |
| New Brunswick | **6 / 10** | 3 / 10 | 0 / 10 | N/A | 1 / 10 |
| Manitoba | 4 / 14 | **7 / 14** | 3 / 14 | N/A | 0 / 14 |
| British Columbia | 11 / 42 | **17 / 42** | 11 / 42 | N/A | 2 / 42 |
| Prince Edward Island | **4 / 4** | 0 / 4 | 0 / 4 | N/A | 0 / 4 |
| Saskatchewan | 0 / 14 | **14 / 14** | 0 / 14 | N/A | 0 / 14 |
| Alberta | 0 / 34 | **33 / 34** | 1 / 34 | N/A | 0 / 34 |
| Newfoundland and Labrador | **6 / 7** | 0 / 7 | 1 / 7 | N/A | 0 / 7 |
| Northern Canada | **2 / 3** | 0 / 3 | 1 / 3 | N/A | 0 / 3 |
| **Total** | **157 / 338** | 121 / 338 | 24 / 338 | 32 / 338 | 3 / 338 |

அல்பேட்டாவின் பொருளாதாரம் என்பது எண்ணெய் வருமானத்தில் பெருமளவு தங்கியுள்ளது. யுனைற்றற் கொன்சவேற்றிவ் கட்சியின் தலைவர் யேசன் கெனியின் வரவுசெலவு திட்டமானது மக்களுக்கான பலசலுகைகளை நிறுத்தியுள்ளது. 2000 அரச ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

எண்ணெயின் எதிர்காலம் என்பது சுற்றுச் சூழல் பாதுகாப்பினால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் 2040ம் ஆண்டுக்குப் பின்னர், பெற்றோலில் ஓடும் வாகனங்கள் உற்பத்தி செய்யமுடியாது. பற்றறியில் ஓடும் வாகனங்கள் வடஅமெரிக்காவில் அதிகமாக விற்பனையாகின்றன. எண்ணெயின் எதிர்காலமே கேள்விக்குறியாகவுள்ளபோது மாற்று வருமானம் பற்றி மாநிலஅரசு சிந்திக்கவேண்டும். எண்ணெய் குழாய்கள் சுற்றுச் சூழல்களை பாதிக்காதவாறு அமைக்கமுடியாது. இவ் விடயத்தில் மத்தியில் யார் ஆட்சிக்கு வந்தாலும், அல்பேட்டாவின் நிலைசீர் செய்யமுடியாது. அல்பேட்டா மாநிலம் ஒன்றுமட்டுமே மாநிலவிற்பனை வரிகளற்றது. சராசரியாக ஐந்துவீத வரி விதித்தால் போதும், ஐந்துபில்லியன் டொலர்கள் வருமானத்தை பெறமுடியும்.

மறு புறத்தில் புளொக் கியுபெக், ஒன்ராரியோவில் கொன்சவேற்றிவ் கட்சி பெற்ற வெற்றிபோல், புறநகரங்களிலேயே அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. தனிநாடுஅமைக்கும் தனது உள்ளகத் திட்டத்துக்கானஆதரவின் ஆரம்பமாக அல்லது மீண்டும் துளிர்க்கும் ஆதரவாக இதனை புளொக் கியுபெக் கருதுகின்றது. இதனை கனடிய மத்திய மூன்று கட்சிகள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றன? மீண்டும் ஒரு சர்வ சனவாக்கெடுப்பிற்கு இடமளிக்கப் போகின்றார்களா? போன்றவற்றை வரும் மாதங்களில் தெரியும். கியுபெக்கில் லிபரல் ஆதரவு குறைந்தமைக்கு அரச அலுவலகங்களில் வேலைபார்ப்பவர்கள் மத, கலாச்சார அடையாளங்களை அணியக் கூடாது என்ற கியுபெக் அரசின் சட்டத்துக்கு எதிராக லிபரல் கட்சியின் நிலையும் ஒருகாரணம்.

இத் தேர்தலில் மறைநிலையிலிருந்த ஒருவிடயம் குடிவரவாளர்களை ஏற்றுக் கொள்வது என்பது. இதனை ஒன்ராரியோ மக்கள் எதிர்க்கா விட்டாலும், ஒட்டுமொத்த கனடாவில் ஒரு எதிர்ப்பு ஒன்று இருப்பதனை முடிவுகள் தெரிவிக்கின்றன.

ரொரன்ரோ நகரில் முழுமையாகவும், புறநகரங்களில் பெரும்பான்மையான ஆசனங்களையும் லிபரல் பெற்றுள்ளது. குறிப்பாக என்.டி.பிக்கு இருந்த ஆதரவு குறைந்துள்ளது. ரொரன்ரோ நகரில் ஒரு சில தொகுதிகளை தவிர்த்து, பெரும்பாலானவற்றில் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை லிபரல் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொன்சவேற்றிவ் கட்சியின் தலைவர் Andrew Scheer ன் சீரற்ற பிரச்சாரமே தேர்தல் தோல்விக்கு காரணம் என கொன்சவேற்றிவ் கட்சியின் முக்கியஸ்தர்கள் கருதுகின்றனர். பீற்றர் மக்கே போன்றோர் நேரடியாகவே விமர்சிக்கின்றனர். மிகவும் பலவீனமான நிலையிலிருந்த லிபரல் அரசை இலகுவாக வென்றிருக்கலாம் என்பது இவர்களது கருத்து. இவரை பதவிவிலகுமாறு பலரும் கேட்கின்றனர். அடுத்து வரும் மாதங்களில் இவரது நிலைமை என்ன என்பது தெரியவரும். தலைவர் பதவிக்கு பீற்றர் மக்கேய், பற்றிக் பிரவுன் போன்றோரது பெயர்கள் அடிபடுகின்றன.

பசுமைக் கட்சியின் தலைவர் பதவி விலகி விட்டார். புதிய தலைவர் தெரிவு அக் கட்சிக்குமுக்கியம்.

என்.டி.பி தலைவரின் நிலைமை, அவர் லிபரல் அரசுடன் எவ்வாறு தங்களது திட்டங்களை நிறைவேற்ற முற்படுகின்றார் என்பதனைப் பொறுத்தேயுள்ளது. லிபரல் அரசைக் கட்டுப்படுத்தினால், 1974ல் நடைபெற்றதுபோல், அடுத்த தேர்தல் லிபரல் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மையைக் கொடுக்கும். கொன்சவேற்றிவ் கட்சியின் எதிர்காலம் நீண்டது. அவர்கள் இன்னம் இரு தேர்தல்களின் பின்னரே ஆட்சியமைக்கலாம்.

## தமிழ் வேட்பாளர்கள்



எதிர்பார்த்தைப் போலவே ஹரி ஆனந்தசங்கரி வெற்றி பெற்றுவிட்டார். அடுத்த லிபரல் அரசில் முக்கிய பதவியில் அமரலாம். மார்க்கம் - ஸ்ரோவில் தொகுதியில் கொன்சவேற்றிவ் கட்சி வெற்றி பெறும் என பலரும் கருதினார்கள். 2015 தேர்தலில் அங்கு லிபரல் 49.21 வீத வாக்குகளையும், கொன்சவேற்றிவ் கட்சி 42.77 வீதவாக்குகளையும் பெற்றிருந்தது. இம் முறை ஜஸ்ரின் ரூடோவை விமர்சித்தது Jane Philpott சுயேட்சையாக போட்டியிட்டார். இவரை எதிர்த்து முன்னால் மாநில லிபரல் அமைச்சர் ஹெலனா ஜசிக் போட்டியிட்டார். எனவே லிபரல் வாக்குகள் இங்கு பிரியும். இலகுவாக கொன்சவேற்றிவ் கட்சி வெற்றிபெறலாம். உண்மையும் அதுவே. ஆனால் ஹெலனாவிற்கு 38.9 வீதவாக்குள் கிடைத்தன. ஜேனுக்கு 20.8 வீதவாக்குள் கிடைத்தன. போன தேர்தலில் பெற்ற 42.77 வீதவாக்குகள் கிடைத்திருப்பின் கொன்சவேற்றிவ் கட்சி வெற்றிபெற்றிருக்கலாம். கிடைத்ததோ 30.7 வீத வாக்குகள். எவ்வாறு 12.07 வீதவாக்குகள் குறைந்தன. ஏன்? இதற்கான விடையை கொன்சவேற்றிவ் கட்சி தேடும், அதேசமயம் தமிழ் வேட்பாளர்களும் இங்கு என்ன தவறாக விடப்பட்டுள்ளது என்பதனை அறியவேண்டும். இது எதிர்காலத்தில் வேட்பாளர்களின் அணுகுமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம். தேர்தல் எந்த நேரமும் வரலாம். எனவே உடனேயே களத்தில் இறங்கவேண்டும்.

குயின்ரஸ் துரைசிங்கம் அயராது தனது வெற்றிக்காக பாடுபட்டார். ஆனால் லிபரலின் கோட்டைக்குள் நுழைவது கடினம். குயின்ரசின் அணுகுமுறையை பலரும் பாராட்டினார்கள். மனம் தளராது மீண்டும் களத்தில் இறங்க தயாராகவேண்டும்.

**ரதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்துக்கான ஆதரவும் கூட்டமைப்பின் திட்டமும்

எதிர்பார்க்கப்பட்டது போலவே, சஜித் பிரேம தாஸவுக்கான ஆதரவை, கடந்த ஞாயிறுக்கிழமை (03) தமிழரசுக் கட்சி வெளியிட்டிருக்கிறது.

புலிகளின் காலத்துக்குப் பின்னரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவுகளை, பெரும்பாலும் தமிழரசுக் கட்சியே எடுத்து வந்திருக்கின்றது. அப்படியான நிலையில், கூட்டமைப்பின் ஏனைய இரு பங்காளிக் கட்சிகளான டெலோவும் புளொட்டும் தமிழரசுக் கட்சியின் முடிவுக்கு எதிராகவோ, இரா. சம்பந்தனின் முடிவைத் தாண்டியோ சிந்திக்கப்போவதில்லை.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள், ஜனாதிபதி வேட்பாளர் பிரச்சினை உச்சம்பெற்றிருந்த நிலையில், மன்னாரில் நடைபெற்ற அரச நிகழ்வொன்றில், சஜித்தை வரவேற்றுப் பேசிய செல்வம் அடைக்கலநாதன், "வருங்கால ஜனாதிபதி" என்றே மக்களிடம் அறிமுகப்படுத்தினார்.

அத்தோடு, எம்.கே.சிவாஜிலிங்கம் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடக் கட்டுப்பணம் செலுத்திய காலம் தொட்டு, அவரை எப்படியாவது போட்டியிடுவதிலிருந்துதடுத்துநிறுத்திவிட வேண்டும் என்று, செல்வம் ஓடிய ஓட்டம் அனைவருக்கும் தெரியும். அப்படியான நிலையில், சஜித்துக்கு எதிரான நிலைப்பாடொன்றுக்கு, செல்வம் செல்வதற்கான எந்த வாய்ப்புகளும் இல்லை.

சித்தார்த்தன், எப்போதுமே சம்பந்தனை மீறிச் செல்லாதவர். அப்படியான நிலையில், சஜித்துக்கான ஆதரவு நிலைப்பாட்டை ஓரிரு நாள்களில் கூட்டமைப்பு உத்தியோகபூர்வமாக அறிவித்துவிடும்.

அப்படியானால், ஜனாதிபதித் தேர்தலில் தன்னுடைய ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு, கூட்டமைப்பு ஏன் இவ்வளவு காலம் எடுத்துக் கொண்டிருக்கின்றது என்கிற விடயம் மேலெழுகின்றது.

உத்தியோகபூர்வமாகத் தன்னுடைய முடிவை அறிவித்தாலும் இல்லையென்றாலும், சஜித் ஆதரவு நிலைப்பாட்டில்தான் கூட்டமைப்பு இருக்கின்றது என்பது, அனைவரும் அறிந்த உண்மை. ஆனால், ஒரு கட்சியாக, தமிழ்த் தேசிய அரசியலில் கிட்டத்தட்ட ஏகநிலை பிரதிநிதித்துவத்தைப் பெற்றிருக்கும் கூட்டமைப்பு, தன்னுடைய இடத்தை எந்தவொரு விடயத்துக்காகவும் விட்டுக்கொடுக்காது. அதைத் தக்க வைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபடும்.

வடக்கு கிழக்கில் மாத்திரமல்ல, தென் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் கூட்டமைப்பு தன்னுடைய இடத்தை விட்டுக்கொடுக்காது. அவ்வாறான நிலையில், எதிர்காலத் தேர்தல்களைக் கருத்தில் கொண்டு, ஜனாதிபதித் தேர்தல் காலக் காட்சிகளைக் கூட்டமைப்பு கையாண்டிருக்கின்றது.

தமிழ் மக்கள் பேரவையின், சிவில் சமூகக் குழுவினரின் 'மழைக்காளான்' முயற்சியான பொதுவேட்பாளர் விடயத்தை, தமிழ் மக்கள் ஆரம்பம் முதலே இரசிக்கவில்லை. ஆனாலும், சம்பந்தன் அந்தக் குழுவைச் சந்திப்பதற்கு இணங்கினார்; பேசவும் செய்தார்.

ஏனெனில், கூட்டமைப்பு அனைத்துத் தரப்பின் குரல்களையும் கேட்பதாகக் காட்டிக் கொள்ள வேண்டிய தேவை இருந்தது. அந்தச் சந்திப்புகள் முடிந்து, சில நாள்களில், பல்கலைக்கழக மாணவர்களின் தமிழ்த் தேசியக் கட்சிகளுடனான கலந்துரையாடல்கள், கூட்டமைப்பினது (குறிப்பாக, தமிழரசுக் கட்சி) எதிர்காலத் திட்டமிடல்களுக்கு, மிகச்சிறந்த சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தது.

கடந்த காலத்தில், கூட்டமைப்புக்கு எதிராக, மாற்றுத் தலைமைக் கோசத்தை எழுப்பிய தரப்புகளில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர்த்து, அனைத்துத் தரப்புகளும் கூட்டமைப்பின் முடிவுகளை ஒத்த முடிவுகளைப் பிரதிபலிக்க வேண்டி வந்தது.

குறித்த ஒரு வேட்பாளரைச் சுட்டிக்காட்டி, தன்னால் வாக்களிக்குமாறு தமிழ் மக்களைக் கோர முடியாது என்று சி.வி.விக்னேஸ்வரன் கூறினாலும், தேர்தல் புறக்கணிப்புக் கோசத்தையோ, கோட்டாபய ராஜபக்ஷ ஆதரவு நிலைப்பாட்டையோ அவர் எடுக்கவில்லை.

தமிழ் மக்களின் விருப்பத்தைத் தானும் மதிப்பது மாதிரிக் காட்டிக்கொண்டு, சஜித்துக்கான ஆதரவு நிலைப்பாட்டை, மறைமுகமாக அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். சுரேஷ் பிரேமசந்திரனைப் பொறுத்தளவில், தேர்தல் பகிஷ்கரிப்புக் கோசத்தை எதிர்க்கும் அவர், ஜனாதிபதித் தேர்தலில் பெரியளவில் கருத்துக்கூறாமல், மக்களின் முடிவுகளின்படி நடக்கவே விரும்புகிறார்.





மக்களின் மனங்களை மதித்து, அவர்களை வழிநடத்த முடியாதவர்கள், அரசியலுக்கு இலாயக்கற்றவர்கள் என்கிற தோரணையிலான கருத்தொன்றை, சஜித்துக்கான ஆதரவு நிலைப்பாட்டை அறிவிக்கும் தமிழரசுக் கட்சியின் ஊடக சந்திப்பின் போது, எம்.ஏ. சுமந்திரன் வெளியிட்டார்.

கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்புப் பெற்ற ஏகநிலை வெற்றி, கூட்டமைப்புக்குத் தலைக்கனத்தைக் கொடுத்தது. என்ன கூச்சல்களைப் போட்டாலும், மாற்றுத்தலைமைக் கோசக்காரர்களால், தமிழ் மக்களைச் சென்று சேர முடியாது எனும் போக்கிலானது அது.

ஆனால், அந்தத் தலைக்கனத்தை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவு ஆட்டங்காண வைத்தது. தேர்தல் முறைக் குளறுபடிகள், வட்டார முறை என்பன தேர்தல் வாக்களிப்பிலும், முடிவுகளிலும் தாக்கத்தைச் செலுத்தினாலும், கூட்டமைப்பு மீதான அதிருப்தி என்பது, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் வெளிப்பட்டது.

அதைச், சுமந்திரன் ஊடகங்களிடம் ஏற்றுக் கொள்ளவும் செய்தார். அப்படியான நிலையில்தான், 'மைத்திரியின் ஒக்டோபர் சதிப்புரட்சி' என்கிற சம்பவம் நாட்டை அலைக்கழித்தது. அந்தச் சந்தர்ப்பத்தில், ஜனநாயகத்தைக் காப்பாற்றியதிலும், ராஜபக்ஷக்கள் ஆட்சியதிகாரத்தில் மீள அமர்வதைத் தடுத்ததிலும் கூட்டமைப்பு ஆற்றிய பங்கு, மக்களிடம் கூட்டமைப்பின் மீதான அதிருப்தியின் அளவைக் குறைத்தது.

இன்னொரு பக்கம், மாற்றுத்தலைமைக் கோசக்காரர்கள் தங்களுக்கிடையில் பிரிந்து நின்றனர். பிரிந்து நின்றது மாத்திரமல்லாமல், ஒருவரை ஒருவர் ஊடகங்களில் திட்டிக்கொள்வதில் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தார்கள்.

இந்தக் காலத்துக்குள்ளேயே, ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கான களம் விரிந்துவிட்டது. அப்போதுதான், பல்கலைக்கழக மாணவர்களின் தமிழ்த் தேசியக் கட்சிகளுடனான கலந்துரையாடல்களும், பொது இணக்கப்பாடும் கூட்டமைப்புக்கான இன்னோர் உன்னத சந்தர்ப்பமாக மாறியது.

பொது இணக்கப்பாட்டிலிருந்து முன்னணி வெளியேறிய போது, அது பெரியளவில் விமர்சிக்கப்பட்டது. பொது இணக்கப்பாட்டின் போது, முன்வைக்கப்பட்ட 13 அம்சக் கோரிக்கைகளுக்கும் தென் இலங்கை ஊடகங்கள் பெரிய முக்கியத்துவத்தைக் கொடுத்தன. ராஜபக்ஷக்களின் தேர்தல் மேடைகளில், அந்தக் கோரிக்கைகளே ஒருசில வாரங்களாகப் பேசப்பட்டன.

தென் இலங்கைத் தேர்தல் மேடைகள், 13 அம்சக் கோரிக்கைகளைப் பேசி முடிக்கவும், பெண்களுக்கான மாதவிடாய்கால சனிட்டரி நாம்கின்கள், இலவசமாக/வரிச்சலுகையோடு வழங்கப்பட வேண்டும் என்கிற சஜித்தின் வாக்குறுதியை, ராஜபக்ஷ முகாம், கேலிப்பொருளாக்கி, தேர்தல் மேடைகளில் பேச ஆரம்பித்தது.

ஆனால், அதுவே, அவர்களுக்கு எதிர்மறையாகத் திரும்பி கவனம் பெற்றது. இன்னொரு பக்கம், கோட்டாவை நேரடி விவாதத்துக்கு அழைத்து, சஜித் தேர்தல் மேடைகளை ஆக்கிரமித்தார். அத்தோடு, சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனமும் கவனம் பெற்றது. இதனால், தமிழ்த் தேசியக் கட்சிகளின் 13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தென் இலங்கையில் முன்னெடுக்கப்படவிருந்த ராஜபக்ஷக்களின் தேர்தல் வியூகம் இடையூறை சந்தித்தது.

சஜித்தை ஆதரிப்பதற்கான அறிவிப்பை வெளியிடுவதற்காக, கூட்டமைப்பின் ஒற்றை எதிர்பார்ப்பாக இருந்தது, சஜித்தின் விஞ்ஞாபனத்தில், நல்லாட்சிக் காலத்தில் வரையப்பட்ட புதிய அரசமைப்பு நிறைவேற்றப்படும் என்பதே.

இடைக்கால வரைபின் சாராம்சத்தை, சஜித்தின் விஞ்ஞாபனத்தின் ஒருபகுதி பிரதிபலித்தது. அவ்வாறான நிலையில், இனியும் சஜித்துக்கான ஆதரவைக் காலதாமதப்படுவது தேவையற்றது என்கிற நிலை உருவானது. அதுதான், தமிழரசுக் கட்சி, கூட்டமைப்பின் முடிவுகளை முன்னதாகவே, தன்னுடைய முடிவுகளாக அறிவித்திருக்கின்றது.

13 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, தேர்தல் கால வாக்குறுதிகள் சஜித்திடம் பெறப்படவில்லை என்கிற விடயம், தமிழ் மக்களிடம் கவனம் பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை. ஏனெனில், ஒரு விடயத்தை, அரசியலாக மக்கள் மயப்படுத்த வேண்டும் என்றால், அதற்காகப் படிப்படியாக உழைத்திருக்க வேண்டும். அப்படியான முயற்சிகளை, தமிழ்த் தேசிய அரசியலில் கடந்த காலங்களில் கூட்டமைப்பு மாத்திரமல்ல யாருமே செய்திருக்கவில்லை.

குறிப்பாக, கூட்டமைப்புக்கு எதிராக மாற்றுத் தலைமை உருவாக்க வேண்டும் என்று இயங்கிய தரப்புகளும் செய்திருக்கவில்லை. அப்படியான நிலையில், யதார்த்த அரசியலின் போக்கில், 'கெட்டத்தில் பாதிப்புக்குறைந்த கெட்டதை'த் தெரிவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதனை மீறிச்செல்லுமாறு, எந்தவொரு தரப்பும் கோரவும் முடியாது.


இதுவே, வேண்டாவெறுப்பாகவேனும் மக்களைக் கூட்டமைப்பின் பக்கமாகவும் நெருங்கச் செய்கிறது. ஏனெனில், தங்களின் முடிவுகளோடு இணங்கிச் செல்லும் தரப்பாக, மக்கள் கூட்டமைப்பைப் பார்க்கிறார்கள். அதுவே, கூட்டமைப்பை பெரியளவில் காப்பாற்றவும் உதவுகின்றது; அதுவே, இம்முறையும் நிகழ்ந்திருக்கின்றது.


**புருஜோத்தமன் தங்கமயில்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விருப்பு வாக்குக்களை சரியாக பாவித்தல்!







ஏன் தமிழ் அரசு கட்சியும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் சஜித்துக்கு ஆதரிக்கும் முடிவுக்கு வந்தனர், அதுவும் நிபந்தனையற்ற ஆதரவு அளிக்க முன்வந்தார்கள், இது பேரம்பேசும் சக்தியின் போதாமை அல்லவா? இதற்கு பதிலாக தமிழ் மக்களின் முடிவை எற்கின்றோம் என அறிவித்திருக்கலாமே என கேட்கும் நண்பர்கள் அடிப்படையில் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும்.

ஒட்டுமொத்த சமூகத்தை ஒரு புறம் சார்ந்து ஆதரிக்கச்செய்ய வெறுமனே மக்கள் முடிவை ஏற்கிறோம் என்ற கோஷம் காணாது. மாறாக மக்களுக்கு அறிவூட்டலும் வழிநடத்தும் கூட அரசியல் கட்சிகளின் பணியே. அந்த வகையில் ஜனநாயக நீரோட்டத்தில் எமது மக்களுக்கு குறித்த நேரத்தில் தமிழரை பெரும்பான்மையாக பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமை எந்த முடிவை ஏற்கிறது ஏற்க வேண்டுகிறது என்பது கட்சி அரசியலை தாண்டி மூலோபாய நகர்வுக்கு தேவையானது. அம்மூலோபாய செயல்பாட்டுக்கு மக்களை ஒன்றிணைப்பதும் அதன் மூலம் மக்கள் எமது கருத்தை மறுதகிக்கவில்லை என காண்பிப்பது அதே சமயம் மக்களின் மனனிலையிலேயே கட்சியும் செயல்படுகின்றது என்பதையும் காட்டுவது மிகவும் அவசியமானது.

தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்கப் போகின்றார்கள் என்பது இன்றைய மட்டில் வெளிப்படையான ஒன்றாகவே வந்துவிட்டது. தமிழ் தேசிய கூட்டமைப்பு அதிகார பூர்வமாக அறிவித்தாலும் கூட, தமிழ் மக்கள் தமது வாக்குக்கள் யாருக்கு என்பதை தீர்மானித்து விட்டார்கள் என்றே கருதலாம். ஒட்டுமொத்த தமிழர்களும் வெறுமனே சஜித்துக்கு அல்லது கோட்டாபய ராஜபக்ஷவுக்கோ வாக்களிப்பதால் குறித்த ஒரு வேட்பாளர் வெற்றிபெறுவார் என்ற நிலை இம்முறை இல்லை என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

இலங்கைத்தமிழர்களின் வாக்கு தொடர்ச்சியாகவே ஜனாதிபதி தேர்தலில் மிகவும் செல்வாக்கு செலுத்தியது செலுத்தவேண்டிய ஒன்று. அனால், அவ்வாக்கு எவ்வாறாக தாக்கம் செலுத்தவேண்டும் என்பதை நாம் புரிதல் அவசியம்.

இம்முறை ஜனாதிபதி தேர்தலில் விருப்பு வாக்குக்கான சீட்டுகள் வழங்கப்படும் என எண்ணப்படுகிறது. அவ்வாறாயின் நாங்கள் ஒருவருக்கு மட்டும் வாக்களித்தலால் ஒரு ஜனாதிபதி தேர்ந்தெடுப்பதை தீர்மானிக்க முடியாது. இதன் விளக்கம் என்னவெனில், விருப்பு வாக்கு *1, 2, 3* என்று இருக்கும் போது வெறுமனே ஒருவருக்கு மட்டும் நாங்கள் வாக்களிப்போம் ஆயின், எமது வாக்கு 2ம் 3ம் வாக்கு எண்ணிக்கையில் சேர்க்கப்படமாட்டாது.

அவ்வாறாயின் என்ன செய்ய வேண்டும்?

முதலாவதாக தமிழர்கள் நாங்கள் யாருக்கு வாக்களித்தல் எமது இருப்பு, பாதுகாப்பு, மனித உரிமைகள், உண்மைகளை கண்டறிதல், நிலையான அபிவிருத்தி என்பவருக்கு இட்டுச்செல்லுமோ அவருக்கு உங்கள் முதலாவது விருப்பு வாக்கை செலுத்துங்கள்.

இப்போது நீங்கள் ஒரு வேட்ப்பாளரை தெரிவு செய்து விட்டீர்கள்.

இப்போது உங்களுக்கு இருக்கும் இரண்டாவது பணி, மற்றய வேட்பாளரை வெல்லவிடாது தடுத்தல் ஆகும். அதற்கு உங்கள் இரண்டாம் மூன்றாம் தெரிவை பயன்படுத்துங்கள்.


உங்கள் இரண்டாம் மூன்றாம் தெரிவில், எந்த வேட்ப்பாளர் வரக்கூடாது என்று நினைக்கின்றீர்களா அவரை தவிர வேறேதும் ஒரு வேட்பாளருக்கு (உதாரணத்துக்கு அது தமிழ் வேட்பாளராக இருக்கலாம், அல்லது ஜேவிபி வேட்பாளராக இருக்கலாம்) உங்கள் வாக்கை அளியுங்கள். அதன் மூலமாக நீங்கள் விரும்பாத வேட்பாளருக்கு வாக்குகள் செல்வதை தடுக்கலாம்.

யார் உங்களை தவறாக வழிநடத்த முனைந்தாலும், தயவு செய்து உங்கள் இரண்டாம் மூன்றாம் விருப்பு வாக்குக்களை சரியாக பாவியுங்கள். அதன் மூலம் நாம் மீண்டும் ஒரு முறை, ஜனாதிபதி தேர்தலின் தீர்மானிக்கும் சக்தியாக உருமாறுவோம்.

**ஜனகன் முத்துக்குமரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘மாவீரர் துயிலும் இல்லம்’ பிறந்த கதை



இந்திய இராணுவத்துடன் நாங்கள் நடத்திய போரில் எந்த இடத்தில் எங்கள் தோழர்கள் விழுந்தார்களோ அவர்களை அங்கேயே புதைத்து கல்லறை எழுப்பியிருக்கிறோம்.

போர்க்காலத்தில் அவர்களின் வித்துடல்களை பெற்றவர்களிடமோ அல்லது உறவினர்களிடமோ ஒப்படைக்க முடியாமல் போனதால் இந்த ஏற்பாடு இல்லை.மறைந்த எங்கள் மாவீரர்களின் விருப்பமும் இதுவேயாகும்.

அதை நாங்கள் நிறைவேற்றி வைக்கிறோம். மணலாற்றுக்காட்டுக்குள் எதிரியை எதிர்த்துப் போராடி வீரமரணம் அடைந்த எம் தோழர்கள் இந்தக்காட்டுக்குள்ளே தாங்கள் புதைக்கப் படவேண்டும் என்று விரும்பினார்கள்.

இந்திய இராணுவத்தை எதிர்த்து நாங்கள் நடத்திய நீண்டகாலப் போரில் எங்களுக்கு அடைக்கலம் தந்த இந்தக்காட்டினை நாங்கள் நேசிக்கிறோம்.இந்தக்காடே எங்களுக்கு வீடாகிவிட்டது. இந்தக்காட்டின் மரங்களும், சுனைகளும், இங்கு பறக்கும் பறவைகளும், ஓடித்திரியும் மிருகங்களும்கூட எங்களின் இணைபிரியாத அங்கங்கள் ஆகிவிட்டன.

எனவேதான், எங்கள் தோழர்கள் எந்தக்காடு எங்களுக்கு அடைக்கலம் தந்து காப்பாற்றியதோ, எந்தக்காட்டில் எதிரியுடன் போரிட்டு வீரத்தை நிலைநிறுத்தினோமோ அந்தக்காட்டிலேதான் எங்களைப் புதைக்கவேண்டும் என்று அவர்கள் விரும்பியதில் வியப்பு ஏதுமில்லை.

ஏனென்றால் எங்கள் போராட்ட வாழ்வோடு இந்தக்காடு இரண்டறக் கலந்துவிட்டது.மணலாற்றுக் காட்டுக்குள் தங்கியிருந்து போராடிய புலிகள் தாங்கள் எங்கே சென்று போராடி வீரமரணம் அடைந்தாலும் தங்கள் உடல்களை மணலாற்று காடுகளில்தான் புதைக்கவேண்டுமென்று எழுத்துமூலமாகவும் வாய்மூலமாகவும் எனக்கு வேண்டுகோள் விடுத்தார்கள். அதன் காரணமாகத்தான் அவர்களின் கல்லறைகளை இங்கேயே அமைத்திருக்கிறோம்.

தமிழீழ தேசியத் தலைவர்
மேதகு வே பிரபாகரன்.

மணலாற்றுக்காட்டில் மேற்கொண்ட இந்த முடிவினை தமிழீழமெங்கும் நிறைவேற்றும்படி தேசியத்தலைவர் தளபதிகளுக்கும்,போராளிகளுக்கும் கட்டளையிட்டார்.

மாவீரர்களின் நினைவை என்றைக்கும் எமது மக்கள் நினைவுபடுத்திக்கொண்டிருக்கும் வகையில் கல்லறைகள் அமைக்கப்படவேண்டுமென தலைவர் விரும்பினார்.

அதன்படியே தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் நாட்டிலும், காட்டிலும் கல்லறைகள் அமைக்கப்பட்டன. அவற்றுக்கு “மாவீரர் துயிலும் இல்லம்” என பெயரிடப்பட்டது.

தாயக விடுதலைக்காக தங்கள் உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களை அவர்களின் பெற்றோரும், உறவினர்களும் மக்களும் நினைத்துப்பார்த்து ஆறுதல் அடைவதோடு மட்டுமல்லாமல் தமிழீழ மக்களுக்கு அவர்களின் மகத்தான தியாகத்தை நினைவூட்ட இந்த நினைவிடங்கள் உதவுகின்றன.

சிலநேரங்களில் களத்தில் வீரமரணமடையும் புலிவீரர்களின் இறுதி நிகழ்ச்சிகளின்பொழுது அவர்களுடைய பெற்றோரோ அல்லது உடன் பிறந்தவர்களோ அருகில் இல்லாத சூழ்நிலைகள் நிறையவே ஏற்படுவதுண்டு. என்னதான் தோழர்கள் சூழ்ந்துநின்று இறுதி நிகழ்ச்சிகளை நடத்தினாலும்கூட, அந்த மாவீரர்களைப் பெற்றெடுத்துச் சீராட்டிய அவர்களது தாய் தந்தையர்களோ அல்லது உடன் பிறந்தவர்களோ அந்த நேரத்தில் இல்லாதிருப்பது நிச்சயமாக எல்லோருடைய உள்ளங்களையும் நெருடும் என்பதில் ஐயமில்லை. போராட்டத்தின் இறுக்கமான சூழ்நிலை காரணமாக அவர்கள் வரமுடியாது போய்விட்டாலும் நாம் இப்பெற்றோர்களுக்கு அவர்களின் பிள்ளைகளின் நினைவாக எதைக்காட்டுவது? ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கணக்கான புலிகளைத் தகனம் செய்த சாம்பல் மேட்டையா காட்டுவது? அத்தகைய சூழ்நிலையில் அவர்கள் படும் எல்லையில்லாத துயரத்தையும் அங்கலாய்ப்பையும் வர்ணிக்க வார்த்தைகளே இல்லை. எனவேதான் தாங்கள் பெற்றெடுத்த வீரப்புதல்வர்கள், புதல்விகள் ஆகியோரின் உடல்களைப் பார்க்க முடியாது போய்விட்டாலும், அவர்கள் புதைக்கப்பட்ட கல்லறையைப் பார்த்து பெற்றோரும் உற்றோரும் ஓரளவாவது ஆறுதல் அடைய மாவீரர் துயிலும் இல்லங்கள் அமையப் பெற்றுள்ளது.

புலிகளின் கல்லறைகள் மக்களின் உள்ளத்தில் விடுதலைச்சுடரைப் பற்றவைக்கும் தீபங்களாகத் திகழும்.

“மாவீரர் துயிலும் இல்லங்கள்” வெறும் நினைவுச்சின்னங்கள் மட்டுமல்ல தமிழீழ விடுதலைப் போராட்டத்தை என்றென்றும் உயிர்ப்புடன் வைத்திருக்கும் ஒரு தியாகவரலாற்றின் சின்னமுமாகும்.

எமது தாய்நிலத்தில் இன்று அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களும் சிங்கள அரச பயங்கரவாதத்தால் உடைத்து அழிக்கப்பட்டபோதும் மாவீரர்களின் பெற்றோரும் உறவினர்களும் தமிழீழ மக்களும் ஒவ்வொரு வருடமும் கார்த்திகை 27 இல் அவ்விடங்களில் ஒன்றுகூடி விளக்கேற்றியே வருகின்றனர்.

அதேபோன்று புலம்பெயர் நாடுகளிலும் கார்த்திகை 27 இல் மக்கள் பெருமளவாக ஒன்றுகூடி மாவீரர்களை நினைந்துருகி விளக்கேற்றியே வருகின்றனர்.

இதில் ஒரு திருப்பமாக பிரித்தானியாவில் மட்டும் பெரும் நிலப்பரப்பு ஒன்றை சொந்தமாகவே கொள்வனவு செய்து அதில் மாவீரர் நினைவுக்கல்லறைகள் வைக்கப்பட்டு மாவீரர் பெற்றோர் உறவுகளுடன் பெருமளவான போராளிகளும், தமிழ் மக்களும் ஒன்றுகூடி விளக்கேற்றி வருவதானது தமிழீழ விடுதலை நோக்கிய போராட்டத்தை என்றும் உயிர்ப்புடன் வைத்திருக்கும் ஒரு அடையாளமாகவே பதிவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




For more info, Please call

# 416-450-6833

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளைமத்தோன் யாழ்ப்பாணம் 2019







புதிய வெளிச்சத்தினால் ஆரம்பித்துவைக்கப்பட்ட இயற்கை வழி இயக்கத்தினால் (OMNE (Organic Movement of North and East)) முன்னெடுக்கப்படும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள இளையோர் அணிதிரளும் பெருநிகழ்வு "கிளைமத்தோன் யாழ்ப்பாணம் 2019 ஒக்டோபர் 24, 26 திகதிகளில் நடைபெற்றது

காலநிலை மாற்றம் தொடர்பிலான அபாயச் சுட்டியில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது என்ற தகவல் கிடைத்த கணத்தில் இயற்கை வழி இயக்கம் அதற்கான தீர்வை தேடும் முயற்சியில் இறங்கியிருந்தது. அந்தவகையில் சர்வதேச ரீதியாக காலநிலை மாற்றம் சார்ந்து தீர்வுகளை முன்வைப்பதற்காக நிகழ்ந்துவரும் கிளாமத்தோன் (Climathon - Climate Hackathon) நிகழ்வில் எம்மையும் இணைத்துக்கொள்ள தீர்மானித்தது. அந்தவகையில் நகரங்களை முன்வைத்து கடந்த சில வருடங்களாக நடந்துவரும் இந்த காலநிலை மாற்றம் தொடர்பிலான நிகழ்வில் 129ஆவது நகரமாக, தெக்காசியாவில் ஐந்தாவது நகரமாக,இலங்கையில் முதலாவது நகரமாக யாழ்ப்பாணமும் இந்த ஆண்டு இணைந்துகொண்டது.

நிகழ்வில் 21 தனிநபர் மற்றும் குழுக்கள் காலநிலை மாற்றம் தொடர்பில் தீர்வுகளை முன்வைத்து தமது விளக்கங்களை நடுவர்கள் முன்னிலையில் சமர்பித்திருந்தார்கள். ஏழு நடுவர்களை கொண்ட குழு முன்வைக்கப்பட்ட தீர்வுகளை ஆராய்ந்து இயற்கை வழியில் நெல் உற்பதியை முன்னெடுப்பதன் ஊடாக



காலநிலை மாற்றத்தை எவ்வாறு வெற்றிகொள்ளலாம் என்பது தொடர்பிலான தீர்வை முன்வைத்த காரை இளம் விவசாயிகளை சிறந்த தீர்வை முன்வைத்த குழுவாக தெரிவுசெய்திருந்தார்கள்.

காரை இளம் விவசாயிகள் காரைநகரில் வெவ்வேறு நபர்களை ஒன்றிணைத்து அவர்களது காணிகளில் இயற்கை முறையில் காரைநகருக்கே உரிய பாரம்பரிய நெல்லினத்தை விளைவித்து சிறந்த அறுவடையை பெற்றிருந்தார்கள், அவ்வாறு பரீட்ச்சார்த்த முறையில் தாங்கள் செய்து வெற்றிகண்ட வழியினை ஒருதீர்வுத்திட்டமாக முன்வைத்து ஒரு சிறந்த வழிமுறையாக அனைத்து நடுவார்களாலும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. இந்த நெற்செய்கை முறை காரைநகரில் அனைத்து காணிகளிலும் நடைறைப்படுத்தி பின்னர் நீண்டகால



அடிப்படையில் யாழ்குடாநாட்டிலும் முன்னெடுக்க காரை இளம் விவசாயிகள் திட்டமிட்டுள்ளார்கள்.

காலநிலை மாற்றம் தொடர்பிலான தீர்வுத்திட்டங்களை முன்வைக்கும் இந்த கிளமத்தோன் நிகழ்வின் வெற்றிகளில் முக்கியமான ஒன்றாக இயற்கை வழி இயக்கம் கருதுவது, இளையோரை இந்த நிகழ்வை முன்வைத்து ஒன்றிணைத்ததை. பல்வேறு பிரதேசங்களிலும் இயங்கிவந்த இளையோர் சார்ந்த குழுக்கள் இந்த கிளமத்தோன் நிகழ்வில் இணைந்து செயற்பட்டிருந்தார்கள். வடமராட்சி பிரதேசத்தை மையப்படுத்தி இயங்கிவரும் 'பசுமைச் சுவடுகள்' அமைப்பு, சாவகச்சேரியை மையப்படுத்தி இயங்கிவரும் 'பசுமை நிழல்கள்' அமைப்பு, காரைநகரில் இயங்கும் 'காரை இளம் விவசாயிகள்' அமைப்பு, நாடுபூராகவும் பல்வேறு தளங்களிலும் இயங்கிவரும் 'சிறகுகள்' அமைப்பு, நெகிழிப்பாவனையை முற்றாக ஒழிக்கவேண்டும் என்று இயங்கிவரும் 'Plastic Zero Forum' அமைப்பு என்பவற்றோடு 'வல்லமை', 'ஔடதம்' ஆகிய அமைப்புக்கழும் இந்த நிகழ்வுகளில் தம்மை முழுவதுமாக இணைத்துக்கொண்டு இயக்கியிருந்தார். முக்கியமாக 'சிறகுகள்' அமைப்பினர் பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப்போட்டிகள், கட்டுரைப்போட்டிகள் என்பவற்றை முன்னெடுத்திருந்தார்கள். காலநிலை



மாற்றம் தொடர்பிலான புகைப்படங்களை சேகரித்து காட்சிப்படுத்தியிருந்தார்கள். மேலதிகமாக 'பூவன் மீடியா', 'ஊறுகாய் மீடியா' என்பவையும் கிளமத்தோன் நிகழ்வில் தங்களது பங்களிப்பை செய்திருந்தார்கள். இறுதிநாள் பண்பாட்டு மலர்ச்சிக்கு கூடத்தினர் அரங்க நிகழ்வு ஒன்றை சிறப்புறநடத்திசிலநிமிட நேரத்தில்பார்வையாளர்கள் அனைவரையும் உணர்ச்சிப்பூர்வமாக நிகழ்வோடு ஒன்றிப்போக வைத்திருந்தார்கள்.

புதிய வெளிச்சம் என்ற தொனிப்பொருளில் 2018ஆம் ஆண்டு தைமாதம் நடைபெற்றிருந்த பயிற்சிப்பட்டறைகளின் பின்னர் எவ்வாறு இயற்கை வழி இயக்கம் உருவாகியிருந்ததோ அதன் நீட்சியாக இன்று இயற்கை வழி இயக்கம் இந்த காலநிலை மாற்றம் தொடர்பான நிகழ்வினை முன்னெடுத்து பல புதிய வெளிச்சங்களை தோற்றுவித்துள்ளது, இனம் கண்டுள்ளது. இதன் நீட்சியாக இன்னும் பல புதிய வெளிச்சங்கள் எம் தேசமெங்கும் ஒளிரும்.

**Climathon Jaffna - காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளல் தொடர்பான சர்வதேச நிகழ்வு 24,25,26**

**தந்தை செல்வா கலையரங்கம்**

- மாணவர்களுக்கான சித்திரப் போட்டி
- சித்திர கண்காட்சி
- புகைப்பட கண்காட்சி
- துறை சார் வல்லுநர் கருத்துரை (24/10 மாலை 3.00 மணி)
- சூழலியல் அமைப்புக்களின் காட்சி கூடம்
- பரிசில் வழங்கல் நிகழ்வு (25.10 மாலை 3.00 மணி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் தோழன் JK

தமிழ் மக்களின் நண்பன் jim karygiannis ரொரன்ரோ மாநகரத்தின் ஸ்காபரோஎஜின்கோர்ட் வட்டார கவுன்சிலர் பதிவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக, ரொரன்ரோ மாநகர (city Clerk) அதிகாரி தெரிவித்துள்ளார். தேர்தலின் போது அங்கீகரிக்கப்பட்ட தொகையை விட அதிக தொகையை செலவு செய்ததாக குற்றஞ் சாட்டியே இவர் பதிவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இவர் சமர்ப்பித்த வரவுசெலவு அறிக்கையின் பிரகாரமே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அறிக்கையில் தவறு உள்ளது என கவுன்சிலர் தெரிவித்துள்ளார்.

Karygiannis told the Star he would fight his ouster when reached by phone Wednesday.

"There was a clerical error that was a mistake," he said. "Something was filed in the wrong column and we're fighting it and there's going to be a statement that we'll be sending out."

ஒன்றினைக்கப்பட்ட 22ம் வட்டாரத்தில் கடந்த வருடம் நடைபெற்ற தேர்தலில் நோம் ஹெலியை தோற்கடித்து கவுன்சிலரானார். இவர் பெற்ற வாக்குகள் 12593. 2014ல் இதே வட்டாரத்தில் 58 வீதமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார். 1980 களிலிருந்துலிபரல்கட்சி அரசியலில்ஈடுபட்டுவந்துள்ளார். ஒன்ராரியோ மாநிலவைக்கு போட்டியிட்டு தோல்வி யடைந்ததையடுத்து, இதற்கு அடுத்த ஆண்டு 1988ல் புதிதாக உருவாக்கப்பட்ட ஸ்காபரோஎஜின்கோர்ட் தொகுதியில் போட்டியிட்டு பாராளுமன்றம் சென்றார். அதன் பின்னர் மத்திய அரசியிலிருந்து விலகும் வரை தொடர்ச்சியாக வெற்றி பெற்றார். லிபரல் கட்சியின் தலைவர் பதவிக்கும் போட்டியிட்டார்.

2004ம் ஆண்டு கனடிய பாராளுமன்றத்தில் ஒரு தனிநபர் மசோதாவை முன்வைத்தார். 1915 1923 காலப்பகுதியில் 1.5 மில்லியன் ஆமேனியர்கள் கொல்லப்பட்டனர். இது இன அழிப்பு என்பது இவரது மசோதா. இதனை பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது. ஆனாலும் அப்போதைய பிரதமர் போல் மார்ட்டின் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. துருக்கிய தூதரம் தனது கடுமையான எதிர்ப்பை முன்வைத்தது.

2004 சுனாமியை அடுத்து, இவர் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். இவர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களுக்கு விஜயம் செய்தார் என்ற குற்றச்சாட்டை, சில பா.உக்கள், பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்தனர். வெள்ளம் மற்றும் சூறாவளி அழிவுகளுக்கு முன்நின்று உதவிகள் புரிந்துள்ளார். கயானா மற்றும் நியு ஓலியன்ஸ் இவற்றிற்கு சிறந்த உதாரணங்களாகும்.

இவர் அதென்ஸ்ல் பிறந்த கிரேக்க வம்சாவளி. இதனால் மசடோனியாவின் உதயத்தை எதிர்த்தார். ஆனாலும்இவர் ஒடுக்கப்பட்ட தேசியங்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்து வந்துள்ளார். ரொரன்ரோ மாநகர சபையில் கிறீக் இனஅழிப்பை கண்டித்தும் மசோதா ஒன்று கொண்டுவந்திருந்தார். 1914-1922 காலப்பகுதியில் ஒட்டமான் சாம்ராச்சியத்தாலும், துருக்கிய அரசினாலும் சுமார் 350000 பேர் கொல்லப்பட்டனர். இதனை Pontian genocide' எனவும் குறிப்பிடுவார்கள்.

தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்கு எதிராக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வருகின்றார். கனடிய தமிழ் மக்களுக்கு பல வழிகளிலும் உதவியும் புரிந்துள்ளார். தமிழ் மக்களின் நிகழ்வுகளில் இவரைக் காணலாம். எளிமையான தோற்றம் கொண்ட இவர், பழகுவதற்கு இனிய நண்பர்.



இவருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களும் உள்ளன. ஒரு பாலியலாளர்களுக்கு எதிரானவர். கருக்கலைப்பின் கடுமையான விமர்சகர். The Hill Times என்ற பத்திரிகை 2002ம் ஆண்டு நடாத்திய ஒரு ஆய்வில், அப்போதைய கனடிய பாராளுமன்றத்தில் மிகவும் சோம்பலான பா.உ ஆக இவரை தேர்வு செய்தது. in 2002, Karygiannis was voted "laziest MP" in a poll of Parliamentary staffers by The Hill Times..

இவர் Co-Op Cab company நிர்வாக இயக்குனரின் நெருங்கிய நண்பர். இதனால் Uber கடுமையாக எதிர்த்தார். ரக்சி நிறுவனங்கள் இவருக்கு பணத்தை நன்கொடையாக வழங்கியுள்ளன என்ற குற்றச்சாட்டும் இவர் மீது வைக்கப்பட்டிருந்தது.

எது எப்படியிருப்பினும் எமது நண்பனை நாம் இழந்துள்ளோம். அவர் மீண்டும் ரொரன்ரோ மாநகரசபையின் கவுன்சிலாராவர் என்ற நம்பிக்கை எமக்குண்டு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளர்ந்துபோகும் ஐரோப்பிய கட்டமைப்பு

ஐரோப்பிய ஒன்றிய கட்டமைப்பு வெகுவாகவே தளர்ச்சிப்போக்கை காட்டத் தொடங்கியுள்ளது. பிரான்ஸ், ஜேர்மனியின் அதிகரித்துவரும் அதிகார, கொள்கை முரண்பாடுகள் மற்றும் தலைமைத்துவ சமரசங்களால் ஒவ்வொரு முறையும் முரண்பாடுகளைக் களைய முற்படுத்தல், ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைத்து நிற்கும் பிடிமானத்தை தளரச்செய்கின்றது. ஐரோப்பிய வெளிவிவகாரக் கொள்கை அண்மைக்காலங்களில் பெருகிய முறையில் பகுதியளவு மற்றும் துண்டு துண்டாகி வருகிறது. மேலும் பல புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது ஐரோப்பிய ஒன்றியத்தை நிர்வகிப்பதில் புதுச்சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளது. மேலும், ஐரோப்பிய ஒன்றியத்தினுள்ளேயே ஒரு ஒருங்கிணைந்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு ஒருமித்த கருத்தை எட்டுவது இங்கு மிகவும் கடினமான ஒன்றாக உள்ளது.

ஐரோப்பிய ஊடகங்களின் அறிக்கையின்படி, பல ஐரோப்பிய கொள்கைவாதிகள், ஐரோப்பிய ஒன்றியம் 28 உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியக் குழுவின் ஆளும் குழுக்களுக்கு பிரிக்கப்பட்ட அதிகாரத்துவசெயற்பாடுகளைவழங்கத்தயாராகஇல்லை என கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்த எதிர்மறைக் கருத்து அண்மையில் நடந்த தேசிய தேர்தல்களால் மிகவும் வெளிப்படையாக காட்டப்பட்டதுடன், இது ஐரோப்பிய உரையாடலை மீட்டெடுப்பதற்கான புறநிலை தேவையை உணர்கிறது. உள்ளிருந்து, ஐரோப்பிய ஒற்றுமையின் அடிப்படை அடித்தளங்கள் தேசிய கொள்கைகளை ஆதரிப்பவர்களால் தொடர்ந்து தாக்கப்படுகின்றன. ஜேர்மனி, பிரான்ஸ், ஸ்பெய்ன் மற்றும் பால்டிக் நாடுகள் உட்பட தாராளமய மதிப்புகளை முறையாக ஏற்றுக்கொள்ளும் நாடுகள் கூட ஐரோப்பிய திட்டத்தின் எதிர்காலம் குறித்து உடன்படவில்லை. இவ்வாண்டு ஓகஸ்ட் மாதம் இத்தாலியில் கூட்டணி அரசாங்கத்தின் சரிவு, ஜேர்மனியில் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றாம் இடத்தைப் பிடித்த ஜேர்மனி கட்சிக்கான தீவிர வலதுசாரி மாற்றுஎன்பன வாக்காளர்கள் பலரின் விதிமுறைகளையும் நிறுவனங்களையும் மாற்றுவதற்கான அடிப்படை விருப்பத்தை பிரதிபலிக்கிறது என்றேகருதப்பட வேண்டிய தேவை உள்ளது.

ஐரோப்பிய வடக்கு மற்றும் தெற்கை பொருளாதார ரீதியாக பிரிக்கும் ஒரு பிளவு கோடு இன்றைய காலப்பகுதியில் மிகவும் வெளிப்படையாகவே காணப்படுகின்றது. மேலும் கிழக்கு மற்றும் மேற்கு ஐரோப்பா இடையே இயங்கும் ஒரு மனிதாபிமான, சுற்றுச்சூழல் மற்றும் கருத்தியல், ஐக்கிய அமெரிக்க விரோதத்தின் வளர்ந்து வரும் அறிகுறிகளுடன் இணைந்து, கண்டத்தின் எதிர்காலம் குறித்து ஐரோப்பிய



நாடாளுமன்றம் கடுமையாகபிளவுபட வழிவகுத்திருந்தது. குறிப்பாக, பிரான்ஸ், றோமானியா மற்றும் ஹங்கேரி ஆகியவை ஐரோப்பிய ஆணையர்களுக்கான வேட்பாளர்களை நிராகரித்த பின்னர், குறித்த அதிகார பிரச்சினைக்கான இக்குழப்பம் உச்சக்கட்டத்தை எட்டியது. இதன் விளைவாக, புதிய தோற்றமுடைய ஐரோப்பிய ஆணையம் முதலில் திட்டமிட்டபடி கடந்த வெள்ளிக்கிழமைக்குப் பதிலாக அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்பே தனது செயற்பாடுகளை தொடங்க வழிவகுத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் புதுப்புது பிரச்சினைகள் மற்றும் சவால்களை எதிர்கொண்டாலும், குறித்த பிரச்சினைகளை பிளவுபட்டு இருக்கும் ஒன்றியத்தால் தீர்க்க முடியவில்லை. வெளியில் இருந்து, சீனாவும், ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பா மீது அழுத்தத்தை அதிகரித்து வருகின்றன, இது ரஷ்யாவுடன் ஆக்கபூர்வமான ஸ்தாபனத்துக்கு இருத்தலியல் கேள்விகளை புறநிலையாக எழுப்புகின்றன. ஐரோப்பிய ஒன்றியம் என்ன போக்கை எடுக்க வேண்டும்? மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் “குறுகிய வரையறுக்கப்பட்ட பார்வை” “பரந்த ஐரோப்பிய” யோசனைகளை குறைத்து, உண்மையான அரசியலை “தந்திரோபாய நடைமுறைவாதத்தின்” நிலைக்கு கொண்டு வருகின்றது. ஐரோப்பிய ஒன்றியம் ஒரு சுதந்திரமான நாடுகளின் கூட்டமைப்பாக மாற்றப்பட்டு, ஒரு பொதுவான சுதந்திரவர்த்தக மண்டலமாக ஒன்றிணைக்கப்படுகின்றமைக்கு தொடர்ச்சியான எதிர்ப்பு இருக்கின்றமை, உலக அரசியலில் ஐரோப்பிய ஒன்றியம் என்ன வகையான பங்கை வகிக்க முடியும் என்ற கேள்விக்கு விடை பகர்வதாக இல்லை.

இந்நிலையில், ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகியவை ஐரோப்பிய ஒன்றிய கூட்டாட்சி மயமாக்கலை நோக்கி நகர்கின்றன. இந்த மூலோபாயம் முதன்மையாக

> ஐரோப்பிய ஒன்றியம் புதுப்புது பிரச்சினைகள் மற்றும் சவால்களை எதிர்கொண்டாலும், குறித்த பிரச்சினைகளை பிளவுபட்டு இருக்கும் ஒன்றியத்தால் தீர்க்க முடியவில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றைச் சந்தையை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டது என்பதுடன் இறுதியில் அரசியல் முடிவுகளை செயல்படுத்துவதில் கருவியாக மாறும் என்பதே இவ்விரண்டு நாடுகளினது எதிர்பார்ப்பாகும். எடுத்துக்காட்டாக, ஐரோப்பிய ஆணையத்தின் தலைவருக்கான வேட்பாளரின் கோடைகாலத் தேர்தல் பல தசாப்தங்களாக பழமையான நடைமுறையிலிருந்து ஒரு இடைவெளியைக் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மறுமுனையில், இன்றைய நிலை, பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு வெளியேற அதிக வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இது பிரான்ஸுக்கும், ஜேர்மனிக்கும் ஐரோப்பிய ஒன்றிய தலைவர்களாக தங்கள் பங்குகளை வகிப்பதில் உடன்பட வாய்ப்பளிக்கிறது.

எவ்வாறாயினும், பிரான்ஸ்ஜேர்மனி முரண்பாடுகள் பெருகிய முறையில் அவற்றின் தலைமைத்துவத்தை பிளவுபடவே செய்கின்றது.

பிரான்ஸும், ஜேர்மனியும் பிரித்தானியாவுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுவதற்கு ஒரு புதிய உடன்படிக்கையை வழங்குவதில் சில முரண்பாடுகளை தமக்கிடையே பேணுகின்றன.

தவிர, அனைத்துஐரோப்பியஒன்றிய உறுப்பினர்களின் ஒருமித்த முடிவும் இல்லாமல் பயன்படுத்தக்கூடிய ஒரு உண்மையான இராணுவ சக்தியாக பிரான்ஸ் தன்னை வடிவமைத்து, ஒரு ஐரோப்பிய இராணுவமாக தன்னை கட்டமைக்க முற்படுகின்றது. ஜேர்மனி, அதன் பங்குக்கு, முயற்சிகளின் ஒருங்கிணைப்பை மய்யமாகக் கொண்ட ஒரு உருவமற்ற கட்டமைப்பாக இதைப் பார்க்கிறது.

ஐரோப்பா பகுதிக்குள் மேலும் ஐரோப்பிய நாடுகளை ஒருங்கிணைப்பதைபிரான்ஸ் ஆதரிக்கின்றஅதேநேரத்தில் ஐரோப்பாவின் நிதி மற்றும் பொருளாதார நெருக்கடியை தவிர்ப்பதற்காக ஜேர்மனி குறித்த பிரான்ஸின் நிலையை விரும்பவில்லை.

ஐரோப்பாவுக்குள் கூடுதல் புவிசார் அரசியல் செல்வாக்கைப் பெறுவதற்கான விருப்பமாக உலக சக்தியாக தனது பங்கை மீண்டும் பெறுவதற்கான பிரான்ஸின் முயற்சியை ஜேர்மனி தனக்கான போட்டியாகவேகருதுகின்றது.மேலும்,ஜேர்மனி,வளர்ந்து வரும் உள்நாட்டு கொள்கை சிக்கல்களுக்கும் புதிய வெளிப்புற சவால்களுக்கு உறுதியான பதிலை நிரூபிக்க வேண்டிய தேவைக்கும் இடையில் தனது வெளிவிவகார கொள்கையை திட்டமிடுவதில் முன்னெச்சரிக்கையாய் இருப்பது, இரண்டு தலைமைத்துவ நாடுகளுக்கும் இடையில் விரிசலை ஏற்படுத்துகின்றது.

இந்நிலைமைகள், ஒட்டுமொத்தமாக, ஒரு கொள்கை அல்லது கொள்கை நடைமுறைப்படுத்தலில், ஒரு ஐக்கியப்பட்ட ஐரோப்பிய உடன்பாடுகளை எட்டவோ அல்லது, குறிப்பாக உலகளாவிய விவகாரங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்க முடியும் என்பதை உறுதிசெய்யும் அளவுக்கான சக்தியும் தலைமைத்துவமும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இல்லை என்பதையே இப்போதைக்கு எமக்கு வெளிப்படையாக காட்டுவதாய் உள்ளது.

**- ஜனகன் முத்துக்குமார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Want to Double Your Money by Investing in Real Estate Call Me

# Find Your Lifestyle Collection with navajeevan.ca

Please Call us For Other Non-Advertised Home & Investment Opportunities

**Ajax Westney Rd S & Ritchie Ave**




**Twnhouse ,Bedrooms:3**
**Washrooms:2**

**Ajax Pickering Beach / Bayly**




**Bedrooms:3**
**Washrooms:2**

**Pickering Brock And Major Oaks**




**Bedrooms:3**
**Washrooms:3**

**Pickering Taunton And Brock**




**Bedrooms:4**
**Washrooms:3**

**Brampton Sandwalwood & Bramlea**




**Bedrooms:4 Washrooms:3**

**Brampton Kenned Rd N & Bovaird Dr E**




**Bedrooms:3 + 2**
**Washrooms:2**

**Mississauga**




**Bedrooms:3 + 1**
**Washrooms:4**

**Mississauga**




**Bedrooms:3**
**Washrooms:4**

**Mississauga**




**Bedrooms:4 Washrooms:4**

**Markham**




**Bedrooms:3 + 1 Washrooms:3**

## Buy, Sell, Invest and Rent Out - Let Your Money Grow

**Buying and Selling Home**
I will guide you to make the right choices!!

**Hot Investments in Condo**
Get Priority Access to the Best Investment condos before the public launch

**Rent Out**
Help you find the tenant for your investment property

**Move-in Now**
Choose from more than 70 New condos ready to move into now stay on top of upcoming New Condo & Townhome launches

*"Real estate investing, even on a very small scale, remains a tried and true means of building an individual's cash flow and wealth."*
***Robert Kiyosaki***

Navajeevan.ca
Sales Representative Anantharaj
416 272 8543
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
anavajeevan@gmail.com
416 287 2222 416 282 4488
203-1265 Morningside Ave, Scarborough, ON M1B 3V9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Find Your Lease Home

Please Call us For Other Non-Advertised Home & Basement Opportunities

**Finch/Warden**




"Basement - Bedrooms:2 Washrooms:1, 1 Parking Space"

**Warden/Steeles**




House - Bedroom 4+1 Washrooms:3, Basement: Finished

**Gerrard St E/S On Norwood Rd**




Basemnet - Bedrooms: 1 Washrooms:1

**Warden Ave & Lawrence Ave E**




House - Bedrooms:2 Washrooms:1

**Kennedy & Eglinton**




House -Bedrooms:2 Washrooms:1

**Morningside/Old Finch**




House-Bedrooms:2 Washrooms:1

**Markham / Eglinton**




House-Bedrooms: 2 + 1 Washrooms:1

**Sheppard/Rouge River**




Basement -Bedrooms:1 Washrooms:1

**Seasons/ Steeles**




Basement -Bedrooms:2 Washrooms:1

**Staines Rd & Steeles**




Basement :Bedrooms:2 Washrooms:1

**Old Finch / Morningside**




House-Bedrooms:4 Washrooms:3

**Morrish And Ellesmere**




House- Bedrooms: 4 + 2 Washrooms:4

**Midland Ave/Lawrence Ave**




House- Bedrooms:3 Washrooms:1

**Markham Rd/ Finch Ave**




House- Bedrooms:3 Washrooms:1

**Sheppard And Meadowvale**




House- Bedrooms:3 Washrooms:3

**Mccowan/Steeles**




House - Bedrooms:3 + 2 Washrooms:4

**Whites Rd / Finch Ave**




Bacement - Bedrooms:1 Washrooms:1

**Altona / Kingston Rd**




House - Bedrooms:2 Washrooms:1

**Whites Road-Taunton**




House - Bedrooms:3 Washrooms:3

**Taunton And Burkholder Dr**




House - Bedrooms:4 Washrooms:3

**Brock Rd & Major Oaks Rd**




House- Bedrooms:4 Washrooms:4

**Taunton/ Burkholder Dr**




House- Bedrooms:4 Washrooms:3

**Brock Rd & Taunton Rd**




House- Bedrooms:4 Washrooms:3

**Hwy 2 & Harwood Ave N**




"Bacement - Bedrooms:2 Washrooms:1

**Westney Rd S. & Finley**




House - Bedrooms:3 + 1 Washrooms:2



Navajeevan
Anantharaj
416 272 8543

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage

1265 Morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416-287-2222

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரபாகரம்

# சுற்றுச்சூழல் பாதுகாப்பும் ஈழமும்

**இயற்கை எனது நண்பன்,**

**வாழ்க்கை எனது தத்துவாசிரியன்,**

**வரலாறு எனது வழிகாட்டி.**

இன்று உலகம் முழுமையாக சுற்றுச் சூழல் பாதுகாப்பு பெரும் பேசு பொருளாகியிருக்கிறது. இளையவர்கள் தங்கள் எதிர்காலத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டு, வீதிக்கு வந்திருக்கின்றார்கள். அசமந்தப் போக்கில் உள்ள அரசியலாளர்களும் சரி, ஆட்சியாளர்களும் சரி, எதாவது செய்தாக வேண்டிய கட்டாயத்திற்கு, சிறிது சிறிதாக தள்ளப்படும் சூழல் அதிகரித்து வருகிறது. இயற்கையுடம்மோதிய மதியற்றமனிதர்களால்,இன்று இயற்கையின் சீற்றம் நாளும் அதிகரிக்கும் அபாயம், எங்கும் சூழ்ந்து நிற்கிறது. அது பலவடிவங்களில், பல்வேறு அழிவுகளுக்கான காரணியாக தோற்றம் கண்டு மிரட்டுகிறது. இயற்கையின் அதிகரிக்கும் சீற்றத்திற்கு, வினை விதைத்த மனிதனால் பரிகாரம் காண முயலவில்லை என்றால், அதன் வினையை அவன் அறுத்தே ஆகவேண்டும். நிச்சயம்விதைத்தவன் அதை முழுமையாக அனுபவிக்கமாட்டான், அவன் சந்ததியே அதற்கான விலையைக் கொடுக்கும். என் வாழ்வை சீரழிக்க நீ யார்? கேட்கிறார்கள் இளைவர்கள்... அவர்களுக்காவது தட்டிக்கேட்க்க வேண்டும் என்று தோன்றியதே என்ற பெருமகிழ்ச்சி எனக்கு...

பிரபாகரம் ஒரு பெரும் விருட்சம்.. அது குறித்து எழுதுவதாக நான் அளித்த உறுதிமொழி இன்றும் கிடப்பில் இருப்பதால், அதற்கு வடிவம் கொடுக்கும் முயற்சியே இது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில், முதன்மை விடயங்களில் ஒன்றுதான் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டு, இன்று உலகில் பெரும் அழிவு சக்தியாக மாற்றம் கண்டு நிற்கும் பொலித்தீன் பைகள். ஒரு வருடத்தில் 13 பில்லியன் பொலித்தின் பைகள் பாவனைக்கு வந்து, வெறும் 20 நிமிடங்களில் வீசியெறியப்படுகின்றன. ஒவ்வொரு நிமிடமும் ஒரு மில்லியன் பைகள் பாவனைக்குவருகின்றன. இவ்வாறு 20 நிமிடப் பாவனையில் தூக்கியெறியப்படும் பொலித்தீன் பைகள், உக்கி காணாமல் போவதற்கு 1000 வருடங்கள் ஆகலாம். இடைப்பட்ட காலத்தில் சூழல் மாசுபடுவதற்கான பெரும் காரணியாக வேறு உள்ளன. 60 மில்லியன் தொன் பொலித்தீன் வருடமொன்றிற்கு உற்பத்தியாகிறது என்றால்ப் பாருங்களேன்.

ஸ்டென் கஸ்டஃப் துலின், ஸ்வீடனில் 1959ஆம் ஆண்டு பொலித்தீன் பையை கண்டுபிடித்தார். பொலித்தீன் பைகளைக் கண்டுபிடித்த துலினின் குடும்பம், நல்ல விடயமாக கண்டுபிடி;க்கப்பட்ட பைகள் இன்று, தவறான பாவனையால் ஆபத்தானதாக மாறியிருப்பது, துலினுக்கு அதிக சோகத்தை கொடுத்திருக்கும் என வருத்தம் தெரிவிக்கின்றனர். தவறு எனக்கண்டதை, விரைந்து தடுத்து, அதன் தாக்கத்தை மேலும் அதிகரிக்காது தடுக்க வேண்டும். பொலித்தீன் பைகளுக்கான தடைகளை, சிறிது சிறிதாக முன்னெடுத்தாலும், அது சார்ந்த தொழில்துறையினர் தம் பணபலம் கொண்டு அதனைத் தடுத்தும் வருகின்றனர். ஆனால் தமிழர் தேசம், இன்றைக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னர், அதற்கான நிரந்தரத் தடையை விதித்து, அதைக் கடுமையாக அமுல் செய்தது மட்டுமன்றி, அதைக்கடந்தான அதற்கு மாற்றீடான வழிவகைகளிலும், பயணிக்க முயற்சித்தது தான் பெருமை தரும் வரலாறு. காலத்திற்கு தேவையான மக்கள் நலன்கருதிய விடயங்களை, அதி கவனத்தில் கொள்வதுவும், அது குறித்து காத்திரமான ஆட்சி முன்னெடுப்புக்ளை செய்வதுமே, ஒரு சிறந்த தலைமைத்துவத்தின் மகிமை. இன்று 20 ஆண்டுகளின் பின்னரும் விடையின்றித் தவிக்கும் உலகின் முன், அன்றே தீர்க்க தரிசனமான திடத்துடன் பயணித்து, தமிழனாக தலைநிமிர வைத்த பிரபாகரம் ஒரு எழுச்சியின் வடிவம் தான்.

கனடாவில் சமிபத்தில் நடந்து முடிந்த தேர்தலில், அதிகம் பேசப்பட்ட ஒரு விடயம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு. அதற்கு தமது ஒரு திட்டமாக லிபரல்க் கட்சியின் தலைவரும், தற்போதைய பிரதமருமான ஜஸ்ரின் ரூடோ, 10 வருடங்களில் 2 பில்லியன் மரங்களை கனடா முழுமையாக நட்டு வளர்ப்பதினூடாக அதற்கு வலுச்சேர்க்கப் போவதாக அறிவித்தார். மரம்வளர்க்கும் பெரும் திட்டம் ஒன்றை ஆபிரிக்க நாடுகள் கூட்டாக முன்னெடுக்கின்றன. அதேபோன்று தான் அமேசன் மழைக்காடுகளை தீமூட்டி அழிக்கும் முயற்சிக்கு, உலகமே திரண்டு எதிர்ப்புத் தெரிவித்து, அதனைக் காப்பதற்கும் முனைந்து நிற்கின்றன. ஆம் மரங்களின் வகிபாகத்தின் முதன்மை இன்றைய உலகில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதனை விஞ் ஞானிகள் பல ஆண்டுகளாக சொல்லித் தான் வருகின்றனர். ஆனால் ஈழதேசத்தின் வன்னியின் பெருநிலப்பரப்பெங்கும், மரம் வளர்த்தலை ஊக்குவித்தது மட்டுமன்றி, தமிழர் தேசமாகவும், அது சார்ந்த துறைகளைத் தோற்றுவித்து, அதனை முறைமையாக முன்னெடுத்தது மட்டுமன்றி, அதன் பாதுகாப்பிற்கெனவும் முறைமைகளை உருவாக்கி, அவற்றை மீறுவோருக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகளையும் கடைபிடித்த தமிழர் தேசம்,

இன்று திரும்பிப் பார்க்கையில் பெருமை சேர்கிறது தமிழா...

ஆனால் 2009 இற்குப் பின்னர், சிங்களத்தால் முதலில் வெட்டிக் காசாக்கப்பட்ட அந்த அவலத்தை, என்னினம் இன்றும் வேடிக்கை தானே பார்க்கிறது? வரண்ட பிரதேசத்தின் நீண்டகால இருப்பிற்கான, வளமாக அது முன்னெடுக்கப்பட்டது. அது சிதைக்கப்பட்டால் அழிவு யாருககு? இது குறித்த சிந்தனையோ, அல்லது முன்னேடுப்போ அன்றி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் இன்றைய தலைமைகளுக்கு பிரபாகரம் பற்றிப் பேச எந்த அருகதையும் கிடையாது என்பதே உண்மை. சரி இலங்கையிலும் ஏதோ சனாதிபதித் தேர்தலாம்! சுற்றுச் சூழல் பாதுகாப்பு பற்றி அதில் ஏதும் பேசப்படுமா? ஆட்களுக்கோ பாதுகாப்பிருக்குமா? என்று தெரியவில்லை, பிறகு சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பு இருந்தா என்ன? இல்லை என்றால் என்ன என்கிறீர்களா?

சமீபத்திய ஐ.நா அறிக்கை, காலநிலை மாற்றத்தால் தொடர்ந்தும் அதிகரித்துவரும், கடல் நீர்மட்டத்தின் உயர்வால் ஏற்படக்கூடிய பேராபத்துக்களை சுட்டிக்காட்டியுள்ளது. கடலுக்குள் மூழ்கும் மக்கள் பகுதிகள், அதனால் ஏற்படக்கூடிய மக்கள் இடப்பெயர்வுகள் எனப் பலவற்றை அது கோடிட்டுக் காட்டுகிறது. அதன் பாதிப்பில் அதிகம் ஆபத்தை எதிர்கொள்ளும் பகுதிகள் ஆசியாவிலேயே அடையாளம் காணப்பட்டுள்ளன. அது குறித்து இன்னொரு பதிவில் விரிவாகப் பார்ப்போம். இலங்கதைத் தீவில் அதனால் அதிகம் பாதிப்பை எதிர்கொள்ளும் மாவட்டங்களாக, யாழ்ப்பாணம், புத்தளம், அம்பாந்தோட்டை அடையாளம் காணப்பட்டுள்ளன. அதிலும் யாழ்ப்பாணமே அதிக ஆபத்தை எதிர்கொள்கிறது. 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டதாகக் கருதப்படும், ஐஸ் ஏஜ் பனி உருக்கப் காலத்தினால், உயர்ந்த கடல் மட்டத்தினால் குமரிக்கண்டம் கடலினுள் ஆழந்து போக, அகண்ட நிலப்பரப்பாக இருந்த பகுதி, நீருக்குள் மூழ்க, மன்னார் வளைகுடாவரை உயர்ந்த நிர்ப்பரப்பு, எம்மைத் தீவாகக் கூடப் பிரித்துவிட்டது. ஆகவே மேலும் நீர் உயரும் போது, அதை அண்டிய இப்பகுதிகள் தொடர்ந்தும் நீருக்குள் அமுழும் என்பதை இலகுவாகப் புரியலாம்.

யாழ் குடாநாடு, முழுமையான கட்டுப்பாட்டில் இருந்த 1993இல், யாழ் பல்கலைக்கழகத்தில் தமிழர் தாயகத்தின் அனைத்துத் துறைசார் திட்டமிடலை மையப்படுத்தி, ஒரு ஆராச்சி மாநாடு முன்னெடுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக அதில் அடையாளம் காணப்பட்ட, பல துறைகள் சார்ந்த திட்டமிடல் விடயங்கள், விரிவாக்கம் கண்டு அதன் தொடர்ச்சியாக, தமிழீழ உட்கட்டுமானம் என்ற பூர்வாங்க வரைவு வடிவம் பெற்றது. இது குறித்தும் பின்னர் விரிவாகப் பார்ப்போம். அதன் தொடர்சியாக, சமாதான காலகட்டத்தில் சர்வதேச வல்லுனர்கள் துணைகொண்டு, அவை மேலும் வளப்படுத்தப்பட்டு, வலுப்படுத்தப்பட்டன. அவற்றில் பல வழிகளிலும் தொண்டாற்றிய, பல துறைசார் வல்லுனர்கள் இன்று உலகளாவிப் பரந்து சாட்சியாக வாழ்கின்றீர்கள். அதில் தமிழ்த்தலைமையால் வலியுறுத்தப்பட்டு, கவனத்தில் கொள்ளப்பட்ட விடயம். அதிகரித்துவரும் நீர்மட்டத்தால் எதிர்காலத்தில், தமிழர் தாயகம் எதிர்கொள்ளவுள்ள சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில், எவ்வாறான எமது நிலத்திற்கேற்ற திட்டமிடலை முன்னெடுப்பது, என்பற்கான ஆய்வும் அது குறித்த விரிவான திட்ட வரைவும். இன்று 15 ஆணடுகளின் பின்னரும், சர்வதேசத்தில் வெறும் பேசுபொருளாக மட்டும் உள்ள இவ்விடயத்தை, அன்றே செயற்பாட்டு வடிவமாக உருப்பெற வலியுறுத்திய பிரபாகரம், ஒரு எழுச்சியின் வடிவம் மட்டுமல்ல, அது ஒரு பல்பரிமாண அதிசய சக்தி.

அதைப் புரிதலுக்கு உட்படுத்துவதும், அவ்வாறான இனநலன் கருதிய தீர்க்க தரிசனமான முன்னெடுப்புகளை சிந்திப்பதுவும், அதற்காக முனைவதுமே, அதன் வடிவமே அன்றி வெறும் சொல்லாடல்களும், சொதப்பல்களும் அல்ல. சுற்றுச் சூழல்ப்பாதுகாப்பிலேயே தன் இனத்தின் நலனை முன்னிறுத்திய பிரபாகரம் எங்கே? இதில் கடந்த 10 வருடங்களில் எந்தவொரு துரும்பையும் நகர்த்தாக அல்லது எவ்வித சிந்தனையுமே அற்ற இன்றைய தமிழ்த் தலைமைகள் எங்கே? அல்லது இன்றும் காத்திரமான முன்னெடுப்புகள் இன்றி தொடர்ந்தும் பேசுபொருளாக மட்டும் சுற்றுச் சூழலை பயணிக்க அனுமதிக்கும் உலகத் தலைமைகள் தான் எங்கே?



“முதலில் உங்கள் மக்களிற்கு என்ன தேவை என்பது தெரிந்திருக்கவேண்டும்... இரண்டாவதாக அதை அடைவதற்கான மார்க்கம் தெரிந்திருக்கவேண்டும்... இறுதியாக அதை அடைவதற்கான முழுமையான அர்ப்பணிப்பு இருந்தாக வேண்டும்“

பிரபாகரம் என்ற எழுச்சிவடிவத்தை, வெறும் இராணுவ மயப்பட்ட வடிவமாகப் பார்ப்பது மட்டுமன்றி, அவ்வாறே இவ்வுலகிற்குக் காட்டி, அதுவே தமிழ்த் தேசியம் என முழங்கும் வெறும் உணர்ச்சிப் பிழம்புகளே! அதுவல்ல பிரபாகரம் காட்டிய உயரிய தமிழத் தேசியம். அனைத்துத்துறைகளிலும், வடிவங்களிலும், உலகில் தனித்துவமாகப் பெருமை கொள்ளும் வகையில், உயர்ந்து நிற்பதுவே பிரபாகரம் காட்டிய தமிழ்த்தேசியம். இதை நாம் வாழும் தேசமெல்லாம் கூட சாதித்து, உயர்ந்து நிற்கலாம். இவற்றை இனமாக நாம் அமுல்ப்படுத்தி, அனைவருக்கும் முன்மாதிரியான இனமாக மாறி, அதனூடாக அதனைச் சாதிக்கலாம். முடியுமா எங்களால்? பிரபாகரம் தொடர்ந்தும் வரும்...

**இயற்கை எனது நண்பன்,**

**வாழ்க்கை எனது தத்துவாசிரியன்,**

**வரலாறு எனது வழிகாட்டி.**

## பிரபாகரம் என்றால் என்ன?

ஆகஸ்ட் 11, 2017இல், ஆம் இரண்டு வருடங்களுக்கு முன்னர் கீழ்க்கண்ட பதிவை இட்டிருந்தேன. இதன் தொடர்சியாக எழுத நினைத்த பிரபாகரம் தொடர்வதற்கு இரண்டு வருடங்கள் எடுத்துவிட்டது. இடையில் உடலியல் ரீதியாக சந்தித்த சவால்கள் அதற்கான மனோதிடத்தை தரவில்லை. தற்போது அது எழுதப்படும் நிலையில் அன்றைய பதிவை ஒரு முன்னூட்டாக மீண்டும் எடுத்துவருகின்றேன். .....

தமிழர் மனங்களில், பாசமுள்ள, பற்றுள்ள, தலைமையாக பதிந்துவிட்ட பிரபாகரன் என்ற நாமத்தை, அதன் சூத்திரத்தை, இன்றைய தமிழ் தலைமைகளோ அல்லது செயற்பாட்டாளர்களோ அது ஈழம் மட்டுமல்ல, ஈழம் கடந்தும் இன்றுவரை சரிவர புரிந்து கொண்டதாக தெரியவில்லை. இது குறித்து விரிவாக பல பரிணாமங்களில் பல விடயங்களை விரைவில் எழுதுகிறேன். ஆனால் இன்று ஒரு விடயம்...

பிரபாகரன் பேசும் தலைவர் அல்ல.... முழங்கும் தலைவர் அல்ல... சொல்லும் ஒவ்வொரு வார்த்தையிலும் ஆழமான அர்த்தத்தை தேடுபவர்... தன் மக்களிற்கு என்றும் உண்மையாக இருந்தவர்... உரிமை வேண்டி நிற்கும் மக்களின் விடுதலை வரலாறுகளின் இதயநாயகனாக பார்க்கப்படும், சே எனப்படும் சேகுவாராவிடம், தலைமை என்றால் என்ன என்று கேட்டபோது, அவர் சொன்னார்... “முதலில் உங்கள் மக்களிற்கு என்ன தேவை என்பது தெரிந்திருக்கவேண்டும்... இரண்டாவதாக அதை அடைவதற்கான மார்க்கம் தெரிந்திருக்கவேண்டும்... இறுதியாக அதை அடைவதற்கான முழுமையான அர்ப்பணிப்பு இருந்தாக வேண்டும்“... என்றார்.

இன்று இவை மூன்றையும் கொண்டிருக்கும் ஒரு தலைமையை, ஈழத்திலோ, ஈழத்திற்கு வெளியிலோ முடிந்தால் அடையாளம் காட்டுங்கள்... இந்நிலையை எட்டுவதற்கு பல்பரிமாண ஆளுமை இருந்தாக வேண்டும்.... இன்றும் பிரபாகரன் என்ற தலைமையை தமக்கு பிடித்த ஒரு பரிமாணத்திலேயே, அறிந்து, புரிந்து பலர் கொண்டாடிக்கொண்டிருக்கிறன்றனர். அவரின் பல்பரிமாண ஆளுமையையும், அதுவே அவரை ஒரு உயரிய நிலைக்கு இட்டுச் சென்றது என்பதையும், முழுமையாக புரிந்து கொண்டவர்களாக இல்லை. பிரபாகரன் தன்னை சுற்றியிருந்தவர்களிடமும், இவ்வாறான பல்பரிமாண ஆளுமையை வளர்த்துக் கொண்டே இருந்தார். அதை புரிந்து கொண்டு தம்மை அவ்வாறு வளர்த்துக் கொண்ட பலர், ஈழ விடுதலை வரலாற்றில் தாமும் சாதனையாளர்களானார்கள்... கூடவே அர்ப்பணிப்பின் உயர் வடிவமாகி மாவீரர்களாகினர்... இது குறித்து விரிவாக பின்னர் பார்ப்போம்....

சே சொன்ன மூன்று விடயங்களை கொண்டிருந்தால் மட்டும் போதாது... எந்த மக்களுக்காக களம் கண்டீர்களோ அந்த மக்களின் மனங்களை வென்றவர்களாக, அந்த மக்களுக்கு நம்பிக்கை ஊட்டி உங்கள் பின்னால் அணிவகுக்க, எப்போது உங்களால் முடிகிறதோ, அப்போதே மக்கள் மயப்படுத்தப்பட்ட ஒரு தேசிய போராட்டத்தில் மக்கள் பலத்துடன் உங்களால் முன்னேற முடியும். இதில் முதலில் உங்கள் மக்களின் பலம், பலவீனம் குறித்த முழுமையான புரிதல் உங்களுக்கு இருந்தாக வேண்டும்... இது ஈழத்தில் இருந்து, தமிழகத்தில் சற்று மாறுபடலாம்... மலேசியாவில் இன்னும் வேறுபடலாம்... இவேவேளை காலத்திற்கு காலமும்... போராட்ட களங்களிற்கு ஏற்பவும் கூட இது மாறுபடலாம் அல்லது வேறுபடலாம்... சுருங்கக்கூறின் இதற்கென்று ஒன்றும் நிரந்தர போமிலா கிடையாது... இங்கு தான் தலைமைகளின் ஆளுமை வெளிப்படுகிறது... அதனால் தான் பலநூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிறந்த தலைமை என்கிறோம்...

ஈழத்தமிழினத்தில் உள்ள முக்கிய பலவீனம், நம்பிக்கையை இலகுவாக தொலைத்துவிடுவது... இந்த நம்பிக்கையை கட்டியெழுப்புவதை பிரபாகரன் வெற்றிகரமாக, கட்டம் கட்டமாக, தொடர்ச்சியாக, ஏறுநிலை படிமாணத்தில் செய்தார். இதை முள்ளிவாய்காலுக்கு பின்னராக, கடந்த எட்டு ஆண்டுகளில் (இரண்டு ஆண்டுகளுக்கு முந்திய பதிவு இது) யாரும் செய்யதாக தெரியவில்லை... முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான காலம் என்பது மக்கள் நம்பிக்கையை மீண்டும் தொலைத்துவிட்ட காலம்... சிறதுசிறிதாக என்றாலும் மக்களிற்கு வெற்றியை காட்டுங்கள்... இல்லையேல் விரைவில் இந்த மக்களை இழந்து விடுவீர்கள் என தாயகத்தில் இருந்து புலம்வரை நானும் அனைவரிடமும் கதறிப்பாத்துவிட்டேன்... பானையில் இருந்தால் தானே அகப்பையில் வரும்... பந்தா தலைமைகள் மக்கள் தலைமைகளாக முடியுமா?

இதற்கான ஒரு உதாரணத்தை என் பதிவுகளில் இருந்தே எடுத்து வருகின்றேன்... நானும் பல பதிவுகளை இட்டு வருகின்றேன்... சமீபத்தில் அமெரிக்க கோப்பைளை வென்றது கனடிய தமிழர் இளையோர் உதைபந்தாட்ட அணி என்றொரு செய்தியை தரவேற்றியிருந்தேன்... அதற்கு காட்டிய ஆதரவு வெளிப்பாடும் பகிர்வுமே இதற்கான பதில்... அவர்களின் சாதிப்பு உங்களுக்கு மகிழ்ச்சி கொடுத்தது.... உங்களின் வெற்றி போன்ற உணர்வை ஏற்படுத்தியது... இளையோர் சாதிப்பார்கள் என்றொரு சிறு நம்பிக்கையையாவது ஏற்படுத்தியது... இவ்வாறு நல்ல செய்திகள் தொடர்ச்சியாக வருமானால் இனத்தின் எதிர்காலம் குறித்த நம்பிக்கை உங்களிடம் தானாகவே அதிகரிக்கும் அல்லவா?

இவ்வாறான நல்ல செய்திகள், அரசியல் சார்ந்தோ, பொருண்மியம் சார்ந்தோ, சமூகம் சார்ந்தோ, விளையாட்டு சார்ந்தோ, கலை சார்;ந்தோ அல்லது இன்னும் ஏதோ துறைசார்ந்தோ அமையலாம்... இரண்டாவது இவ்வாறு அமையும் செய்திகள் உடனுக்கு உடன் அம்மக்கள் குழுமத்திடமும் உரிய முறையில் பகிரப்படல் வேண்டும்... அதாவது இதை ஆங்கிலத்தில் சொல்வதானால மாக்கட்டிங்... இங்கும் தமிழ் இனத்தில் பாரிய குறைபாடு... போராட்ட காலத்தில் கூட, இவ்விடயத்தில் புலம்பெயர் தமிழர் தரப்பு தன்னை முழுமையாக வளர்த்துக் கொள்ளவில்லை... குறிப்பாக தமிழர் கடந்த பரப்புரையில்...

ஆகவே பிரபாகரம் குறித்த சரியாக புரிதல் இருந்தால், சின்ன சின்ன வெற்றிகளை நோக்கியாவது வேலைத்திட்டங்களை உருவாக்குங்கள்... அவ்வெற்றிகளை உங்கள் மக்களிடம் உடன் உரியமுறையில் பகிர்ந்து, அவர்கள் இழந்துவிட்ட நம்பிக்கையை கட்டியெழுப்பப்பாருங்கள்... அண்ணை வருவார் என்று பாட்டு போட்டுகொண்டிருப்பதை விடுத்து... ஒரு தலைவன் காட்டிய வழியில் சாதித்து, இம்மக்களுக்கு உண்மையாகவும், நேர்மையாகவும், அர்ப்பணிப்புடனும் இருக்கப்பாருங்கள்.... அது தான் அவர் படைத்த உயரிய வீரவரலாற்றின் தொடர்ச்சியாகும்....

(பிரபாகரம் தொடரும்)

**நேரு குணரட்ணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழ்துளைக் கிணறும் அறமும்

ஆழ்துளைக் கிணற்றில் சுஜித் மரணத்தைத் தழுவியதைத் தொடர்ந்து, பலரும் அறம் என்ற திரைப்படம் பற்றிப் பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

அந்தக் கிணறறில் சுஜித் தவறி விழுந்தான். பின்னர், உடற்பாகங்கள் சிதைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டான். இந்தியாவைப் பொறுத்தவரையில், ஆழ்துளைக் கிணற்று மரணங்கள் புதியவை அல்ல. தமிழகத்தில் மாத்திரம் பத்துக் குழந்தைகள் இதுவரை பலியாகியிருப்பதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இதுவொரு சமூகப் பிரச்சினை என்பதை அறம் திரைப்படம் சுட்டிக்காட்டுகிறது. இந்தப் பிரச்சினையின் பின்புலத்திலுள்ள அரசியல், சமூக, பொருளாதார காரணிகளை அறம் ஆராய்கிறது.

சிக்கலான வாழ்க்கை முறையும், கைத்தொழில் மயமாக்கமும் விளைநிலத்தை கந்தக பூமியாக்கியதில் தண்ணீருக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு. அதற்குத் தற்காலிகத் தீர்வாக முறையற்ற விதத்தில் தோண்டப்படும் ஆழ்துளைக் கிணறுகள்.

அதற்குள் சிக்கிய பிள்ளையொன்றை மீட்பதில் கட்சி அரசியலும், ஆட்சி நிர்வாகக் கட்டமைப்பில் நிலவும் ஊழல் மோசடிகளும், ஊடக சுதந்திரத்தின் பெயரால் நிகழ்த்தப்படும் அத்துமீறல்களும் எந்தளவு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன என்பதை பேசிய படைப்பாக அறத்தைக் குறிப்பிடலாம்.

நிஜவுலகில் நிகழ்ந்த சுஜித் சம்பவத்திற்கும், கோபி நயினார் என்ற படைப்பாளி திரையுலகில் காட்டிய கற்பனா சம்பவத்திற்கும் இடையில் பிரதானமானதொரு வித்தியாசத்தைக் கூறலாம். உண்மைச் சம்பவத்தில் ஆழ்துளைக் கிணற்றில் சிக்கிய பிள்ளை இறந்துவிடுவான். கற்பனா சம்பவத்தில் பிள்ளைக் காப்பாற்றப்பட்டு விடும்.

மற்றபடி, சுஜித்தின் மரணத்தைத் தொடர்ந்து பொதுவெளியிலும், சமூக ஊடகங்களிலும் கேட்கப்பட்ட சகல கேள்விகளையும் முன்கூட்டியே அறம் திரைப்படம் தர்க்கரீதியாக முன் வைத்தது.

அந்தத் திரைப்படமானது சுமார் 80 அடி ஆழத்தில் ஊசலாடும் உயிரைக் காப்பாற்ற முடியாமல், நிலவிற்கு ராக்கெட் அனுப்பும் தொழில்நுட்பத்தால் ஏது பயன்? மனிதநேயத்தை மறந்த விஞ்ஞான முன்னேற்றத்தி பயன் என்ன என்ற கேள்வியை எழுப்பும்.



ஜனநாயகத்தின் ஆதாரம் மக்கள் சக்தி என்பதை மறந்த அதிகார வர்க்கத்தால், ஒரு பிள்ளையின் உயிரைக் காப்பாற்ற முடியாமல் நிற்கும் ஒரு இராஜ்ஜியத்தின் கையாலாகத தனத்தை அறம் துகிலுரித்துக் காட்டும்.

எல்லா ரசிகர்களையும் சென்றடையும் வகையில் உருவாக்கப்பட்ட படைப்பென்பது அறத்தின் சிறப்பு.

அறம் திரைப்படத்தைப் பார்ப்பவர், ஒரு கற்றறிந்த கல்விமானென வைத்துக் கொள்வம். ஒரு தோல்வி கண்ட ஜனநாயக கட்டமைப்பில், நீதித்துறை, மத நிறுவனங்கள், சட்டத்தை நிலைநாட்டும் அமைப்புக்கள், ஊடகம் என்ற நான்கு தூண்கள் இற்றுப் போகும் விதம் பற்றிய கருத்தாடலை அவரோடு நிகழ்த்தும்.

நன்றாகப் படித்தவர் படத்தைப் பார்க்கிறார் என்போம். ஒரு தீவிரமான சமூக நெருக்கடியை தர்க்க ரீதியாக வலுவான காட்சி மொழியின் ஊடாக அவருக்குள் ஊடுகடத்தும்.

நீங்கள் சராசரி ரசிகரா? கவலையில்லை. உங்களை நகம் கடிக்க வைக்கும் காட்சிகள் மூலம் ஆழ்துளைக் கிணறுகள் பற்றிய சுயபிரக்ஞையை ஏற்படுத்தக்கூடிய ஆற்றல் படைத்ததாக அறம் என்ற திரைப்படம் அமைந்திருந்தது.

சுஜித்தின் மரணம் நிகழ்ந்த தமிழக மண்ணும், அந்த மரணம் பற்றி அதிகமாகக் கவலைப்பட்ட தமிழ்பேசும் சமூகமும் சினிமா என்ற வலுவான ஊடகத்தில் இருந்து பிரிக்க முடியாதவை.

தமிழக மண்ணை எடுத்துக் கொண்டால், திராவிட அரசியலின் வலுவான பிரசார ஊடகமாகத் திகழ்ந்து, சமூகத்தில் புதிய போக்குகளை ஏற்படுத்தி மாறிவரும் காலங்களுக்கு ஏற்ப சமூகத்தை வடிவமைக்கக்கூடிய ஆற்றல் படைததவையாக திரைப்படங்கள் திகழ்ந்தன.

புவியியல், கலாசார, சமூக எல்லைகளைத்தாண்டி உலகெங்கிலும் பரந்து வாழும் சுமார் ஏழு கோடி தமிழர்களை ஒன்றிணைக்கக் கூடிய கருவியாக தமிழ்த் திரைப்படம் காணப்படுகிறது.

ஆழ்துளைக் கிணறு பற்றிய பிரச்சினைகள் மீது வெளிச்சம் பாய்ச்சி அறம் திரைப்படம் ஆரம்பித்த கருத்தாடலை, தமிழக மண்ணோ உலகெங்கிலும் வாழும் தமிழர்களோ சரியாக உள்வாங்கிக் கொண்டிருந்தால், ஆட்சி அதிகார பீடத்தின் மீது சரியான அழுத்தத்தைத் தொடுத்து சுஜித்தின் மரணத்தைத் தவிர்த்திருக்க முடியும்.

ஆனால், துரதிருஷ்டவசமாக தமிழகத்தின் ரசிகர்கள் ஆழ்துளைக் கிணறுகளை மூடுமாறு அதிகாரபீடத்திற்கு



அழுத்தம் தொடுப்பதை விடுத்து, நயன்தாராவிற்கு கோயில் கட்டுவதில் அதிக அக்கறை செலுத்தினார்கள்.


இந்தத் திரைப்படம் பேசிய அரசியலை சமூகத்தின் அடிமட்டத்திற்கு கொண்டு செல்லக்கூடிய ஆற்றல் படைத்த தொலைக்காட்சி ஊடக நிறுவனங்கள், நயன்தாராவை அடுத்த முதலமைச்சராகப் பார்க்கக் கூடிய ரசிகர்களின் ஆர்வத்தைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் செய்வதிலேயே அதிக அக்கறை காட்டின.

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அறம் திரைப்படம் வெளியானது. அந்தத் திரைப்படம் சமூகத்தில் ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தால், 2019 ஆம் ஆண்டு ஏப்ரலில நடைபெற்ற மாநில சட்டசபைக்கான இடைத்தேர்தலிலும், லோக் சபா தேர்தலிலும் ஆழ்துளைக் கிணறுகள் என்ற விஷயத்திற்கு முக்கியத்துவம் அளித்திருக்கலாம்.

அத்தகைய கிணறுகளை மூடுவோருக்கு மாத்திரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் வாக்கு என்று அழுத்தம் தொடுத்திருந்தால், திருச்சி நடுக்காட்டுப் பட்டியில் சுஜித்தின் வீட்டுக்குப் பின்னால் இருந்த ஆழ்துளைக் கிணறும் மூடப்பட்டிருக்கலாம்.

இந்தத் திரைப்படம் அம்பலப்படுத்திய அரசியல் தகிடு தத்தங்களை ஊடகங்கள் சரியாக மக்கள் மத்தியில் கொண்டு சென்றிருந்தால், மாநிலத்தின் பொறிமுறைகளை நம்பாமல் தாமதமின்றி மத்திய அரசாங்கத்தின் பொறிமுறைகளைப் பெற்றோ, வேறெந்த நாடுகளில் இருந்து நிபுணர்களை வரவழைத்தோ சுஜித்தைக் காப்பாற்றுமாறு கோரி மக்கள் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நிலை ஏற்பட்டிருக்கலாம்.

அறம் திரைப்படத்தில் குழந்தை காப்பாற்றப்படும் விதம் முக்கியமானது. சட்டதிட்டங்களை விடவும் மனிதநேயம் முக்கியமானது என்பதை உணர்ந்து, தமது அதிகார எல்லைகளைத் தாண்டி சிறுவனொருவனை ஆழ்துளைக்குள் செலுத்தி பிள்ளையை மீட்டெடுத்த அதிகாரியின் துணிச்சலை அறம் சித்தரிக்கும். ஆனால், நடுக்காட்டுப் பட்டியில் வளரிளம் பருவத்தைச் சேர்ந்த சிறுவனொருவன் சுஜித் 30 அடி ஆழத்தில் இருந்த சந்தர்ப்பத்தில், துளைக்குள் சென்று சுஜித்தை மேலே கொண்டு வர முடியும் என்று கூறியபோது, அவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறப்படும் கருத்தையும் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

சகல சந்தர்ப்பங்களிலும் தமக்கு வலுவானதொரு திரைப்படத்தின் ஊடாக ஊடுகடத்தப்பட்ட செய்தியை சரியாக உள்வாங்கிக் கொண்டு முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்காமல், இன்று பொதுவெளியிலும் சமூக ஊடகங்களிலும் தமிழ் பேசும் சமூகம் ஆதங்கத்தைக் கொட்டித் தீர்க்குமானால், தவறு எங்கே நிகழ்ந்திருக்கிறது?

திரைப்படம் என்பது ஒலியும், ஒளியும் சேர்ந்த ஊடகம். சிறப்பான சமூக மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கருவியாக அதனைப் பயன்படுத்தலாம். வலுவான திரைமொழியில் கருத்தொன்றை சிறப்பாக சொல்லக் கூடிய வகையில் நேர்த்தியாக தயாரிக்கப்பட்ட திரைப் படம், மனங்களை மாற்றும் ஊக்கியாகத் திகழ முடியும். அது பார்ப்பவர்களின் நடத்தைகளை மாற்றலாம். சமூக இயக்கங்களை அறிவூட்டவோ, வலுவூட்டவோ கூடிய ஆற்றல் திரைப்பட ஊடகத்திற்கு இருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், திராவிட அரசியலின் பிரசார ஊடகமாகத் தொடங்கிய சினிமா, கடந்த நான்கு தசாப்தகாலத்தில் மாநிலத்தை ஆட்சி செய்த கருணாநிதி, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா போன்ற ஆளுமைகளை உருவாக்கித் தந்த பெருமையைக் கொண்டது.

அப்துல் கலாம், டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி போன்ற ஆளுமைகளையும் கூட திரைப்படங்கள் ஊடாகவே மக்கள் மத்தியில் கொண்டு செல்லக்கூடிய அளவிற்கு அந்த ஊடகம் வலிமையானதாகத் திகழ்ந்தது.

இந்தப் போக்கு ஆண்டாண்டு காலமாக நீடிக்கிறது என்பதை நிரூபிப்பதற்கு இன்று சமூக ஊடகங்களில் நிகழும் கருத்தாடல்கள் சாட்சி. இன்று டுவிட்டர் என்ற ஊடகத்தை எடுத்துக் கொண்டால் சினிமா பற்றிய செய்திகள் அதிகம் பேசப்படுகின்றன. ட்ரெண்டிங் (Trending) ஆகின்றன.

தமது வாழ்வில் தீவிர தாக்கம் செலுத்தக்கூடிய விடயத்தை விடவும் ஒரு திரைப்பட வெளியீடு பற்றிய செய்தி, அதிகமாகப் பகிரப்படுகிறது. விவாதிக்கப்படுகிறது. இந்தியப் பொதுத்தேர்தல் பெறுபேறுகள் வெளியாதொரு சந்தர்ப்பத்தில், தமிழகத்தின் இளந்தலைமுறை வடிவேலு என்ற நடிகனை மையமாகக் கொண்ட நேசமணி நகைச்சுவையை பிரபலபாக்கியதை நினைவுகூர முடியும். இது நரேந்திர மோடியில் தேசிய ரீதியிலான வெற்றியை தமிழ் பேசும் சமூகம் ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்த சமூக இயக்கமாக பரிணமித்ததையும் நினைவுகூர முடியும்.

இன்று ஆழ்துளைக் கிணறுகள் பற்றிப் பேசிய அறம் என்ற திரைப்படத்தைப் பற்றிப் போன்று பல அரசியல் சமூகப் பிரச்சினைகளை ஆராயும் திரைப்படங்கள் தமிழகத்தில் வெளிவருகின்றன.

நுகர்வுக் கலாசாரத்தின் சிக்கல்களை விபரித்த காக்கா முட்டை, அரச இயந்திரத்தில் இலஞ்ச ஊழலைத் தாண்டி பெறக்கூடிய சேவைகளைப் பற்றிக் சொன்ன ஆண்டவன் கட்டளை, சிறைக்கூடங்களில் நிகழும் சித்திரவதைகள் என்ற தொனிப்பொருளின் கூடாக ஒரு இராஜ்ஜியத்திற்குள் நிலவும் நிழல் (state within a state) இராஜ்ஜியத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிய விசாரணை போன்ற திரைப்படங்களும் தமிழ் சமூகத்தில் சரியாகக் கவனிக்கப்படாமல் கடந்து சென்றன.

நிஜ வாழ்க்கையில் நம்மால் வாழ முடியாத வாழ்க்கையை கற்பனையாக திரையுலகில் விரியச் செய்யும் வித்தையில் மயங்கியும், நாயக பிம்பங்களின் மாயைகளுக்குள் சிக்கி, கட்அவுட்டுக்களுக்கு பாலூற்றி திருப்தி அடைந்தும் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொள்கின்ற கலாசாரத்திற்குள் இருந்த தமிழ் சமூகம் இன்னமும் மீளாமல் இருப்பது இதற்குரிய காரணங்களில் ஒன்றாகக் கூற முடியும்.

இன்று இந்தியாவை எடுத்துக் கொண்டாலும், உலகின் ஏனைய நாடுகளை எடுத்துக் கொண்டாலும் தீவிர சமூக மாற்றத்திற்கு வித்திட்ட எத்தனையோ திரைப்படங்கள் இருக்கின்றன.

இந்தியாவைப் பொறுத்தவரையில், ஆரம்ப காலத்தில் புராண இதிகாசங்களைக் காட்சிப்படுத்திய திரைப்படங்கள், பிற்காலத்தில் சமகால வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கலைக்கண்ணாடிகளாகப் பரிணமித்தன.

1939 ஆம் ஆண்டிலே தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த பெண்ணுக்கும், பிரமாண இளைஞனுக்கும் இடையிலான காதலை சித்தரித்து, சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக போர்க்குரல் எழுப்பிய அக்சுத் கன்யா என்ற திரைப்படத்தைக் கூற முடியும். இது சமத்துவ சமூகத்திற்காக முன்னெடுக்கப்பட்ட போராட்ட இயக்கத்திற்கு பெரும் வலுசேர காரணமாக இருந்தது.

சுமங்கலி என்ற தெலுங்குத் திரைப்படம் விதவைத் திருமணத்தை எதிர்த்து வலுவாகக் குரல் கொடுத்தது. சுதந்திரத்திற்கு முன்னர் வெளியான தியாகபூமி என்ற திரைப்படம் தேசிய உணர்வைத் தூண்டுவதாகக் கூறி, பிரிட்டனின் காலனித்துவ ஆட்சியாளர்கள் தடை செய்ததையும் குறிப்பிட்டாக வேண்டும்.

உலக அளவில் சமூக மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு திரைப்படங்களைப் பட்டியலிட முடியும். அவற்றில், நுகர்வுக் கலாசாரம் கோலோச்சும் உலகில் ஒரு பெரு வணிக நிறுவனத்திற்கு சவால் விடுத்த சுப்பர் சைஸ் மீ என்ற படம் முக்கியமானது. மெக் டொனால்ட் நிறுவனம் விற்பனை செய்த அளவில் பெரியதொரு உணவு வகை தமது உடல் எடையை அதிகரித்த விதத்தை இயக்குநர் படமாக்கியிருந்தார். இந்த விவரணத் திரைப்படம் வெளியாகி இரு வாரங்களுக்குள் குறித்த உணவின் விற்பனையை நிறுத்த வேண்டிய நிர்பந்தத்திற்கு மென்டொனால்ட் நிறுவனம் தள்ளப்பட்டது.

இன்றும் அறம் உள்ளிட்ட திரைப்படங்களால் தமிழ் சமூகத்தில் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முடியாமல் போதுஏன் என்பதை ஆராய்வது காலத்தின் தேவையான மாறியுள்ளது.

இது வெறுமனே திரைப்பட ரசனை சார்ந்த விடயம் மாத்திரம் அல்ல. திரையுலகம் அதீத செல்வாக்கு செலுத்தும் ஒரு சமுதாயத்தின் செல்நெறியைத் தீர்மானிக்கக் கூடிய விடயங்களுடனும் தொடர்புடையது.

இந்த ஆய்வில பல விடயங்கள் வெளிப்படக்கூடும். அதில் கதாநாயக பிம்பங்களை ஆராதிக்கும் மனப்பான்மை பிரதானமாக இருக்கக்கூடும். தமிழ் சமூகத்தில், எம்.ஜி.ஆர் - சிவாஜி, கமல் - ரஜினி, விஜய் - அஜித் ஆகிய நடிகர்களுக்கு வழங்கப்படும் அரசியல் முக்கியத்துவம், தமிழகத்தில் பிறந்து கூகுள் நிறுவனத்தின் தலைமை அதிகாரி வரை முன்னேறியிருக்கும் சுந்தர் பிச்சைக்கு வழங்கப்படுவதில்லை.

கர்நாடக சங்கீதத்தின் படைப்புக்கள் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக பாடுபட்டு, பெறுமதி வாய்ந்த மக்சேசே விருது வென்ற ரீ.எம்.கிருஷ்ணாவை பெரும்பாலான தமிழர்கள் அறிந்திருக்கவே மாட்டார்கள். ஒருவேளை, விவேக் என்ற நடிகன் இல்லாதிருந்தால் அப்துல் கலாம் என்ற பன்முக ஆளுமையை வெறும் விஞ்ஞானியாகவோ, அரசியல்வாதியாகவோ மாத்திரமே தமிழ் சமூகத்தின் அடித்தட்டு வர்க்கம் அறிந்திருக்கும்.

ஆழ்துளைக் கிணறுகள் பற்றிப் பேசிய அறத்தின் அரசியலை அல்லது அரசியல அறத்தைத் தாண்டி, நயன்தாராவை எதிர்கால முதலமைச்சராக வர்ணித்த சிந்ததனைப் போக்கு தமிழ் சமூகத்தின் துரதிருஷ்டம். இதற்குக் காரணம், இந்தக் கதாநாயக பிம்ப ஆராதனை தான்.

காதல் என்ற திரைப்படத்தில் வரும் காட்சியொன்றை நினைவு கூறலாம். நடிகனாகும் ஆசையில் இருக்கும் ஒருவனிடம், நீ ஹீரோவாக விரும்புகிறாயா, வில்லனாக நடிக்க விரும்புகிறாயா என்றொருவன் கேட்பான். முதலில் ஹீரோ, அடுத்து மாஸ் ஹீரோ. கடைசியாக முதலமைச்சர் என்று அவன் பதில் சொல்வான்.

இது தமிழ்பேசும் சமூகத்தில் பொதுப்புத்தி. இதில் இருந்து இளந்தலைமுறையை விலக்க நினைத்தாலும், அரசியல் இலாபம் தேட முனையும் சினிமாவின் ஆதர்ச நாயகர்கள் விடுவதில்லை. சமூகநலன் என்ற போர்வையல, இளம்தலைமுறையை கண்மூடித்தனமாகத் தம்மை பின்தொடரச் செய்வார்கள். தமது அரசியல் இரலக்கை நிறைவேற்றிக் கொள்ள இளைஞர் சக்தியை மிகவும் மோசமான முறையில் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வார்கள்.

சுஜித் ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த தினத்தன்று, ஒரு திரைப்படம் வெளியாகி ரசிகர்கள் தியேட்டர்களில் வெறித்தனம் காட்டியதால் ஏற்பட்ட பாதிப்புக்களை சொல்லவேண்டும். ஒருதிரையரங்கில் அரசியல் இலாபம் தேடும் ஆதர்ச நாயகர்களின் வணிக நோக்கங்கள் பற்றிய பிரக்ஞையற்ற ரசிகர்கள், ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தின் தலைவனாக ஆளப் போகும் தமிழனாக அவனை வரித்துக் கொண்டு வன்முறைகளில் ஈடுபடும் அளவிற்கு திரையுலகம் பற்றிய புரிந்துணர்வு இருக்கிறது. தமது ஆதர்ச திரைநாயகனின் அரசியல் தமது மண்ணின் அரசியல், சமூக, கலாச்சாரத்திறகுப் பொருந்தாது என்பதை புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு தமிழ் பேசும் சமூகம் ரசனையால் தாழ்த்தப்பட்டிருக்கிறது என்பதே உண்மை. அது உயரும் வரை, ஆழ்துளைக் கிணறுகளில் சுஜித்துகள் மரணிப்பது உள்ளிட்ட பிரச்சினைகளை எத்தகைய சிறப்பான திரைப்படங்கள் மூலம் பேசினாலும் நமது சமூகம் விழித்துக் கொள்ள மாட்டாது என்பதே உண்மை.

சர்வதேச அரசியல் பற்றி ஆராயும் கட்டுரையொன்றில் ஆழ்துளைக் கிணறு பற்றியும், அறம் என்ற திரைப்படம் பற்றியும் எழுத வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாயின், அதற்குக் காரணம் அந்த நிலை பற்றிய ஆதங்கமே தவிர வேறொன்றும் அல்ல.

**சதீஷ் கிருஷ்ணபிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா 70 வரலாறும் வழித்தடமும்




உண்மைகள் கறுப்பு, வெள்ளையாக என்றும் இருந்ததில்லை. எமக்குச் சொல்லப்படுவதன் அடிப்படையிலேயே,நாம் முடிவுகளை வந்தடைகிறோம்; அதில் தவறில்லை. ஆனால், நமக்கு சொல்லப்படுபவை பற்றியும் அதன் உண்மைத் தன்மை பற்றியும் ஆராய்வது முக்கியமானது.

அதனடிப்படையில், நாம் புதிய தகவல்களைப் பெறும்போது,எம்மைத் நாம் திருத்திக் கொள்வதற்காகத் திறந்த மனத்துடன் இருக்க வேண்டும்.

சீனா பற்றி, தமிழ் மக்கள் மத்தியில் தவறான பிம்பம் கட்டப்பட்டுள்ளது. சீனா, தமிழ் மக்களின் எதிரி என்றும் இலங்கை அரசாங்கத்தின் நண்பன் என்றும் தொடர்ந்து சொல்லப்பட்டு வந்துள்ளது.

இந்தியா பற்றியும் மேற்குலகு பற்றியும் நாம் அனுபவரீதியாக உணர்ந்த பின்னரும், தமிழ் மக்களின் மீட்பர்களாக இந்தியாவையும் மேற்குலகையும் நோக்குவது அபத்தம்.

மக்கள் சீனம் உருவாக்கப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவடைந்ததை அண்மையில் சீனா நினைவுகூர்ந்தது. சீனாவின் இந்த 70 ஆண்டுகால வரலாறு, எமக்கு விட்டுச்சென்றுள்ளவை பல.

இன்று உலகின் தன்னிகரற்ற சக்தியாகவும் பல துறைகளில் முன்னோடியாகவும் சீனா திகழ்கிறது. ஆனால், இது எவ்வாறு சாத்தியமாகியது என்ற கேள்வி இயல்பானது. இன்று, ஈழத்தமிழர்கள் மத்தியில் சீனா பற்றிய பிம்பம் எதிர்மறையானது. அதற்கான காரணங்களில் பிரதானமானவை, இந்தியா மீதான ஈர்ப்பும் மேற்குலகின் மீதான விசுவாசமும் ஆகும்.

இன்று தமிழர்கள் விரும்பினாலோ விரும்பா விட்டாலோ உலகின் தவிர்க்கவியலாத சக்தியாக சீனா வளர்ந்துள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களில் இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்துள்ளது. இது எவ்வாறு சாத்தியமானது.

மாவோ சேதுங்கால் வழிநடத்தப்பட்ட சீனப்புரட்சி 1949ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வெற்றிபெற்றது. இதை, மாவோ அன்றைய தினம் 'தியனமென்' சதுக்கத்தில் அறிவித்தார். அன்று மக்கள் சீனக் குடியரசு பிறந்தது. இதைச் சாத்தியமாக்கியது சீனப்புரட்சியே.

இன்று சீனா அடைந்துள்ள விருத்தியும் செழுமையும் சீனப்புரட்சியின் பாரம்பரியத்தில் வந்தவை. மகத்தான சீனப்புரட்சி, லெனின் தலைமைதாங்கி வழிநடத்திய ரஷ்யப் புரட்சிக்கு அடுத்தபடியான முக்கியமான புரட்சிகரக்கட்டமாகும்.

தத்துவார்த்த அடிப்படையிலும் நடைமுறை ரீதியிலும் மார்க்ஸியத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தி, செழுமைப்படுத்திய பெருமை மாவோவையும் சீனப்புரட்சியையும் சாரும்.

இன்று,சீனா எழுந்துநிற்பதற்கான அடிப்படைகள், மாவோவின் காலத்தில் இடப்பட்டவை. அவை, உள்ளூராட்சி அமைப்புகளாக இருக்கட்டும்; சீனாவின் அயலுறவுக் கொள்கையாக இருக்கட்டும் அனைத்தும் கவனமாய் மக்கள் நல நோக்கில் சீனாவால் முன்னெடுக்கப்பட்டவை ஆகும்.

**சீனாவில் சுயாட்சியும் திபெத்தும்**

1949இல், மாவோ சேதுங் தலைமையில் சீன மக்கள் குடியரசு அமைந்த அன்றிலிருந்து,சோஷலிசப் பாதையில், சீனா முன்னேற்றங்களைக் கண்டு வந்தது. அவற்றில் ஒன்றாக, அந்நாட்டின் தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் தீர்வுக்குக் கொண்டுவரப்பட்டன.

அரசமைப்பின் வாயிலாக, ஒற்றையாட்சியின் கீழ்த் தேசிய இனங்களுக்கான பிராந்திய சுயாட்சி அமைப்புகள் நிறுவப்பட்டன. சுயாட்சி அமைப்புச் சட்டத்தின் முகவுரையில், 'சீனா சகல தேசிய இனங்களாலும் கூட்டாக உருவாக்கப்பட்ட ஒற்றையாட்சியுடன் கூடிய பல்வின அரசு' என்றே கூறப்பட்டுள்ளது. சகல தேசிய இனங்களும் சமமானவை என்றே சீன அரசமைப்புக் கூறுகிறது.

சீனாவில் 55 தேசிய சிறுபான்மை இனங்கள் இருந்து வருகின்றன. பல பிரதேசங்களில் வெவ்வேறு இனங்களாகவும் பல்வேறு மொழிகள் பேசுவோராகவும் அவர்கள் இருந்துவருகிறார்கள். அவர்களது உரிமைகளும் சுயாட்சியும் உறுதி செய்யப்பட்டுள்ளன. இது சீனா உள்நாட்டுப் போர்கள் அற்ற நாடாக இருப்பதற்கான அடிப்படைகளைக் கொண்டது.

திபெத் நிலைவரம் என்ன என்ற கேள்வி எழலாம். சீனாவின் புரட்சிக்குப் பிறகு,என்ன நடந்தது என்பதற்குத் திபெத் நல்லதோர் உதாரணமாகும். திபெத்திய உள்ளூரதிகாரம், 1951 வரை நிலவுடைமையாளர்களின் நலன்களைப் பேணுதற்காக மட்டுமே செயற்பட்டது.

பண்ணை அடிமைகள் தமது அடிப்படை உரிமைகள் பற்றிக் குரல் எழுப்ப இயலாதபடி மிகவும் கண்டிப்புடன் கண்காணிக்கப்பட்டனர். ஒவ்வொரு மடாலயத்திலும் இருந்த ஏழை லாமாக்களின் நிலைமை அதிகம் வித்தியாசமாக இருக்கவில்லை.

புத்த மடாலயங்களுக்கும் கல்வி புகட்டலுக்கும் உலகெங்கும் ஒரு வரலாற்றுத் தொடர்பு இருந்து வந்துள்ளது. எனினும் திபெத்தில் அந்த நிலைமை இருக்கவில்லை. ஏழை லாமாக்களுக்குப் புத்த சமயச் சூத்திரங்களை வாசிப்பதற்குப் போதியளவுக்கு மேல், எவ்விதமான கல்வியறிவும் வழங்கப்பட்டதாகக் கூற இயலாது.

திபெத்தை விடுதலை செய்த பின்பு, சீன அரசாங்கத்தின் கையில் இருந்த சுமை, எத்தகையது என்பதை இதன் மூலம் ஓரளவு விளங்கிக் கொள்ளலாம். கல்வியறிவு, தொழில்விருத்தி ஆகியவற்றில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த திபெத், மொழி, கலை இலக்கியச் செயற்பாடுகளில் கூடப் பின்தங்கியே இருந்தது. எனவே, சகலதுறைகளிலும் திபெத்தை முன்னேற்ற வேண்டி இருந்தது.

அதேவேளை, திபெத்தின் நிலவுடைமையாளர்களது அதிகாரம் முற்றாகவும் தூக்கி எறியப்படாத நிலையில், அது எளிதில் சாத்தியமாகவில்லை. அதன் அடிப்படைத் தேவையாகவும் முக்கிய முன் நிபந்தனையாகவும் பண்ணை அடிமைகள் விடுதலை செய்யப்படுவதும் காணிச் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுவதும் அவசியமாயிருந்தது.

சீன அரசாங்கம் இம் மாற்றங்களைப் படிப்படியாக மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தது. சீனாவில் 1957 முதல் ஏற்பட்ட துரிதமான மாற்றங்கள் போல, எதுவுமே திபெத்தில் நிகழவில்லை.

எனினும் நிலப்பிரபுக்களின் தூண்டுதலினதும் வழிகாட்டலினதும் கீழ், மேற்கொள்ளப்பட்ட எழுச்சி, இந்த அவசியமான சீர்திருத்தங்களுக்கான நாளை மிகவும் முன்கொண்டு வந்த அளவில், அதுவும் நன்மைக்கானதே என்றுதான் கூறவேண்டும்.

திபெத்திய மொழியில் கல்வி கற்பதற்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டன. பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டன. விவசாயமும் கால்நடை வளர்ப்பும் தொழிலும் வணிகமும் விருத்தி செய்யப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திபெத்தின் சகல நிர்வாக அலுவல்களிலும் திபெத்திய உள்ளூராட்சிக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது.

திபெத்தியரின் மத நம்பிக்கைகளும் வழக்கங்களும் மதிக்கப்பட்டு வழிபாட்டிடங்கள் புனரமைக்கப்பட்டன. கட்டாயத்தின் பேரில்லாமாக்களாக்கப்பட்டோர் தங்கள் குடும்பங்களிடம் போகச் சுதந்திரம் வழங்கப்பட்டது. நிலப்பிரபுகளின் நிலங்கள் அவற்றில் உழைப்போரின் பொறுப்பில் பகிர்ந்தளிக்கப்பட்டன. மடாலயங்கள் தமது சொந்த உழைப்பின் மூலமோ, உரிய கூலி வழங்கியோ தமக்குரிய நிலங்களைப் பராமரிப்பில் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டன.

கல்வியறிவின் வளர்ச்சியின் விளைவாகத் திபெத்திய மொழியில் பழைய காவியங்களும் மதஞ்சார்ந்த நூல்களும் அச்சிடப்பட்டன. அதுபோலவே நவீன கல்வியும் தொழில்நுட்பமும் திபெத்திய மொழிக்கு அறிமுகமாயின.

**சீனாவின் அயலுறவுக் கொள்கையும் இலங்கையும்**

பிற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடாமையைத் தனது பிரதான அயலுறவுக் கொள்கையாகச் சீனா கொண்டுள்ளது. இன்றுவரை அதைக் கடைப்பிடித்து வருகிறது.

சீனா, மாவோ காலத்தில் சோசலிச நாடாக இருந்தவரை,விடுதலைப்போராட்டங்களை ஆதரித்தது. இன்றுமுதலாளித்துவ நாடாகமாறிய பிறகு,ஆக்கிரமிப்பு அரசுகளுக்கு ஆயுதங்களை விற்பதாக ஆகிவிட்டது. ஆனால், இன்றும் மூன்றாமுலக நாடுகளின் மிகப்பெரிய அச்சுறுத்தல் சீனா அல்ல.

இலங்கையின் மீதான ஆதிக்கத்துக்கான அவா, சீனாவினுடையது என்று முடிவுக்கு வருதல் கடினம். ஆனால் சீனா, இலங்கையில் செல்வாக்குச் செலுத்துகிறது என்பதை மறுக்கவியலாது. குறிப்பாக; சீனா முன்னெடுத்துள்ள 'ஒருபட்டி ஒருவழி' திட்டத்தில், இலங்கை முக்கிய பங்காளியாகும்.

இப்போது சிலர், சீன ஏகாதிபத்தியம் பற்றிப் பேசுகின்றனர். அதில் சிங்கள ஏகாதிபத்தியம் பற்றிப் பேசி வந்த தமிழ்த் தேசியவாதச் சிறுபிள்ளைத்தனத்தின் தொடர்ச்சியையும் காணலாம். அதைவிடச் சீனா, இந்தியாவை முற்றுகையிடத் திட்டமிடுகிறது என்று சொல்லும் சீனாவின் 'முத்து மாலைக்' கதை, இன்னமும் தொடர்கிறது.

இந்தியாவுக்கே இல்லாத இந்தக் கவலை, இங்கே உள்ளவர்களுக்கு ஏன் வருகிறது என்பதைக் கவனித்தால், இலங்கையை இலக்குவைக்கும் மேற்குலகிடமிருந்து கவனத்தைத் திருப்புகிற முயற்சி என்றே கருதவேண்டும். இப்பிரசாரம், குறிப்பாகத் தமிழரிடையே முக்கியத்துவம் பெறுவதும் கவனத்துக்குரியது.

சீனா சோசலிச நாடல்ல. அது, ஏகாதிபத்திய எதிர்ப்பில் அக்கறையுடைய நாடுமல்ல; அது தீவிரமாக முதலாளித்துவப் பாதையில் போகிறது என்பதிலும் ஐயமில்லை. அது ஒரு முதலாளித்துவ நாடு என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஒரு வலிய முதலாளித்துவ அரசு காலப்போக்கில் ஏகாதிபத்தியமாக வளரும் வாய்ப்பையும் நாம் மறுப்பதற்கில்லை.

ஆனால், சீனா ஏலவே ஒரு ஏகாதிபத்திய நாடா என்பதில் கடும் கருத்து வேறுபாடுகள் உள்ளன. எவ்வாறாயினும் மேற்குலகின் பொருளாதாரச் சரிவு, சீனாவின் முதலாளித்துவத்தை ஆதிக்க நிலைக்குக் கொண்டுவரும் வாய்ப்பையும் அதன் விளைவுகளையும் புறக்கணிக்க இயலாது. எவ்வாறோ ரஷ்யாவைத் தங்களுடன் அரவணைக்க ஆயத்தமாயிருந்த முதலாளித்துவ வல்லரசுகள் (ஜி7 எனப்படும் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான்) சீனாவை எட்டத்தில் வைக்க விரும்புகின்றன. சீனாவுக்கு மேற்குலகுடன் ஓர் ஆழமான முரண்பாடு உள்ளமை முக்கியமானது.

ஏகாதிபத்திய நாடுகள் வழமையாகக்கடைப்பிடிக்கும் பல நடைமுறைகளைச் சீனா இன்னமும் கடைப்பிடிக்கத் தொடங்கவில்லை. அவற்றில், சீனா அந்நிய நாடுகளில் படைத்தளங்களை நிறுவாமையும் உள்நாட்டு அலுவல்களிளோ ஆட்சிமாற்றத்திலோ ஈடுபடாமையும் முக்கியமானவை.

அதைவிட, நேரடியான உற்பத்தி முதலீடுகள் என்று வருகின்றபோது, இன்னமும் சீனாவுக்குள் நுழைக்கிற முதலீடுகளின் அளவு சீனாவின் அயல் முதலீடுகளிலும் அதிகமாகவே உள்ளது. சீன மக்களின் மலிவான உழைப்புச் சுரண்டப்படுகிறது. இது நிரந்தரமல்ல. சீனா ஒரு ஏகாதிபத்தியமாக முழுடையடைய இன்னஞ் சிலகாலம் எடுக்கும்.

இதனாலேயே இலங்கை விடயத்தில் சீனாவை ஏனைய நாடுகளில் இருந்து விலக்கிப் பார்க்க வேண்டியுள்ளது. இலங்கை மீதான செல்வாக்கு எதற்கானது என்பதில் வேறுபாடுண்டு. இந்தியாவிற்குத் தனது தென்னாசிய மேலாதிக்கத்திற்கு இலங்கை மீது செல்வாக்க அவசியம். சீனாவுக்குத் தனது கடல் வணிகம், பாதுகாப்புப் போன்றவற்றுக்கு எதிரான அமெரிக்க மிரட்டலையும் முற்றுகையையும் தவிர்க்க இந்து சமுத்திரப் பிரதேசத்தில் நட்புச் சக்திகள் தேவை.

சீனாவுக்கு எதிராக, இலங்கையை அமெரிக்கா பாவிக்கஇயலாமல்இருப்பதுசீனாவுக்குப்போதுமானது. கடந்த 60 ஆண்டுகளாக இலங்கையின் எந்த ஆட்சி மாற்றமும் சீனாவின் எந்தத் திசைமாற்றமும் இலங்கை - சீன உறவைக் குலைக்காமல் பாதுகாப்பதில் சீனா கவனமாக இருந்துள்ளது. எனவே, சீன நோக்கங்களை இந்திய, அமெரிக்கநோக்கங்களினின்று விலக்கிப் பார்க்க வேண்டியுள்ளது.

நிறைவாகச் சொல்ல வேண்டிய செய்தியொன்றுண்டு. சீனாவின் பொருளாதார ஆதிக்கமோ, இராணுவச் செல்வாக்கு, அரசியல் குறுக்கீடோ இலங்கைக்கு நல்லதல்ல. வேறு வல்லரசு எதுவுமே குறுக்கிடுவதை எதிர்ப்பவர்கள், சீனச் செல்வாக்கை விமர்சிப்பது நேர்மையானது. ஓர் அந்நிய ஆதிக்கத்தை வரவேற்கவேண்டி,இன்னொன்றின் ஆதிக்கம்வரக்கூடும் என்று மிரட்டுவது இலங்கையை நேசிக்கும் எவரதும் நிலைப்பாடாகாது.

**தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ**


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

At Need Funeral Arrangements



Vilosanan Sivatharman
416-993-0826

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:
• Vistation
• Funeral & Memorial Service
• Reception • Burial • Cremation

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



Christeen Seevaratnam
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?


Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost at today's prices
• Convenient time payments
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

1911 Woodbine Ave, Markham
ON, L3R 5G1
www.chapelridgefh.com
info@chapelridgefh.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Are you HARD TO INSURE?

உங்களுக்கான காப்பீட்டைப் பெற்றுக்
கொள்ள கடினமாக உள்ளதா?

Have you ever been REFUSED LIFE
INSURANCE in the past?

NO MEDICAL
for up to $500,000 in coverage

தற்போது $500,000 வரையான
காப்புறுதியை மருத்துவப் பரிசோதனைகள்
எதுவும் இன்றி இலகுவாகப் பெற்றுக்
கொள்ளலாம்.

Payments start in the 2ND MONTH*

*Applicable on monthly payment plans only.

Call us today

Bamathi Ramthas, CLU, CHS
905-999-8023

Karthiga Gnanachandran, CLU, CHS
416-909-7805

iNFORCE LIFe
Financial Services Inc.
Delivering Promises. Building Trust.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Inforce Life காப்புறுதி நிறுவனத்தின் Inforce Symposium 2019, $4300 தாயக நிதி பங்களிப்பும்













Inforce Life காப்புறுதி நிறுவனத்தின் கிளை நிறுவனமான Inforce Symposium இன் காப்புறுதி முகவர்கள் மற்றும் நிதி, முதலீடு ஆலோசனை துறை சார்ந்த வர்த்தகர்களுக்கான ஒருநாள் முழுநேர கருத்தரங்கு Inforce Symposium 2019 @ Scarborough Convention Centre on Oct 04,2019.அன்று நடைபெற்றது

Inforce Life நிறுவன அதிபர் சந்திரன் ராசலிங்கம் மற்றும் செந்தூரன் கணேசராஜா வழிநடத்தலில் நிதி நிர்வாக பல்துறை சார் அனுபவ நிபுணர்கள் கலந்து சிறப்பித்தார்கள் .

Inforce Life காப்புறுதி நிறுவனம் இந்த வருடம் இகுருவியினுடாக தாயகத்துக்கு 4300 கனேடிய டொலர்களை ஈழத்தில் உள்ள சிவபூமி அறக்கட்டளைக்கு வழங்கியிருந்தது.





## Grand Opening First Optical



Grand Opening First Optical @ Scarborough Professional Centre 1371 Neilson Road on Oct 05,2019.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபிரியாவின் "கலைக்கோலங்கள்"

## @ J & J Swagat Banquet Halls,on Oct 05,2019.







யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தின் விரிவுரையாளரான திரு .ஜஸ்டின் தைரியநாதனின் நெறியாள்கையில் நம் கனடிய கலைஞர்கள் இணைந்து பாரம்பரிய கலை கூத்து இசை நாடக வடிவங்களை "தமிழ் ஆடல் ","குவேனி","யாழ்பானன்" என்ற மூன்று வித்தியாசமான பெயர்களில் மேடையேற்றி கலைக்கோலங்கள் நிகழ்வை அனைவரின் மனதில் பதிய வைத்தன

## Experts Education Centre கல்வி நிறுவனம் நடத்திய ஒன்றாரியோ மட்டத்திலான கணித போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா






Experts Education Centre கல்வி நிறுவன அதிபர் ரூபன் குகதாசன் அவர்களின் வழிநடத்தலில் ஒவ்வொரு ஆண்டும் கனேடிய ஒன்றாறியோ மாகாண மட்டத்தில் நடாத்தப்படும் கணித பொது அறிவு போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா ஒக்டோபர் மாதம் 6 ம் திகதி ஐயப்பன் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது . இதில் சுமார் 200 மாணவர்களும் அவர்களுது பெற்றார்களும் பங்குபற்றி சிறப்பித்தார்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவில் தமிழ்ச் சமூக மையம்



கனடாவில் தமிழ்ச் சமூக மையம் (Tamil Community Centre) ஒன்றை அமைப்பதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென கனடாவில் உள்ள முக்கிய தமிழ் அமைப்புகளை உள்ளடக்கிய 8 பேர் கொண்ட வழிப்படுத்து குழுவொன்று சமூக ஆர்வலர்களின் கடின முயற்சியினால் கடந்த மார்ச் மாதம் உருவாக்கப்பட்டிருந்தது.

இந்த வழிநடத்தல் குழு இற்றை வரையான முன்னெடுப்புகள் குறித்தும் தமிழ்ச் சமூக மையம் உருவாக்கப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்தும் ஒக்டோபர் 16 ம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு நிகழ்வில் கலந்துரையாடப்பட்டது .

## யாழ் இந்து கல்லூரி சங்கம் கனடா வழங்கிய "கலையரசி - 2019"













யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சங்கம் கனடாவின் கலை மரபுரிமைக் கழகத்தின் கலையரசி 2019 மிகச் சிறப்பாக நடந்தேறியிருக்கின்றது. இவ்வாண்டிற்கான நிகழ்ச்சிகள் மரபுரிமை, பாரம்பரியக் கலைகளின் நிகழ்த்துகைகள், கலைகளினூடாக அரசியல் பேசுதல் ஆகியவற்றினை நோக்குகளாகக் கொண்டு ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன. அந்த வகையில் நிகழ்வுக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சமூகத்தினர், கலை, இலக்கிய, ஆர்வலர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் நண்பர்கள், தோழர்கள் மத்தியிலிருந்து வருகின்ற நேர்மறை அம்சங்கள் எமக்கு உற்சாகமளிப்பதுடனும் எதிர்காலத்திலும் சிறப்பாக இயங்கவேண்டும் என்கிற பொறுப்புணர்வையும் தருகின்றன.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேராசிரியர் நா. சுப்ரமணியன் அவர்களும் பங்கேற்றிருந்தார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கனடாவில் கடல்கடந்து வாழும் யாழ் மருத்துவபீட முன்னாள் மாணவர்கள் ஒன்றுகூடிய நிகழ்வு







## கனேடிய தமிழ் வர்த்தக சம்மேளன தலைவராக சாந்த பஞ்சலிங்கம்












கனேடிய தமிழ் வர்த்தக முயற்சியாளர்களின் முகமாக கருதப்படும் கனேடியத் தமிழர் வர்த்தக சம்மேளனம்ஒவ்வொரு ஆண்டும் தமது உறுப்பினர்களுக்கடையிலான தேர்தல் மூலம் அதற்க்கான தலைவரையும் , நிர்வாக உறுப்பினர்களையும் தெரிவு செய்வது வழமை . அதே போன்று இந்த ஆண்டு ஒக்டொபர் மாதம் நிகழ்ந்த AGM இல்

President: **Santha Panchalingam**

Executive VP: **Thipan Raj**

VP Internal Affairs: **Murali Sivaguru**

VP Finance: **Ari Ariharan**

VP Membership: **Vina Devadas**

VP Community Relations: **Christine Seevaratnam**

Director: **Sumi Prabaharan**

Director: **Thirusenthuran Sivapatham**


Director: **William Kennedy Bernadius**

Past President: **Dilani Gunarajah**

ஆகியவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க இன்றே திட்டமிடுங்கள்?




உங்களுக்கு விரும்பிய காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி செய்யலாம்

போதுமான பாதுகாப்பே குடும்பத்தில் நிறைவான நிம்மதியைத் தரும்.

உங்களிடம் உள்ள காப்புறுதி உங்களுக்கு எவ்வாறான பாதுகாப்பைத் தருகிறது என்று அறிய வேண்டுமா? இலவச ஆலோசனைக்கு என்னை அழையுங்கள்.

Super Visa 100% Refund if Visa Denied

**திலீபன் இராமநாதன்** BBM (Hons)
**(Thileepan Ramanathan)** Dir : (647) 381-8445
ஆயுள் காப்புறுதி முகவர் Email: itsthil@yahoo.ca

ஆயுள் காப்புறுதி விலைவிபரங்கள்

| வயது | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200 000 | 10 | 15 | 11 | 15 | 12 | 15 | 14 | 19 | 18 | 26 | 21 | 34 | 26 | 62 | 45 | 99 | 71 | 167 | 113 | 294 | 204 |
| 500 000 | 10 | 28 | 18 | 28 | 19 | 29 | 23 | 36 | 8 | 51 | 37 | 76 | 54 | 143 | 99 | 232 | 163 | 405 | 270 | 705 | 491 |
| 200 000 | 20 | 17 | 14 | 18 | 15 | 20 | 16 | 26 | 21 | 40 | 29 | 63 | 43 | 116 | 79 | 204 | 137 | 309 | 208 | 481 | 316 |
| 500 000 | 20 | 34 | 23 | 34 | 24 | 37 | 28 | 50 | 38 | 80 | 54 | 136 | 83 | 268 | 178 | 482 | 324 | 734 | 500 | 1139 | 761 |
| 100 000 | ஆயுள்வரை | 49 | 44 | 58 | 52 | 69 | 61 | 81 | 69 | 103 | 86 | 122 | 107 | 154 | 128 | 201 | 168 | 269 | 229 | 360 | 308 |
| 250 000 | ஆயுள்வரை | 95 | 83 | 115 | 102 | 142 | 126 | 178 | 149 | 234 | 195 | 280 | 239 | 370 | 303 | 476 | 393 | 641 | 541 | 878 | 744 |

**Non medical- Term & Permanent Products**

| வயது | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| காப்புறுதி தொகை | காப்புறுதி வருடங்கள் | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 150 000 | 10 | 46 | 41 | 64 | 51 | 92 | 72 | 166 | 121 | 292 | 197 | 586 | 369 |
| 100 000 | 10 | 33 | 30 | 46 | 38 | 64 | 51 | 113 | 83 | 197 | 134 | 393 | 248 |
| 50 000 | 10 | 20 | 20 | 33 | 23 | 36 | 29 | 60 | 45 | 102 | 71 | 200 | 128 |
| 150 000 | 20 | 56 | 46 | 92 | 67 | 147 | 104 | 243 | 164 | 398 | 257 | 675 | 442 |
| 100 000 | 20 | 40 | 33 | 64 | 47 | 101 | 72 | 165 | 112 | 268 | 174 | 452 | 297 |
| 50 000 | 20 | 24 | 20 | 36 | 27 | 54 | 40 | 86 | 60 | 138 | 91 | 230 | 152 |
| 20 000 | ஆயுள்வரை | 45 | 37 | 49 | 41 | 61 | 52 | 80 | 66 | 111 | 86 | 157 | 117 |
| 30 000 | ஆயுள்வரை | 64 | 53 | 71 | 59 | 89 | 75 | 117 | 96 | 164 | 126 | 232 | 173 |
| 40 000 | ஆயுள்வரை | 84 | 69 | 92 | 76 | 117 | 98 | 154 | 126 | 217 | 167 | 308 | 229 |
| 50 000 | ஆயுள்வரை | 104 | 85 | 114 | 94 | 144 | 121 | 191 | 156 | 270 | 207 | 384 | 285 |
| 75 000 | ஆயுள்வரை | 153 | 124 | 169 | 139 | 214 | 178 | 283 | 231 | 402 | 306 | 573 | 425 |
| 100 000 | ஆயுள்வரை | 202 | 164 | 223 | 183 | 283 | 230 | 376 | 306 | 534 | 409 | 763 | 564 |



**Call me for your free consultation.**

Life100 INSURANCE & INVESTMENTS INC.

"Price are based on current rates and it may change time to time. condition may apply"

# கடன்தொல்லை?

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

**நாங்கள் ஒரு புதிய ஆரம்பத்திற்கு வழிகாட்டுகிறோம், இனி**

- நிம்மதியான தூக்கம்
- மீண்டும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதிலளிக்கலாம்
- ஏக்கத்தை விட்டொழிக்கலாம்
- உங்கள் மேலிருக்கும் அந்தச்சுமையை அகற்றிவிடலாம்
- உங்களைப் பற்றி பெருமையாயும், ஆனந்தமாயும் உணருங்கள்
- இனி கட்டவேமுடியாத Billகளைப்பற்றி கவலையில்லை.
- நண்பர்கள், உறவினர்களிடம் கடன் வாங்கும் சிறுமையும் இனி இல்லை

அனைத்து கடன் பிரச்சனைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**V. SRI**
Certified Insolvency Counsellor

**CREDIT SOLUTION CENTRE**

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்



80 Corporate Drive, Suite 309
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Fax: 416.439.0226
creditsolutioncentre@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துப் போர்க்கால
# எழுச்சிப் பாடல்களின் பயணம்

ஈழத்தில் போர்க்கால இலக்கியங்களின் ஆரம்பம் வீதி வழி நாடகங்களாகவும், பின்னர் இசை நாடகங்களாகவும், கதைகளாகவும், கவிதைகளாகவும், பரந்து விரிந்த போது இவற்றையெல்லாம் மீறிய கலைப்படைப்புகளாக வெளிவந்து ஆட்கொண்டவை ஈழத்துப் போர்க்கால எழுச்சிப் பாடல்கள்.

இவற்றோடு வாழ்ந்து கழித்தவருக்கு பாடல்களைக் கேட்கும் போது எழும் உணர்வுக்கு வார்த்தை அலங்காரம் கட்ட முடியாது. ஈழத்தில் குறிப்பாக எண்பதுகள், தொண்ணூறுகளில் வாழத் தலைப்பட்டவருக்கு இம்மாதிரி அனுபவங்களைக் கேட்டவுடனேயே தம் கண் முன்னே தரிசிப்பர். அவ்வளவு உணர்வு பொருந்திய வரிகளைக் கொண்டமைந்து எமது வாழ்வியலோடு அந்தக் காலகட்டத்தில்கலந்துநின்றவை ஈழத்துப்போர்க்கால எழுச்சிப் பாடல்கள்.

ஈழப் போராட்டத்தின் ஆரம்ப காலகட்டத்தில் பல இயக்கங்கள் போராட்டக் களத்தில் இருந்த அந்த எண்பதுகளில், எனது அண்ணன் முறையான ஒருவர் ரெலோ இயக்கத்தின் மீது மிகுந்த பற்றோடு இயங்கி வந்தவர். அப்போது தன்னுடைய வீட்டில் ஒரு ஒலிநாடாவை எடுத்து வந்து ஒலிபரப்பியபோது புதுமையாக இருந்தது. தமிழீழ விடுதலையை வேண்டிய பாடல்களின் தொகுப்பு அது.

தமிழ்த்திரையிசைப் பாடல்களைக் கேட்டு வளர்ந்த எமக்கு அப்போது அதைத் தாண்டிய ஜனரஞ்சக இசையாக "சின்ன மாமியே", "சுராங்கனி" போன்ற பொப்பிசைப் பாடல்களும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் காலைச் செய்தி அறிக்கையோடு வரும் ஒரு சில மெல்லிசைப் பாடல்களும் தான் அறிமுகமாகியிருந்த வேளை இந்த எழுச்சிப் பாடல்களைக் கேட்டது ஒரு புதுமையான அனுபவமாக இருந்தது. ஏனெனில் அன்றைய காலகட்டத்தில் ஈழ விடுதலையை வலியுறுத்தும் பிரச்சாரங்களுக்காப் பொதுமக்களை அணி திரள அழைக்கும் போது எல்லா இயக்கங்களுமே பொதுவில் சினிமாவில் வந்த எம்.ஜி.ஆரின் தத்துவப் பாடல்களையும் வேறு சில புரட்சிகரப் பாடல்களையுமே ஒலிபெருக்கி வழியே கொடுத்து மக்களின் கவனத்தைக் குவிக்க வைத்தார்கள்.

"அதோ அந்தப் பறவை போல வாழ வேண்டும்", "ஏமாற்றாதே ஏமாறாதே", "அச்சம் என்பது மடமையடா" போன்ற பாடல்களோடு அன்று விஜய்காந்த் நடித்த ஆரம்பகாலப் படங்களில் வந்த புரட்சிகரமான பாடல்களும், குறிப்பாக "எங்கள் தமிழினம் தூங்குவதோ", "தோல்வி நிலையென நினைத்தால்" போன்ற பாடல்களுமே பரவலான பிரச்சாரப் பாடல்களாக அறிமுகமாகியிருந்தன.

இதன் பின்னர் ஒரு இடைவெளி.

*1990* ஆம் ஆண்டு நல்லூர்த்திருவிழாவிற்குப் போகின்றேன். வழக்கம் போல அதிக நேரம் கோயிலின் உள் மினக்கெடாமல் வெளியே வந்து சந்திரா ஐஸ்கிறீமில் வாங்கிய சொக் ஐஸ்கிறீமை நக்கியவாறு திருவிழாவிற்காக முளைத்த தற்காலிகமான கடைத்தொகுதிகளில் மேய்கின்றேன். அப்போது கண்ணிற் பட்டது ஒரு அங்காடி. அங்கே குவிந்திருக்கும் தாயக வெளியீடுகளோடு "களத்தில் கேட்கும் கானங்கள்" பாடற் பேழைகள். என்னுடைய சுய நினைவுகெட்டியவரை பகிரங்கமாக ஒரு அங்காடியில் தாயக கீதங்களை விற்பனைக்காக வைத்திருந்தது அதுவே முதல்முறையாக இருந்தது. தொடர்ந்து வந்த நல்லூர்த்திருவிழாக்காலங்களில் இந்தப் பாடல்கள் கோயில் வீதிகளில் முழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

*1987* ஆம் ஆண்டு இந்திய இராணுவத்துடனான




## மாவீரம்

கடந்த கிழமை நவம்பர் 03 ம் திகதி அஜய் மற்றும் அவரது நண்பர்கள் இணைந்து 'மாவீரம்' இசைநிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்தார்கள் . முழுக்க முழுக்க மாவீர்கள் பாடல்களை கொண்டு அந்த இசை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது . அதற்க்கான விளம்பர வடிவமைப்பை இகுருவி பொறுப்பேற்றிருந்தது . இந்நிகழ்வு தொடர்பாக இந்த கட்டுரையை மீள் பிரசுரம் செய்கின்றோம் .

இந்திய இராணுவம் நாட்டை விட்டு சென்றபின்னர் , தாயகத்தில் தமிழீழ பாடல்களுக்கான களம் மிகப்பெருமளவில் தமிழீழ விடுதலை புலிகளினால் திறக்கப்பட்டது.

யாழ் பிரபலமான இசை குழுக்கள் பெருமளவிலான ஈழ விடுதலை இசை தொகுப்புகளை வெளியிட்டிருந்தார்கள் . தமிழீழ விடுதலை புலிகளின் கலை பண்பாட்டுக்கழகம் , தமிழீழ இசை குழு ஆகியவை துரித வளர்ச்சி 90 களின் பல அற்புதமான பாடல்களை உருவாக்கினார்க்ள . அக்காலத்தில் பல போராளிகள் தங்களது படைப்புகளை வழங்கினார்கள் . பல போராளிகளில் கவிஞர்கள், இசை அமைப்பாளர்கள், பக்க வைத்தியம் இசைப்பவர்கள் என போராளிகளின் இசை குழு விரித்துகொண்டு சென்றது. மூத்த தளபதிகளான பொட்டுஅம்மான், வே.இளங்குமரன் (பேபி சுப்பிரமணியம் அண்ணா) ஆகியவர்கள் கூட பாடல் வரிகளை எழுதியுள்ளார்கள் . அதில் பேபி அண்ணா எழுதிய "பண்பாட்டுக்கு இசைவாக பண்பாடு"என்ற பாடலை எழுதியிருந்தார் அப்பாடல் "பரணி பாடுவோம்" இசை தொகுப்பில் வெளிவந்தது. இப்பாடல் தமிழர்களின் பண்பாட்டையும், பொருண்மிய மேம்பாட்டையும் எடுத்தியம்பியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எதிர்பாராத யுத்தம், தொடர்ந்த மூன்றாண்டு வனவாசம் கழிந்து தமிழீழ விடுதலைப்புலிகள் சொந்த மண்ணில் வியாபித்த வேளை, இந்த "களத்தில் கேட்கும் கானங்கள்" ஒரு முக்கியமான வரலாற்றுத் திருப்புமுனை விளைந்த காலத்து உணர்வுப்பதிவுகளின் பாடல் வடிவமாக விளைந்திருக்கின்றது. ஒவ்வொரு பாடல்களுக்கும் முன்னர் கவிஞரின் அறிமுகமும் அதையொட்டிய அடி நாதத்தில் பாடல்களுமாக அமைந்திருக்கும்.

இந்திய இசையமைப்பாளர் தேவேந்திரன் இசையில் புதுவை ரத்தினதுரையின் பாடல் வரிகளை ஜெயச்சந்திரன், மலேசியா வாசுதேவன், பி,சுசீலா உள்ளிட்ட தமிழகத்து முன்னணிப் பாடகர்கள் பாடியிருந்தார்கள். "நடடா ராஜா மயிலைக் காளை நாளை விடியப் போகுது" என்று மலேசியா வாசுதேவனும், "பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே" என்ற பாடலை ஜெயச்சந்திரனும், "கண்மணியே கண்ணுறங்கு" என்று பி.சுசீலாவுமாகப் பாடிய பாடல்களோடு அந்த ஒலி நாடாவில் வந்த ஏனைய பாடல்களும் வெகுஜன அபிமானத்தைப் பெற்றுக் கொண்டன.


இன்னமும் "வீசும் காற்றே தூது செல்லு தமிழ் நாட்டிலிருந்தொரு சேதி சொல்லு" என்று வாணி ஜெயராமும் "தென்னங்கீற்றில் தென்றல் வந்து மோதும்" என்று காதலர் தம் தாயக நிலையை உணர்ந்து களமாடப் போகும் ஜோடிப் பாடலும் கூட இதில் சேர்த்தி.

அந்தக் காலகட்டத்தில் ஈழத்துப் போர்க்கால





எழுச்சிப்பாடல்களுக்கு இசை வடிவம் கொடுப்பதில் அமரர் எல்.வைத்தியநாதன் (எழாவது மனிதன் உள்ளிட்ட படங்களின் இசையமைப்பாளர்), தேவேந்திரன் (வேதம் புதிது போன்ற படங்களின் இசையமைப்பாளர் போன்றோரின் பணி வெகு சிறப்பாக அடியெடுத்துக் கொடுத்தது.

இந்திய இராணுவம் ஈழ மண்ணை விட்டு விலகிய பின்னர், ஈழப்போராட்டக் களத்திலும் முன்னர் அவ்வளவாகப் பொதுமக்களோடு அந்நியோன்யம் பாராட்டாது இருந்த போராட்ட வடிவமும் முழுமையான மக்களை ஒன்றிணைத்த போராட்ட வடிவமாக மாற்றமடைய பிரச்சாரப் பிரிவின் முயற்சிகள் தீவிரமாக அமைந்திருந்தன. இதன் முன்னோடி முயற்சிகளாக 86, 87 ஆம் ஆண்டுகளில் எங்களூர் சந்துபொந்தெல்லாம் ஒருசிறு வாகனத்தில் தியாகி திலீபன் சிறு ஒலிபெருக்கியோடு பிரச்சாரப்படுத்தியதும் நினைவுக்கு வருகிறது.

விடுதலைப் புலிகளின் பிரச்சாரப் பிரிவு மற்றும் கலை பண்பாட்டுப் பிரிவு போன்றவற்றின் களப்பணிகளுக்கு ஈழத்துப் போர்க்கால எழுச்சிப் பாடல்கள் பேருதவியாக அமைந்திருந்தன.

இந்திய இராணுவம் போன கையோடு யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் பெரும் எடுப்பிலான இசைக்கச்சேரி நடக்கிறது. அதில் தேனிசை செல்லப்பாவும், பாடகி சுவர்ணலதாவும் (இவர் தமிழ் சினிமாவின் பிரபல பாடகி ஸ்வர்ணலதா அல்ல) பங்கேற்றுச் சிறப்பித்திருந்தார்கள்.

எந்த அடக்குமுறை வாழ்விலும் சுயாதீன முயற்சி தீவிரமடையும் என்பது ஈழத்துப் போர்க்காலப் பாடல்களுக்கும் பொருத்தமாக அமைந்தது. தொண்ணூறுகளில் மீண்டும் தீவிரப்பட்ட போர்க்காலத்தில் கடுமையான பொருளாதாரத் தடை, மின்சாரத் தடை, முன்பு போல தமிழகத்தோடு இணைந்திருந்த தகவல் போக்குவரத்தும் அவ்வளவு சிறப்பாக இல்லை என்ற நிலை வந்த போது ஈழத்தில் பல தன்னிறைவு நோக்கிய செயற்பாடுகள் பிறக்கின்றன. அப்போது தான் ஈழத்துப் போர்க்கால எழுச்சிப் பாடல்களும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இன்னும் வீரியம் பெற்று எழுகின்றன. ஆனால் இம்முறை ஈழத்தின் பாடகர்களை, இசையமைப்பாளர்களை, கவிஞர்களை ஒருங்கிணைத்து அவை இன்னொரு புதிய வடிவில் மக்களை எட்டிப் பரவலான வெகுஜன அந்தஸ்தை அடைகின்றன.

பள்ளிக்காலத்தில் யாழ்ப்பாணத்துக்குச் சைக்கிள் வலித்து டியூஷன் சென்ரர் நோக்கிய பயணத்தில் அப்போது கஸ்தூரியார் றோட்டில் இருந்த இசையருவி என்ற ஒலிப்பதிவுக் கூடத்தைக் கடக்கும் போது ஏதோ ஏவி.எம் இன் ஒலிப்பதிவுக் கூடத்தைத் தாண்டுவது போல பிரமை இருக்கும். அந்த இடத்தில் தான் இப்போது லிங்கன் கூல்பார் சற்றுத் தள்ளி இருக்கிறது.

"மின்சாரம் இல்லை. ஒலிப்பதிவு செய்வது என்று சொல்வதென்றால் ஸ்பூன் மெஷினில் நாங்கள் ரெக்கோர்டிங் செய்யும் போது ஒரு ரேப்பையே கிட்டத்தட்ட ஏழெட்டு ஒலிப்பதிவு நாடாக்கள் உருவாவதற்கு பாவித்திருக்கின்றோம். "கரும்புலிகள்" தொடக்கம் பல இசைத்தட்டுக்கள் தொடங்கிய வரலாறு அப்படித்தான் இருந்தது. ஒரு பாடல் தொகுதி ஒலிப்பதிவு செய்து முடிந்த பின், மாஸ்ரர் கசற்றில் ரெக்கோர்ட் பண்ணிவைத்து விட்டு அதை அழித்து திருப்பி புதுப்பாடல்களை ரெக்கோர்ட் பண்ணுவது. அப்போது தரம் போய் விடும். அப்படியான வசதியீனங்களுக்கு மத்தியில் தான் எமது ஒலிப்பதிவு எல்லாம் நிகழ்ந்தன. அப்படியான சூழ்நிலையிலே பணியாற்றிய அத்தனை கலைஞர்களும் நினைவு கூரப்படவேண்டியவர்கள்." இப்படியாக முன்னர் எனக்களித்த பேட்டியில் அன்று எழுச்சிப் பாடல்களில் முன்னணியில் திகழ்ந்தவர்களில் ஒருவரான வர்ண இராமேஸ்வரன் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

இதே நிலையில் அப்போது எழுச்சிப் பாடல்களை விரும்பிக் கேட்ட ரசிகர்களும், ஒலிப்பதிவு நாடாவை ரேப் ரெக்கோர்டரில் பொருத்தி விட்டு, சைக்கிள் ரிம் ஐச் சுத்தி, அதில் பொருத்தியிருக்கும் டைனமோவால் மின்சாரத்தை இறக்கிப் பாட்டுக் கேட்பார்கள். அதைப் பற்றிப் பேச இன்னொரு கட்டுரை தேவை.

ஈழத்துப் போர்க்கால எழுச்சிப் பாடல்களில், அமரர் பிரம்மஸ்ரீ நா.வீரமணி ஐயர், கவிஞர் புதுவை இரத்தினதுரை, கவிஞர் காசி ஆனந்தன், பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் போன்றோருடன் மேஜர் சிட்டு போன்ற அப்போதைய போராளிகள், பின்னாளி மாவீரர்களாகிப் போனவர்களும் இணைந்துகொள்ள திரு.வர்ண இராமேஸ்வரன், திரு.பொன் சுந்தரலிங்கம், திரு எஸ்.ஜி.சாந்தன் போன்ற ஆண் பாடகருடன் பெண் பாடகிகளில் பார்வதி சிவபாதமும் பரவலான வெகுஜன அபிமானம் பெற்றுத் திகழ்ந்தனர். பின்னாளில் திருமலை சந்திரன், குட்டிக்கண்ணன் என்று இன்னும் பல்கிப் பெருகினர்.

"கடலினக்கரை போனோரே" என்ற பாடலை அந்தக் காலத்து ஈழத்தவர்களும் சொந்தம் கொண்டாடி ரசித்தனர். அதற்குப் பின்னர் நெய்தல் நிலத்துப்பெருமையைக்கொண்டாடிய பாடல்களைத் தம் தலைமேல் சுமந்து போற்றிய தொகுப்பாக ' நெய்தல்" என்ற இசைத்தொகுப்பு வெளிவந்தது.

இசைவாணர் கண்ணன் இசையில் பார்வதி சிவபாதம், சாந்தன் உட்படப் பல பாடகர்கள் பாடியிருந்தார்கள். "ஆழக்கடலெங்கும் சோழ மகராஜன்", "கடலலையே கொஞ்சம் நில்லு", "முந்தி எங்கள் பரம்பரையின் கடலம்மா", "'நீலக்கடலே", "புதிய வரலாறு" "கடலதை நாங்கள்", "வெள்ளிநிலா விளக்கேற்றும்","நாம் சிந்திய குருதி", அலையே நீயும்" என்று அந்த ஒன்பது பாடல்களுமே முத்தான பாடல்கள்.

இன்றும் நினைவிருக்கிறது தொண்ணூறாம் ஆண்டு காலத்தில நாங்கள் விலை கொடுத்து "நெய்தல்" கசற் வாங்கி, டைனமோவில மின்சாரம் எடுத்துறேடியோவில அந்தப் பாடல்களைக்கேட்டது. கூல்பார் பாட்டுக்களிலும் "நெய்தல்" பாடல்கள் தான் இடம்பிடித்தன.

என்னைப் பொறுத்தவரை "கடலினக்கரை போனோரே" என்ற சினிமாப் பாடலை எப்படி இன்னும் கேட்டுக்கேட்டு ரசிக்கிறேனோ அதே அளவு உயர்ந்த இசைத்தரத்தில் தான் பார்வதி சிவபாதம் பாடிய " கடலலையே கொஞ்சம் நில்லு" பாடலையும் சாந்தன் பாடிய "வெள்ளிநிலா விளக்கேற்றும் நேரம்" பாடலையும் ரசிக்கின்றேன், எள்ளளவும் குறையாமல்.

மேலே கழுகுக் கண்ணோடு சுற்றும் விமானங்களின் கண்ணில் அகப்படாமல் கொழும்புப் பயணத்துக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து ஊரியான், கொம்படிப் பாதையால் மேடு, பள்ளம், நீர்க்குட்டை எல்லாம் தாண்டி இரவைக் கிழித்துக் கொண்டே கிளிநொச்சியால் பயணிக்கும் தனியார் பஸ்ஸில் எழுச்சிப் பாடல்கள் களை கட்டும். ஒரு விடிகாலை வேளையில் விசிலடித்துக் கொண்டே பாடும் ஒரு எழுச்சிப் பாடல் (பாடல் பெயர் மறந்து விட்டது) அந்த நேரத்தில் கொடுத்த இனிமை இன்றும் இருபத்தைந்து வருடங்கள் கழித்தும் இனிக்கிறது.

இந்தக் காலகட்டத்தில் வேடிக்கையான சில நிகழ்வுகளும் நடந்ததுண்டு. ஊரில் இருக்கும் சின்னன் சிறுசுகளுக்கும் எழுச்சிப் பாடல்கள் மனப்பாடம். குறிப்பாக "காகங்களே காகங்களே காட்டுக்குப் போனிங்களா" போன்ற மழலைக் குரலில் ஒலித்த பாடல்கள். ஒருமுறை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியைக் கடந்து வவுனியாவுக்கான பயணத்தில் தாண்டிக்குளத்தில் வைத்து இலங்கை இராணுவச் சோதனைச் சாவடி. அந்த நேரம் பயணித்தவர்களில் ஒரு இளம் தம்பதியும், ஒரு சிறுமியும். அப்போது இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் அந்தச் சிறுமியின் துறுதுறுப்பைக் கண்டு ஒரு பாடல் பாடச் சொல்லிக் கேட்க, அந்தப் பிள்ளை "எதிரிகளின் பாசறையைத் தேடிச் செல்கிறோம்" என்று பாடவும், நல்லவேளை அவன் ஏதோ சினிமாப்பாட்டு என்று விட்டுவிட்டான்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கல்வி நோக்கில் தங்கி வாழ வரும் இளைஞர்கள் ஒளித்து மறைத்து இந்தப் போர்க்கால எழுச்சிப் பாடல்களைச் சினிமாப்பாடல்கள் போலப் பதிவு பண்ணிக் கேட்ட சம்பவங்களை அனுபவித்ததுண்டு.

புலிகளின் குரல் வானொலி பின்னர் தன் ஒலிபரப்பின் இன்னொரு பரிமாணமாக தமிழீழ வானொலியை உருவாக்கிய பின்னர் இந்த எழுச்சிப் பாடல்கள் நேயர் விருப்பப் பாடல்களாகக் கேட்டு மகிழவும் வாய்ப்பை வழங்கியது.

"ஆதியாய் அநாதியாய் அவதரித்த செந்தமிழ்" என்று பரணி பாடுவோம் பாடல் தொகுப்பிலிருந்து ஒலிபரப்பும் பாடல் எல்லாம் அந்தக் காலகட்டத்தில் பிரசித்தமானவை.

யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டிலும், தட்டாதெருச் சந்தியிலும் என்று முக்கியமான கேந்திரங்களில் பெரும் ஒலிபெருக்கி பொருத்தி இந்த வானொலி தன் ஒலிபரப்பை எல்லோருக்கும் காற்றலையில் தவழ விடும். எனவே மின்சாரம் இல்லாது பாடல் கேட்கவும், செய்தி அறியவும் வக்கற்றவர்களுக்கு அது திசை காட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


























ஈழத்தின் புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞர்கள் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி இரட்டையர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட எழுச்சிப்பாடல்கள் நாதஸ்வர இசையாகவும் வாசிக்கப்பட்டு வெளியாயின.

"செந்தமிழால் உந்தனுக்கு மாலை தொடுத்தேன் தமிழ் தெய்வமான கந்தனே உன் வீதி படுத்தேன்" என்று நல்லூர்த்திருவிழாவின்போதுகர்நாடக இசை மேடைகளுக்கு நிகராக "நல்லை முருகன் பாடல்கள்" வெளிவந்தன. ஈழத்துச் சனத்தின் துன்பியல் தோய்ந்த போர்க்கால வாழ்வியலை நல்லூர் முருகனுக்கு ஒப்புவித்துப் பாடிய அந்தப் பாடல்களை புதுவை இரத்தினதுரை அவர்கள் எழுத வர்ண இராமேஸ்வரன் பாடியிருந்தார். நல்லூர்த் திருவிழாவின்இசைக்கச்சேரியாகவும் படைத்திருந்தார்கள்.

"எங்களுடைய தேவார திருவாசகங்களிலே கூட எத்தனையோ விடுதலை உணர்வை வெளிப்படுத்தக் கூடிய பாடல்கள் இருக்கின்றது. "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" அப்படிப் பல பாடல்கள் இருக்கின்றன. அவற்றைக்கூட இவர்கள் எடுத்துப் பாடியிருக்கலாமே என்று புதுவை இரத்தினதுரை அண்ணா ஆதங்கப்பட்டார். அப்போது நான் சொன்னேன், "நீங்களே எழுதுங்களேன், நாங்கள் அவற்றை படிப்போம்" என்று. எங்களுடைய இசைக் கலைஞர்களிடம் போய்க்கேட்டபோது "இல்லையில்லை சங்கீதம் என்றால் இப்படித்தான் பாடவேணும், இப்படியெல்லாம் செய்யமுடியாது" என்ற போது நாங்கள் சவாலாக எடுத்து புதுவை அண்ணா பாடல்கள் எழுத நான் எனது கச்சேரியில் பாடினேன்" என்று இந்தப் பாடல்களின் உருவாக்கத்தை என்னோடு பகிர்ந்த வானொலிப்பேட்டியில் வர்ண இராமேஸ்வரன் அவர்கள் நினைவு கூர்ந்தார்.

"இந்த மண் எங்களின் சொந்த மண் இதன் எல்லையை மீறி யார் வந்தவன்' என்று தொடங்கும் பாடலின் முதல் அடிகளைக் கொண்டு வெளிவந்த இந்த மண் எங்களின் சொந்த மண் இசைவட்டில் இடம்பிடித்த "ஏறுது பார் கொடி ஏறுது பார்" பின்னர் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றத்தின் போதுபாடப்படும்பாடலாகஅமைந்து வருகின்றது. அதே இசைத்தட்டில் வெளியான "விண்வரும் மேகங்கள் பாடும்" பாடல் உள்ளிட்டவை பிரசித்தமானவை.

பின்னாளில் தேனிசை செல்லப்பாவால் பாடிப் பிரபலமான "அழகான அந்தப் பனைமரம்" உள்ளிட்ட பாடல்களோடு தமிழகத்தில் இருந்துமீண்டும்பிரபலபாடகர்களான எஸ்.பி.பாலசுப்ரமணியம், ஹரிஹரன், உன்னிமேனன், உன்னிகிருஷ்ணன், நித்யஸ்ரீ போன்ற பாடகர்களால் பாடி அளிக்கப்பட்ட தொண்ணூறுகளின் இறுதிப் பகுதியில் இருந்து வெளிவந்த போர்க்கால எழுச்சிப் பாடல்கள் எண்பதுகளில் இருந்த சூழலை நினைவுபடுத்துகின்றன. அறிவுமதி போன்ற தமிழகத்துக் கவிஞர்களும், உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனும் இணைந்து கொள்கின்றார்கள். இவர்களில் தேனிசை செல்லப்பாவே பரவலான கவனிப்பைப்பெற்ற பாடகராக தொண்ணூறுகளின் இறுதிப்பகுதியில்இருந்துவிளங்கினார்.

*95* ஆம் ஆண்டில் வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசாங்கம் இயங்கிய போது ஈழத்துத் திரைப்படங்களோடு, போராளிக் கவிஞர்கள், போராளிகளில் இருந்தே தேர்ந்தெடுக்கப்பட்ட பாடகர்கள் பரவலாக இந்தப் பாடல் வெளியீட்டு முயற்சிகளில் இயங்கினர். தமிழீழ இசைக்குழு வழியாக பாடல் இசைத்தட்டுகள் வெளியாயின. சமகாலத்தில் புலம்பெயர்ந்த மண்ணிலும் ஈழத்துப் போர்க்காலப் பாடல்களின் இசைத் தொகுப்புகள் அந்தந்த நாடுகளில் இருந்தும் வீரியம் பெற்று வருகின்றன. அந்த வகையில் ஜேர்மனி, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் இருந்து வெளிவந்தவை அதிகம். டென்மார்க்கில் இருந்து வெளி வந்த ஒரு சில இசைத்தட்டுகளும் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்தவை. மலேசியத் தமிழர்களால் வெளியிடப்பட்ட ஈழ விடுதலைக்கான உணர்வுபொருந்திய பாடல்கள் தனியே குறிப்பிடவேண்டியவை. *1995* ஆம் ஆண்டிலியிருந்து *2009* இறுதிக்கட்டப் போருக்கு முன்பாக வெளியான பாடல்கள் ஆயிரத்தைத் தாண்டும்.

இந்தக் காலகட்டத்தில் தமிழீழத் திரைப்படங்களின் பாடல்கள் என்ற வகையிலும் எழுச்சிப் பாடல்களின் கிளை தோன்றியது. ஈழத்துப் போர்க்கால எழுச்சிப் பாடல்களில் போராளிகளின் பங்கு, தமிழீழத் திரைப்படப் பாடல்கள், புலம்பெயர் சூழலில் பிறந்த ஈழ தேச நேசிப்பும், எழுச்சியும் மிகுந்த பாடல்கள் போன்றவை தனியே எடுத்து ஆய்வு செய்ய வேண்டியவை.

வெறுமனே போர்ப் பிரச்சாரங்கள் தாங்கிய பாடல்களாக அன்றி ஈழத்தின் இயற்கை வனப்பையும், தமிழின் சிறப்பையும் போற்றிப் பாடும் பாடல்களாகவும் இந்த ஈழத்துப் போர்க்கால எழுச்சிப் பாடல்கள் நிலைபெற்றிருந்தன.

"மீன்மகள் பாடுகிறாள்" போன்ற பாடல்களின் வழியே தமிழீழ மண்ணின் எழில் மீதான நேசிப்பும், "அழகான அந்தப் பனைமரம்" ஆகிய பாடல்கள் ஈழத்து வாழ்வியலின் நனவிடை தோய்தலாகவும், "கண்மணியே கண்ணுறங்கு" போர்க்காலத்தில் பிறந்த குழந்தைக்குரிய தாலாட்டாகவும், "படையணி நகரும்" போர்க்களத்தில் பெண் போராளிகளின் பங்கையும், "மாவீரர் யாரோ என்றால்", "மானம் என்றே வாழ்வெனக்கூறி மண்ணில் விழுந்தான் மாவீரன்" போன்ற பாடல்கள் சமர்க்களத்தில் களமாடி மடிந்த வீரர் பெருமையை எடுத்துரைப்பவையாகவும், "வெள்ளி நிலா விளக்கேற்றும் நேரம் கடல் வீசுகின்றகாற்றில்உப்பின்ஈரம்" போன்ற நல்லுதாரணங்கள் தொழிலாளர் சக்தியின் ஓசையாகவும், "செந்தமிழால் உந்தனுக்கு மாலை தொடுத்தேன்" பாடல்கள் வழியே போர்க்காலத்துப் பக்தி இசை வடிவமாகவும், "கிட்டடியில் இருக்குதடா விடுதலை", "பட்டினி கிடந்து" ஆகிய பாடல்கள் நம்பிக்கையை ஏற்படுத்தி நிற்பவையாகவும், "என் இனமே என் சனமே" போன்ற பாடல்களால் போராளிக்கும் சமூகத்துக்குமான உறவின் வெளிப்பாடாகவும், "பூத்தகொடி பூவிழந்து" பாடல்களின் வழியே போரின் ரணத்தைப் பதிவு செய்தும், "காகங்களே காகங்களே" இன்ன பிற பாடல்களால் சிறுவரை இணைக்கும் போர்க்கால இசைப் பாடல்களாகவும்,

"பொங்கிடும் கடற்கரை ஓரத்திலே" வழியாக தலைவனின் மாட்சிமையையும் காட்டி நிற்கும் பாடல்களாகவும் இந்த ஈழ எழுச்சிப் பாடல்களின் அடித்தளம் வெறுமனே பிரச்சாரப் பாடல்கள் அன்றிப் பரந்து விரிந்து பல்வேறுவிதமான பின்னணியோடு அமைந்திருப்பது அவற்றின் தனித்துவத்தைப் பறைசற்றுகின்றன. இன்னொருபுறம் தனியே மெல்லிசை என்ற கட்டுக்குள் நில்லாது சாஸ்திரிய இசையை அரவணைத்தும், பைலா போன்ற மேலைத்தேய இசைவடிவங்களைத் தொட்டும் (உதாரணம் அப்புஹாமி பெற்றெடுத்த) இந்தப் பாடல்களின் வடிவம் ஒரு கட்டுக்குள் நில்லாது அமையப்பெற்றிருக்கின்றன.

"ஆசையினால் பாற்கடலை நக்கிக் குடிக்க முனையும் பூனை" என்று வான்மீகி இராமாயணத்தைத் தமிழில் எழுதும் போது கம்பர் சொன்ன அவையடக்கம் போன்றது என்பதுகளின் இறுதி தொட்டு 2009 வரையான முப்பது ஆண்டுகளில் இயங்கிய ஈழத்துப் போர்க்கால எழுச்சிப் பாடல்களைத் தொட்டுப் பேசுவது.

பல்கலைக் கழக மட்டத்தில் இன்னமும் விரிவாக ஆய்வுக்குட்படுத்த வேண்டிய ஒரு இசைப்பண்பாடு இந்தப் போர்க்கால எழுச்சிப் பாடல்களின் பங்களிப்பு.

**- கானா பிரபா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநிலை மாற்றம் தொடர்பான பாரீஸ் ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறவுள்ளது. இது தொடர்பான தங்கள் நோக்கத்தைவிளக்கும் அதிகாரப்பூர்வ அறிவிக்கையை ஐ.நாவிடம் அளித்தது அமெரிக்கா.

இந்த அறிவிக்கை, பாரீஸ் ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா முழுமையாக வெளியேற வழிவகுக்கும். அதற்கு ஓராண்டாகும்.



# காலநிலை மாற்றம்: பாரீஸ் ஒப்பந்தத்திலிருந்து வெளியேறுகிறது அமெரிக்கா

## பாரீஸ் ஒப்பந்தம்

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள 188 நாடுகள் இணைந்து உருவாக்கியதுதான் பாரீஸ் ஒப்பந்தம்.

தொழிற்புரட்சி காலத்துக்கு முந்தைய நிலையைவிட இரண்டு டிகிரி செல்ஷியசுக்கு மிகாமல் புவியின் வெப்பநிலையைப் பாதுகாக்கவேண்டும் என்ற இலக்கை பாரீஸ் காலநிலை ஒப்பந்தம் முன்வைத்தது.

பராக் ஒபாமா அதிபராக இருந்த காலத்தில் இதற்கு அமெரிக்காவும் ஒப்புக் கொண்டது.

ஆனால், தற்போதைய அதிபர் டொனல்ட் டிரம்ப் தொடர்ந்து இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தார். அமெரிக்காவை பொருளாதார ரீதியாக பின் தள்ள மேற்கொள்ளப்படும் சர்வதேச சதி என இதை விமர்சித்தார்.

தேர்தல் பிரசாரத்தின் போதும், தாம் ஆட்சிக்கு வந்தால், பாரீஸ் ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறும் என்று உறுதி அளித்தார்.

பாரீஸ் ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறுவது மோசமான விளைவுகளை ஏற்படுத்துமெனசர்வதேசமற்றும்ஐரோப்பியவிவகார மையம் கடந்த டிசம்பர் 2018ல் எச்சரித்திருந்தது.

பிற நாடுகளும் அமெரிக்காவை பின்பற்றலாம் என்றும் அந்த மையம் கூறி இருந்தது.

துருக்கி மற்றும் ரஷ்யா பாரீஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தாலும், ஒப்பந்தப்படி செயல்படவில்லை என்றும் அந்த மையம் குறிப்பிட்டிருந்தது.

## 'நான் பாரீஸுன் பிரதிநிதி அல்ல'

ஆற்றல் துறையில் அமெரிக்காவை 'சூப்பர் பவர்'ஆக மாற்றுவேன் என தேர்தல் சமயத்தில் டிரம் சூளுரைத்தார்.

பாரீஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் அமெரிக்காவின் ஆற்றல் துறை மீது ஒபாமா ஒரு போர் தொடுத்துள்ளார் என்றும் அப்போது கூறி இருந்தார்.

கடந்தாண்டே பாரீஸ் ஒப்பந்தத்திலிரிந்து வெளியேற டிரம்ப் முடிவு செய்து அதற்கான பணிகளை தொடங்கிவிட்டார்.

அப்போது, "நான் பாரீஸின் பிரதிநிதி அல்ல. பிட்ஸ்பெர்கின் பிரதிநிதி. அமெரிக்கா நலனுக்கு எதிரான எந்த ஒப்பந்தத்திற்கும் எதிராக மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவேன் அல்லது நான் வெளியேறுவேன்," என கூறி இருந்தார்.

ஆனால், எந்த பேச்சுவார்த்தையும் மேற்கொள்ளாமல், டிரம்ப் வெளியேறிவிட்டதாக தகவல்கள் கூறுகின்றன.

சர்வதேச அளவிலான கார்பன் வெளியேற்றத்தில் அமெரிக்காவின் பங்கு 15 சதவீதம்.

## பாரீஸ் ஒப்பந்தம் - விரிவான பார்வை

பல ஆண்டுகள் நடைபெற்ற சிக்கலான பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் பருவநிலை மாற்றம் தொடர்பான, உலக நாடுகளின் முதல் ஒப்பந்தமான பாரீஸ் பருவநிலை ஒப்பந்தம் 2015ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கையெழுத்தானது.

தொழிற் புரட்சி ஏற்பட்ட காலத்தில் இருந்த அளவிலிருந்து சராசரியாக இரண்டு டிகிரி உலக வெப்பமயமாதலைக் குறைப்பதை இது இலக்காகக் கொண்டிருக்கிறது.

பலத்த புயல்கள், வறட்சிகள் மற்றும் கடல் நீர்மட்டம் உயர்தல் உள்பட ஆபத்தான பருவநிலை மாற்றங்களை தவிர்ப்பதற்கு இந்த இலக்கு முக்கியமானது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

தொழிற் புரட்சி மேற்கொள்ளப்பட்ட காலத்திற்கு முன்பைவிட பூமியில் ஏற்கெனவே ஒரு டிகிரி வெப்பம் இப்போது அதிகரித்திருக்கிறது.

எரியாற்றல் உற்பத்தி, போக்குவரத்து, விவசாயம், குடியேற்றம் ஆகியவற்றிற்காக காடுகளை அழிப்பதால் மனிதர்கள் வெளியேற்றக்கூடிய பசுங்குடில் வாயுக்களால் முக்கியமாக பூமியின் வெப்பம் அதிகரிப்பதாக பருவநிலை அறிவியல் குற்றம் சாட்டுகிறது.

இந்தவாயுக்கள், குறிப்பாககார்பன் டைஆக்ஸைடு வளி மண்டலத்தில் செறிவாகி, சூரியனிடம் இருந்த வருகின்ற வெப்பத்தை பூமியில் தங்கிவிட செய்கிறது.

இவ்வாறு உலகம் வெப்பமடைவதுதான் பருவநிலை மாற்றத்திற்கு காரணமாவதாக விஞ் ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

அதனால், பாரீஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தின் முக்கிய குறிக்கோள் பூமியின் வெப்பத்தை இரண்டு டிகிரி குறைப்பதாக நாம் கூறுகின்றபோது, இந்த ஒப்பந்தத்தில் இணைந்திருக்கும் நாடுகள் தங்களுடைய கார்பன் வெளியேற்றத்தை கடுமையாக குறைக்க வேண்டியிருப்பதை குறிக்கிறது.

மாசு வெளியேற்றம் குறைவான எரிபொருள் ஆதாரங்களுக்கு மாறுவது செலவு குறைவானது, நீண்டகாலம் நிலைத்திருப்பது என்று நிபுணர்கள் நம்பினாலும், புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டை குறைப்பது பொருளாதாரத்தில் நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது மிகப்பெரிய சவாலாக இருக்கும்.

## இந்த ஒப்பந்தம் "அமலுக்கு வருவது" எதைக் குறிக்கிறது?

இந்த ஒப்பந்தம் செயல்பாட்டுக்கு வருவது என்பது, இது சர்வதேச சட்டமாவதை குறிக்கிறது என்று ஐக்கிய நாடுகள் அவையின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட நாடுகள், தாங்கள் அளித்திருக்கும் உறுதிமொழியை நிறைவேற்ற கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதற்குச் செயல்படத் தொடங்க வேண்டும்.

இந்த ஒப்பந்தம் சட்டப்பூர்வமாக கட்டுப் படுத்தாமல் இருப்பதால், ஒவ்வொரு நாடுகளின் தன்னார்வ அர்ப்பணிப்பையும் செயல்பாடுகளையும் சார்ந்துதான் இது அமைகிறது.

மிக விரைவாக நடைமுறைக்கு வந்த முக்கிய சர்வதேச ஒப்பந்தங்களில் பாரீஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தமும் அடங்குகிறது.

தொடக்கத்தில் இது, 2020 ஆம் ஆண்டு நடைமுறையாவதாக இருந்தது. அந்த நேரத்தில் கூட பல நாடுகள் இதனை ஏற்றுகொள்ளாது என்று பலரும் நம்பினர்.

இந்த ஒப்பந்தம் செயல்பாட்டிற்கு வருவதற்கு உலகின் ஒட்டுமொத்த பசுங்குடில் வாயுக்களில் குறைந்தது 55 சதவீதத்தை வெளியேற்றுகின்ற 55 நாடுகள் இதனை ஏற்றுக்கொள்வது அவசியமாகியது.

எதிர்பாராத விதமாக அதிக மாசு வெளியேற்ற நாடுகளான சீனா, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இதனை ஏற்றுகொண்டதால், கட்டாயமாக தேவைப்படுகின்ற அளவை எட்டிய இந்த ஒப்பந்தம் செயல்பட தொடங்கியிருக்கிறது.

கவனிக்க... ஒபாமா காலத்தில் அமெரிக்காவும் தொடக்க காலத்திலேயே இந்த ஒப்பந்தத்தை ஏற்று கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுகப்பிரசவம் - சிசேரியன் :

# குழந்தைகள் உடல்களில் மாறுபட்ட பக்டீரியாக்கள்



சிசேரியன் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கு நம்ப முடியாத வகையில், சுகப்பிரசவக் குழந்தைகளைவிட குடல்களில் பக்டீரியாக்களின் நிலையில் மாறுபாடு காணப்படுகிறது என்று இந்தத் துறையில் நடந்துள்ள மிகப் பெரிய ஆய்வில் தெரியவந்துள்ளது.

நுண்ணுயிரிகள் பற்றிக் கண்டறியப் பட்டுள்ள இந்த முதல்நிலைத் தகவல்கள் நோய்த் தடுப்பு மண்டலத்தில் ``சமன்படுத்தும்'' காரணிகளாக அமையக் கூடும் என்று பிரிட்டன் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சிசேரியன் மூலம் பிறந்த குழந்தைகள் வாழ்வின் பிற்காலத்தில் ஏன் சில ஆரோக்கியக் குறைபாடுகளுக்கு ஆளாகிறார்கள் என்பதற்கான காரணத்தை விளக்குவதற்கு இந்தத் தகவல்கள் உதவக்கூடும் என்கிறார்கள்.

#### குடல் பக்டீரியாக்கள் எந்த அளவுக்கு முக்கியமானவை?

மனித உடல் என்ற அமைப்பு முழுமையாக மனித செல்களை மட்டுமே கொண்டு இயங்குவதல்ல. மாறாக மனித உடலின் செல்களில் பாதியளவு பக்டீரியாக்கள், வைரஸ்கள், பூஞ்சைகள் போன்ற நுண்ணுயிரிகளால் ஆனது.

அவற்றில் பெரும்பாலானவை நமது குடலில் வாழ்கின்றன. தொகுப்பாக அவை மைக்ரோபயோம் என்ற நுண்ணுயிரிகளின் தொகுப்பு என்று குறிப்பிடப்படுகின்றன.

ஒவ்வாமை, உடல் பருமன், பெருங்குடல் அழற்சி நோய், பார்க்கின்சன் எனப்படும் நரம்பியல் கோளாறுகளுடன் தொடர்புடையதாகவும், புற்று நோய் மருந்துகள் செயற்படுமா என்பதுடன் தொடர்புள்ளதாகவும், மன அழுத்தம் மற்றும் மனச்சிதைவுக்கான நோய்களுக்கான மருந்துகள் பலன் தருமா என்பதுடன் தொடர்புள்ளதாகவும் இந்த மைக்ரோபயோம் உள்ளது.

பர்மிங்ஹாம் பல்கலைக்கழகமும், வெல்கம் சாங்கர் இன்ஸ்டிடியூட், யு.சி.எல். அமைப்பும் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டன. கிருமிகள் இல்லாத தாயின் கருவறையில் இருந்து கிருமிகள் நிறைந்த உலகிற்கு வந்தவுடன், இந்த மைக்ரோபயோம் எப்படி உருவாகிறது என்பதை இந்த ஆய்வு கவனித்தது.

சுமார் 600 குழந்தைகளின் முதல் ஒரு மாத காலத்துக்கான இடுப்புத் துணிகள் பரிசோதனைக்காக எடுத்துக்கொள்ளப் பட்டன. சில குழந்தைகளின் ஓராண்டு காலம் வரையிலான மலம் பரிசோதனைக்கு எடுக்கப்பட்டது.

சுகப்பிரசவத்தில் பிறந்த பெரும்பாலான குழந்தைகளுக்கு, தங்களுடைய தாயிடம் இருந்து ஆரம்ப நிலை பக்டீரியாக்கள் கிடைக்கின்றன என்பது இந்த ஆய்வின் மூலம் தெரிய வந்தது. Nature என்ற இதழில் இதன் முடிவுகள் வெளியாயின.

ஆனால் சிசேரியன் மூலம் பிறந்த குழந்தைகளுக்கு மருத்துவமனையில் காணப்படும் கிளெப்ஸியெல்லா மற்றும் சூடோமோனாஸ் போன்ற கிருமிகள் அதிக அளவில் இருப்பதும் இந்த ஆய்வின் மூலம் தெரிய வந்தது.

``ஆரோக்கியத்தை பாதிக்கும் கிருமிகள் எந்த அளவுக்கு இதில் இருக்கின்றன என்பது எனக்கு ஆச்சரியம் தருவதாகவும், அச்சம் தருவதாகவும் இருந்தது'' என்று வெல்கம் சாங்கர் இன்ஸ்டிடியூட்டைச் சேர்ந்த டாக்டர் ட்ரெவர் லாவ்லே தெரிவித்தார்.

``மொத்த மைக்ரோபயோமில் அது 30 சதவீதம் வரை இருக்கலாம்.''

``ஆனால், மனித உடலுக்கு ஏற்ற உயிரிச்சூழலை பிறப்பின் போதே எப்படி ஏற்படுத்துவது என்ற, அற்புதமான தகவல் தொகுப்பு நமக்கு கிடைத்திருக்கிறது என்பது நமக்கு மகிழ்ச்சி தரும் தகவலாக உள்ளது'' என்று அவர் கூறுகிறார்.

#### மைக்ரோபயோம்

நீங்கள் மனித உடலுக்கு சொந்தமான உயிரணுக்களைவிட, பிற நுண்ணுயிரிகள் அதிகம் கொண்டவராக இருக்கிறீர்கள். உங்கள் உடலில் உள்ள அனைத்து செல்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், 43 சதவீதம் மட்டுமே மனித செல்களாக இருக்கும்.

மீதி நமது மைக்ரோபயோமாக இருக்கும். அது பக்டீரியாக்கள், வைரஸ்கள், பூஞ்சைகள் மற்றும் ஒற்றை செல்களைக் கொண்ட ஆர்ச்சியா கிருமிகளை உள்ளடக்கியதாக இருக்கும்.

மனிதனின் மரபணுத் தொகுப்பு - மானிடருக்கான மரபணு தகவல்கள் கொண்ட முழு தொகுப்பு - என்பது மரபணுக்கள் என கூறப்படும் 20,000 தகவல்களைக் கொண்டதாக இருக்கிறது. ஆனால் நமது மைக்ரோபயோமில் உள்ள இந்த அனைத்து மரபணுக்களின் எண்ணிக்கையை ஒன்றாகக் கணக்கிட்டால் இரண்டு மில்லியன் முதல் 20 மில்லியன் நுண்ணுயிரி மரபணுக்கள் வரும்.

நமது மைக்ரோபயோம் என்பது, நம்முடைய `இரண்டாவது மரபணுத் தொகுப்பு' என்றும் கருதப்படுகிறது.

#### இது குழந்தையின் ஆரோக்கியத்தைப் பாதிக்குமா?

சிசேரியன் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கு டைப் -1 சர்க்கரை நோய், ஒவ்வாமைகள் மற்றும் ஆஸ்துமா போன்ற சில குறைபாடுகள் வருவதற்கு அதிக ஆபத்துகள் உள்ளன என்பது ஏற்கெனவே தெரிந்த விஷயம்.

கோளாறான நோய்த் தடுப்பு மண்டலம் - நோய்த் தாக்குதலுக்கு எதிராக உடலின் தற்காப்பு மண்டலம் பாதித்தால்- அவை அனைத்திலுமே ஒரு பங்கு வகிக்கும்.

**தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் இந்த வகை இரத்த பந்தத்தைப் பாதுகாக்க வேண்டும்.**

சுகப்பிரசவம் மூலம் பிறந்த குழந்தைகளுக்கும், சிசேரியன் மூலம் பிறந்த குழந்தைகளுக்கும் இடையிலான வித்தியாசம் காலப்போக்கில் மாறிவந்து, அவர்களின் முதலாவது பிறந்த நாளுக்கு அவை சமநிலையை எட்டுகின்றன.

எனவே, நமது உடலில் முதலில் நுழைந்து ஆதிக்கம் பெறும் கிருமிகள்தான், நமக்கு நல்லவர் யார், கெட்டவர் யார் என்பதை நம் நோய்த் தடுப்பு மண்டலத்துக்குப் பயிற்சி தருவதற்கு உதவி செய்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பது இந்தத் துறையில் செல்வாக்கு பெற்ற கருத்தாக இருக்கிறது.

``குழந்தை பிறக்கும் தருணம் ஒரு வகையில் ``சமன்பாட்டு'' நிலையை நிர்ணயிக்கும் தருணமாக இருக்கும் என்பது கருதுகோளாக உள்ளது. அதுதான் எதிர்கால வாழ்வில் நோய்த் தடுப்பு மண்டலத்தின் செயல்பாட்டை நிர்ணயிப்பதாக உள்ளது என கருதப்படுகிறது'' என்று ஆராய்ச்சியாளர் டாக்டர் நிகெல் பீல்டு கூறுகிறார்.

குழந்தை பயோம் ஆய்வுத் திட்டத்தில் - என்ற இந்த ஆய்வு குழந்தைப் பருவத்தில் இருந்து குழந்தைகளைக் கண்காணிக்கும்போது இன்னும் தெளிவான தகவல்கள் கிடைக்கலாம்.

#### குழந்தையின் மைக்ரோபயோமியை வேறு எப்படி நீங்கள் மாற்றலாம்?

குழந்தையின் மைக்ரோபயோமில், அதன் பிறப்பு நேரத்துக்கு முக்கியப் பங்கு உள்ளது. ஆனால் நுண்ணுயிர்க் கொல்லிகள் எனப்படும் என்டிபயாடிக் மருந்துகள் சாப்பிடுவது, குழந்தைக்கு தாய்ப்பால் தரப்படுகிறதா இல்லையா என்பது போன்ற விஷயங்களும் நமது நுண்ணுயிரி மற்றும் மனித செல்களுக்கு இடையிலான உணர்ச்சிபூர்வமான உறவில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

இந்தத் துறையில் முன்பு நடந்த ஆய்வுகளின் மூலம் கிடைத்த முடிவுகளைத் தொடர்ந்து, சிசேரியன் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கு, தாயின் பிறப்புறுப்பில் இருந்து திரவத்தை எடுத்து அதன் முகத்திலும், வாயிலும் தடவும் `வெஜைனல் சீடிங்' என்ற நடைமுறை பின்பற்றப்படுகிறது.

இருந்தபோதிலும், சுகப்பிரசவத்தில் பிறக்கிற குழந்தைகள், சிசேரியன் மூலம் பிறக்கும் குழந்தைகளைவிட ஒன்றும் அதிகமான பெண் பிறப்புறுப்பு பக்டீரியாக்களைப் பெறுவதில்லை என்று ஆய்வில் தெரியவந்துள்ளது.

மாறாக, பிரசவ வலி நேரத்தில் தாயின் மலக்கழிவின் மீது படுவதன் மூலம் அம்மாவிடம் இருந்து குழந்தைக்கு இந்த பக்டீரியாக்கள் பரவுகின்றன.

எதிர்காலத்தில் சிசேரியன் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கு, நல்ல பக்டீரியாக்களின் கலவை ஏதாவது பிறந்தவுடனே தரப்படலாம், அதன் மூலம் நுண்ணுயிரிகள் நிறைந்த உலகில் அதன் பயணத்தை சரியான பாதையில் கொண்டு செல்ல வழி ஏற்படுவதாக இருக்கலாம்.

``இந்தக் கிருமிகள் நமக்காக உருவாக்கப்பட்டவை, நாம் அவற்றுக்காக உருவாக்கப்பட்டிருக்கிறோம்'' என்கிறார் டாக்டர் லாவ்லே.

``என்னுடைய முக்கியமான ஆர்வம் என்னவெனில் - தாயிடம் இருந்து குழந்தைக்கு கடத்தப்படும் கிருமிகள் எவை என்பது பற்றியது தான். இது தற்செயலாக நடப்பது அல்ல. இந்தக் கிருமிகள் மனிதர்களின் வாழ்வில் ஆழமான தொடர்பு கொண்டுள்ளன.''

``இதைத்தான் நாம் புரிந்து கொண்டு பாதுகாத்திட வேண்டும். தாய்க்கும் குழந்தைக்கும் இடையில் இந்த வகை இரத்த பந்தத்தைப் பாதுகாக்க வேண்டும்.''

#### கர்ப்பிணிகள் என்ன செய்ய வேண்டும்?

இப்போது கண்டறியப்பட்ட விஷயங்கள் தடம் பதிப்பவையாக உள்ளன என்றாலும், பெண்கள் சிசேரியன் மூலம் பிரசவம் பார்த்துக் கொள்வதைத் தடுப்பதாக இது இருந்துவிடக் கூடாது என்று மகப்பேறு மருத்துவர்களுக்கான ரோயல் கல்லூரி துணைத் தலைவர் டாக்டர் ஆலிசன் ரைட் கூறியுள்ளார்.

``பல சமயங்களில் சிசேரியன் என்பது உயிரைக் காக்கும் சிகிச்சையாக உள்ளது. பெண்ணுக்கும் அவருடைய குழந்தைக்கும் சரியான சிகிச்சையாக உள்ளது'' என்று அவர் கூறுகிறார். ``பிறந்த நிலையில் உள்ள குழந்தைகளின் உடலில் மைக்ரோபயோம் என்ன பாதுகாக்கிறது என்பதும், என்ன அம்சங்களில் அது மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதும் இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. எனவே, பெண்கள் சிசேரியன் செய்து கொள்ள மறுக்கும் நிலையை இந்த ஆய்வு முடிவு ஏற்படுத்தும் என்று நான் நினைக்கவில்லை'' என்கிறார் அவர்.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஹாட்லி கல்லூரி பழைய மாணவர் சங்கம்









ஹாட்லி கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா அமெரிக்கா ஒன்றியம் நிகழ்த்தும் இரவு ஒன்றுகூடல் நிகழ்வில் பேராசிரியர் ராதன் மார்கண்டன் அவர்கள் கலந்து சிறப்பித்தார் at Grand Cinnamon Banquet & Convention on Oct 26,2019 .

ஹார்ட்லி கல்லூரி பழையமாணவர் கனடா ஆண்டுவிழாவில் ராதன் மார்கண்டன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார் . "Hartley made Who I am today" என்று தனது உரையை ஆரம்பித்து ,அடுத்த 100 வருடங்களுக்கு ஹார்ட்லியையும் ,யாழ் மருத்துவ பல்கலைக்கழகத்தையும் வளப்படுத்த திட்டமிடுவதற்கு தனது முழு ஆதரவையும் வழங்க முன்வந்தார் .

"Hartley made Who I am today"


"We reached to Valvettiturai Junction and my father gave me two options. It the bus goes to Jaffna comes first, I'll go to Jaffna Hindu College. If the Point Petro bus comes, I'll go to Hartley College. At my father's delight, the Point Petro bus came first. That five minutes made the difference." என்று தனது உரையை ஆரம்பித்தார்

{Rathan Subramaniam, M.D., Ph.D. Chief, Nuclear Medicine; Medical Director, Cyclotron & Molecular Imaging; Director, Nuclear Medicine Residency Program (New Dean of the University of Otago Medical School)}



## சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்- கனடா நடத்திய கலைமகள்- 2019 நிகழ்வு @ Princess Banquet Hall on Oct 27,2019











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தேசமாக சிந்திப்பதற்குரிய உணர்ச்சிகரமான நிகழ்வு



ஒரு முன்னாள் ஜே.வி.பி முக்கியஸ்தர் சொன்னார் “பிரேமதாசவின் காலத்தில் ஜே.வி.பி ஒடுக்கப்பட்ட பின் உடனடுத்து வந்த ஆண்டுகளில் அதன் தியாகிகள் தினம் இரகசியமாகவே அனுஷ்டிக்கப்பட்டது. குறைந்தளவு எண்ணிக்கையினர் மறைவாகக் கூடி இறந்தவர்களை நினைவு கூர்ந்தார்கள். அந்நாட்களில் நினைவு கூர்தலுக்கு ஓர் ஆன்மா இருந்தது. ஓர் உணர்வெழுச்சி இருந்தது. பிரேமதாஸாவிற்கு பின் நிலமைகள் படிப்படியாக தளர்வுக்கு வந்தன. எனினும் உத்தியோக பூர்வமாக தடை அகற்றப்படவில்லை. எனவே அந்நாட்களில் நினைவூ கூர்தலானது அதிகம் உணர்வெழுச்சியோடு அனுஷ்டிக்கப்பட்டது. ஒப்பீட்டளவில் குறைவான தொகையினர் அதில் பங்கு பற்றியிருந்தாலும் அதற்கொரு ஆன்மா இருந்தது.

திருமதி சந்திரிக்காவின் வருகைக்கு பின் தடை அகற்றப்பட்டது. ஜே.வி.பியினர் தியாகிகளை தடையின்றி பகிரங்கமாகக் கொண்டாடும் நிலை தோன்றியது. எனவே அடுத்தடுத்த ஆண்டுகளில் ஜே.வி.பி அதையொரு பெருந்திரள் மக்கள் நிகழ்வாக ஒழுங்கு படுத்தியது. பெருந்தொகையினர் அதில் பங்கேற்றார்கள். தொடர்சியாக சில ஆண்டுகள் நினைவு கூர்தல் பெருமெடுப்பில் அனுஷ்டிக்கப்பட்டது. ஆனால் காலப்போக்கில் அதில் கலந்து கொள்வோரின் தொகை குறையத் தொடங்கியது. அந்நிகழ்விற்கென்றிருந்த புனிதமும் குறையத் தொடங்கியது. இப்பொழுது அது நாட்காட்டியில் வரும் வழமையான ஒரு நாளாக மாறிவிட்டது. அது அதன் ஆன்மாவை இழந்துவிட்டது. கிட்டத்தட்ட ஒரு சடங்காக மாறிவிட்டது” என்று. மேற்படி ஜே.வி.பி உறுப்பினர் இப்பொழுது புலம்பெயர்ந்து வாழ்கிறார். அவர் என்னிடம் மாவீரர் நாள் தொடர்பில் பின்வருமாறு கேட்டார் “மாவீரர் நாளின் மீது இருக்கும் சட்டத்தடைகள் நீக்கப்பட்டால் நிலமை என்னவாகும்?” என்று.

எந்தவொரு நினைவு நாளும் சடங்காக மாறுவதும் மாறாமல் விடுவதும் அதை ஒழுங்குபடுத்தும் அமைப்பின் அரசியலில் தான் தங்கியிருக்கிறது. ஜே.வி.பியின் அரசியல் எப்பொழுதோ அதன் ஆன்மாவை இழந்து விட்டது. எனவே அதன் தியாகிகள் தினம் சடங்காக மாறியமைதற்செயலானது அல்ல. அதற்கொரு தர்க்கபூர்வ வளர்ச்சியுண்டு.

ஆனால் மாவீரர் நாளைப் பொறுத்தவரை புலிகள் இயக்கம் தாயகத்தில் அரங்கில் இல்லை என்றாலும் அது முன்னெடுத்த அரசியலுக்கான தேவை தொடர்ந்தும் இருக்கிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. இனப்படுகொலைக்கு எதிரான நீதியும் இன்னமும் கிடைக்கவில்லை. தமிழ் மக்கள் தொடர்ந்து கட்டமைப்பு சார் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். போரில் தோற்கடிக்கப்பட்டது விடுதலைப் புலிகள் இயக்கம் என்ற விளைவுதான். இன ஒடுக்குமுறை என்ற மூலகாரணம் அப்படியே உள்ளது. அது யூத்தத்தை வேறு வழியில் தொடர்கிறது. அதைத்தான் கட்டமைப்பு சார் இனப்படுகொலை என்றார்கள். இப்படியொரு நிலமை தொடரும் வரை சனங்கள் விடுதலைப்புலிகளின் இன்மையை நினைவு கூர்ந்து கொண்டேயிருப்பார்கள். எனவே இது விடயத்தில் ஜே.வி.பி யையும் விடுதலைப் புலிகளையு ம் ஒப்பிட முடியாது” என்று அவரிடம் சொன்னேன்.

எனினும் மாவீரர் நாளை அனுஷ்டிப்பது என்பது குறிப்பாக 2009 க்கு பின் அதைச் செய்வது என்பது இப்போது இருப்பதை விடவும் பரந்தகன்ற தளத்தில் பல்பரிமாணங்களை கொண்டதொரு அரசியல் நிகழ்வாக திட்டமிடப்பட வேண்டிய தேவையுண்டு.

அதாவது மாவீரர் நாளை அனுஷ்டித்தல் என்பது முதலாவது அர்த்தத்தில் மாவீரர்களுடைய அரசியல் இலக்குகளை வென்றெடுப்பதாகும். அது வெறுமனே துக்கத்தை அனுஷ்டிக்கும் ஒரு கூட்டு நிகழ்வு மட்டுமல்ல.

இரண்டாவது, விடுதலைப் புலிகள் இயக்கம்; செயற்படாத தாயகத்தில் மாவீரர்களை நினைவு கூர்வது என்பது அம்மாவீரர் குடும்பங்களைப் பராமரிப்பதும் தான். பல மாவீரர்களின் குடும்பங்கள் வறுமையில் உழல்கின்றன. அவர்களுக்கு யாரும் உதவி செய்வதில்லை. அவர்களுக்கு உதவிசெய்வதற்கென்று ஒரு பொது நிதியமும் இல்லை. வட மாகாண சபையின் முன்னாள் அமைச்சரான டினேஸ்வரன் சில ஏற்பாடுகள் செய்தார். ஆனால் அவை போதுமானவை அல்ல. தொடர்ச்சியானவை அல்ல. மாவீரர் குடும்பங்களை கௌரவிப்பது என்பது மே தினம்போல ஒரு நாள் நிகழ்வு அல்ல. அதுஒருதொடர் வேலைத்திட்டம் இது தொடர்பில் பொருத்தமான தரிசனம் எதுவு ம் தமிழ் தலைவர்களிடமோ அல்லது செயற்பாட்டாளர்களிடமோ இருப்பதாகத் தெரியவில்லை.

மூன்றாவது, மாவீரர்களை நினைவு கூரல் என்பது எந்த இயக்கத்தில்; சேர்ந்து அவர்கள் உயிரைத் தியாகம் செய்தார்களோ அந்த இயக்கம் அரங்கிலிருந்து அகற்றப்பட்ட பின் எஞ்சியிருக்கும் போராளிகளைப் பாராமரிப்பதும் தான். இலங்கைத் தீவில் அதிகம் ஆபத்தை எதிர் கொள்ளும் தரப்பாக முன்னாள் புலிகள் இயக்கத்தவர்களே காணப்படுகிறார்கள். புனர்வாழ்வு பெற்ற பின்னரும் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படும் தரப்பாக அவர்கள் காணப்படுகிறார்கள். அரச புலனாய்வுத்துறையும் அவர்களை சந்தேகிக்கிறது. எந்த மக்களுக்காக போராடுகிறார்களோ அந்த மக்களும் அவர்களைச் சந்தேகிக்கிறார்கள். இயக்கம் பலமாக இருந்த காலத்தில் நிகழ்ந்த திருமணங்கள் பல இப்பொழுது முறிந்துவிட்டன. ஒரு புறம் பாதுகாப்பு இல்லை. இன்னொரு புறம் தொழில் இல்லை. உதவி இல்லை. கடந்த சுமார் பத்தாண்டுகளில் தொடர்ச்சியாக பலர் இறந்து விட்டார்கள். அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவியை யார் வழங்குகிறார்கள்?

அவர்களிற் சிலர் அமைப்புகளைக் கட்டியெழுப்பியிருக்கிறார்கள். அவர்களிற் சிலர் கட்சிகளை உருவாக்கியிருக்கிறார்கள். அக்கட்சிகள் தொடர்பாகவும் அமைப்புக்கள் தொடர்பாகவு ம் சந்தேகிப்பவர்களும் ஊகிப்பவர்களுமே அதிகம். அவர்களை அரச புலனாய்வுத்துறை இயக்குகிறது என்று பரவலாகவு ம் ஆழமாகவும் சந்தேகிக்கப்படுகிறது. இதனால், சமூகத்தில் ஒரு பகுதியினர் அவர்களை நெருங்கிச் செல்லப் பயப்படுகிறார்கள். இவ்வாறானதொரு பின்னணிக்குள் தனித்து விடப்பட்டவர்களாக சந்தேகிக்கப்படுகிறவர்களாக கதியற்றவர்களாகக் கைவிடப்பட்டிருக்கும் முன்னாள் புலி இயக்கதவருக்கு உதவி செய்வதற்கென்று சட்ட ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு நிறுவனம் தேவை. இறந்த புலிகளை வைத்து அரசியல் செய்யும் பலரும் உயிரோடு இருக்கும் புலிகளுக்கு உதவத் தயாரில்லை. எனவே காயமடைந்து அவயவங்களை இழந்து குடும்பத்தைப் பிரிந்து புத்தி பேதலித்து தனித்து விடப்பட்டிருக்கும் முன்னாள் இயக்கத்தவருக்கு சட்டப் பாதுகாப்பை ஏற்படுத்தி கொடுக்கவல்ல சட்ட உதவி மையங்கள் உருவாக்கப்பட வேண்டும். மருத்துவ உதவிமையங்கள் உருவாக்கப்பட வேண்டும். இது மூன்றாவது

நாலாவது இறந்தவர்களை நினைவு கூர்தல் என்பது அவர்களுடைய பெயரால் ஐக்கியப்படுவதுந்தான். அவர்களுடைய அரசியல் இலக்கை வென்றெடுப்பதென்றால் தமிழ் மக்கள் முதலில் ஒரு பெருந்திரளாக வேண்டும். இனப்படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறவும் இனப்படுகொலைக்கு எதிரான சுயகவசங்களைக் கட்டியெழுப்புவதற்கும் ஒற்றுமையே முதலாவது முக்கிய நிபந்தனையாகும். இங்கிருந்து ஒற்றுமையை கட்டியெழுப்ப தொடங்காவிட்டால் எதிர்காலத்தில் ஒவ்வொரு துயிலும் இல்லத்தையூம் ஏதாவது ஒரு கட்சியோ அல்லது அமைப்போ அதனதன் விருப்பத்திற்கு ஏற்ப தத்தெடுக்கும் ஒரு நிலை தோன்றக்கூடும். இது எங்கே கொண்டு போய் விடும்?

மேலும்,2009 இற்குப் பின் தாயகத்தையும் டயஸ்போராவையும் பிணைக்கும் உணர்ச்சிகரமான நிகழ்வுகளில் ஒன்றாக மாவீர் நாளும் காணப்படுகிறது. நாடு கடந்து வாழும் ஒரு மக்கள் கூட்டம் ஒரு தேசமாக சிந்திப்பதற்குரிய உணர்ச்சிகரமான நிகழ்வே நினைவு கூர்தலாகும். ஒருதேசமாகசிந்திப்பதற்குரியபிரயோகக் களங்களில் நினைவு கூர்தல் மிகவு ம் முக்கியமானது. அது தாயகத்தையூம் டயஸ்போறாவையூம் உணர்வு பூர்வமாகப் பிணைக்கிறது. அதே சமயம் டயஸ் போறாவை ஒரு தேசமாக உணர வைக்கிறது. ஆனால், தமிழ் டயஸ்போறாவில் தாயகம் பற்றிய பிரிவேக்கத்தோடு காணப்படும் முதலாம் தலைமுறை புலம்பெயரிகள் வயதாகி இறந்து விடும் பொழுது இரண்டாம் மூன்றாம் தலைமுறைகள் மத்தியில் நினைவு கூர்தல் எவ்வாறு அனுஷ்டிக்கப்படும்?

எனவே மேற்சொன்ன விடயங்களைக் கவனத்தில் எடுத்து நினைவு கூர்தலை பரந்தகன்ற தளத்தில் முன்னெடுக்கும்; போதே அதை அதன் மெய்யான பொருளில் அதாவது, நினைவு கூர்தல் எனப்படுவது இனப்படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறும் முடிவுறாத ஒரு போராட்டத்தின் தவிர்க்கப்படவியலாத ஒரு பகுதி என்ற முழுப்பொருளில் அனுஸ்டிக்கலாம். எதிர்காலத்தில் அது ஒரு சடங்காக மாறுவதைத் தடுக்கலாம். தமிழ் மக்களின் அடுத்த கட்ட அரசியலுக்கு வேண்டிய அடிப்படைகளையு ம் பலப்படுத்தலாம்.

2016 இல் நிலந்தனின் கட்டுரையிலிருந்து ஒருபகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமதுசமூகம் நடத்திய 2வது வருடாந்த நிகழ்வு












மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தி ஆரம்பித்து வைக்கப்பட்ட எமதுசமூகம்தொடர்ச்சியான தாயக வாழ்வாதார முன்னெடுப்புகளோடு எமது இனத்தின் இருப்பையும் அவர்களின் வாழ்வாதாரம் கல்வி சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நோக்கத்திற்காக பயணிக்கின்றது , அதன் 2 வது வருடாந்த நிகழ்வு நவம்பர் மாதம் 2ம் திகதி நடைபெற்றது . எமது சமூக தாயக பணிகளுக்காக இகுருவி புதிய வெளிச்சம் சார்பில் 500 கனேடிய டொலர்கள் நன்கொடையாக வழங்கப்பட்டது

VICTOR S. LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

30 நிமிட இலவச
ஆரம்ப சட்ட கலந்தறிதலுக்கு
என்னை அழையுங்கள்!

சிறு உரிமை கோரிக்கை
SMALL CLAIM MATTERS

வீட்டு உரிமையாளர் மற்றும்
வாடகை குடியிருப்பாளர் தகராறுகள்
LANDLORD & TENANT DISPUTES

குடிவரவுச் சட்டம்
IMMIGRATION LAW

குற்றவியல் குற்றங்கள்
CRIMINAL/ SUMMERY CONVICTION

வீதி போக்குவரத்து விதிமீறல்கள்
HIGHWAY TRAFFIC TICKETS

சத்திய பிரமாண ஆணையாளர் சேவை
COMMISSIONER OF OATH



THIRU SIVAPATHAM, B.A, M.A
Paralegal & Commissioner of Oaths
647.308.7571
80 Corporate Drive, Suite #208,
Toronto, Ontario M1H 3G5
thiru.sivapatham@gmail.com
www.victorlegal.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Now In Toronto & Brampton

## Certificate Programs

### Computer Technology
Programming
C/C++
Java
Python
VB.Net
MySQL / MS SQL
Software Testing
Android App Development

### Multi Media
Video Editing
Sound Editing
Photoshop
Illustrator

### Accounting
QuickBooks
Sage 50
Sage 300 Accpac

### Microsoft Office
Word
Excel
PowerPoint
Outlook

### Smart Serve Certificate

### Food Handler Certificate

**Classes conducted every week**
**Pick up your certificate on the same day**
**you can do your exam in**
**English Tamil & Punjabi**

## Diploma Programs

### Computerized Accounting
### Accounting and Payroll
### Office Administration
### Food Service Worker

### Automation Technology
PLC Programming
HMI Programming
VFD Control & Programming
Industrial Control & Comm.
Electrical Design

### CAD/CAM Technology
AutoCAD
SolidWorks
Inventor
MasterCAM
CNC Programming

# beta College
of Business & Technology

**Toronto Campus**

2347 Kennedy Road, Suite 301
Toronto ON, M1T 3T8.
Tel: 416 449 2382

**Brampton Campus**
10 Gillingham Dr. Suite 201
Brampton ON L6X 5A5

Tel: 905-459-7846

www.betacollege.ca, info@betacollege.ca


**416 449 beta (2382)**

(Approved as a private career college under the Private Career College Act 2005)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்.....



தனியொருவனாக 1975ல் விஜயதசமி நாளன்று "Beacon Study Centre" என்று வடமராட்சியில் தனியார் கல்வி நிறுவனத்தை வடிவமைத்த தந்தையே! தகுந்த மிகத்தரமான ஆசிரியப் பெருந்தகைகளைத் தேர்ந்தெடுத்து கணிதம்,விஞ்ஞானம், கலை, வர்த்தகம், தொழில்நுட்பம் சார்ந்து கல்வி பயிற்றுவிக்கும் கல்விச்சாலையின் அதிபரே! கல்விக்கென நாள்தோறும் கால்பதிக்கும் இருப்பிட அதிபதியே! இயற்பெயருக்கு முன்னால் DIRECTOR வியாகேசு என்று மரியாதைக்குரியவராக கற்றோர் முன்னிலையிலும் கல்வி கற்கும் எண்ணிலடங்கா மாணவர்களின் உள்ளத்திலும் நற்பெயருக்கு நாள்தோறும் சொந்தமானவரே!





திரு வியாகேசு பொன்னையா என்று உங்கள் பெயர் சொல்லும் களங்கள் பல - அவற்றுள் சில கல்வி,கலை, கலாச்சாரம், சமயம், சமூகம், பொருளாதாரம், அரசியல் என்று விழுதுகள் பரப்பி பெரும் விருட்சங்களான போதும், உங்கள் வேர் ஒன்றுதான் என்று இருப்பிடம் நாடி மகன் ஒருவன் கருணாகரன் வியாகேசு (வசந்தன்) என்று இறுகப்பற்றி நிலையான சொத்தாக அடையாளச் சின்னமாக நீவிர் மகிழ்ந்து பேசிய வரிகள் என்றும் மனக்கண்முன்னே!





சமுதாயம் தெரிவு செய்த பெருமகனாக அன்று 2011 ல் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை தவிசாளராக(CHAIRMAN) உள்ளூராட்சித்தேர்தலில் யாழ்ப்பாணத்தில் வெற்றியை உமதாக்கினீரே! விரைந்த கணப்பொழுதுகளிலும் வெற்றி வாகைசூடி விருதுகள் பலவாறாகக் குவியும் போதும் அருகிருந்து கரங்கள் ஒருமித்துக் கைதட்டி மகிழ்ந்து உங்கள் மார்போடு இறுக்கிப்பற்றிக் கொண்டவர்கள் நாங்கள்!

மாண்புமிகு முதல் அமைச்சர் திரு விக்னேஸ்வரன் ஐயா உடனிருந்து யாழ் நெல்லியடி, உடுப்பிட்டி மத்தியில் உங்கள் மக்களின் அன்றாட வாழ்வியலுக்குரியவற்றை வகையாய் பட்டியலிட்டுப் போற்றுமளவுக்குப் பொக்கிசமாக்கினீரே!







தந்துணிவுடன் தரமிகு தாராள சேவைகளை தற்பெருமை எதுவுமின்றி தரிசிக்க வைத்தீரே! வியாபார நோக்கமின்றி வியாபகமான தூரநோக்கில் சிந்தை ஒருமித்து நற்சிந்தனையுடன் தினமும் சொல்லை செயலாக்கும் ஆளுமை மிக்கவரே! வேலைப்பளு அறியா விந்தை மனிதரே! சோர்வு என்ற உணர்வு அறியாது சொந்த உழைப்பினால் உயர்ந்த உத்தமரே! நிம்மதிக்கென நிறைந்த சந்தோசப் பொழுதுகளை நாடி உலக வரைபடத்தின் உச்சியில் உள்ள கனடா தேசத்துக்கு சுற்றுலா என்று தொலைதூரம் கடந்து ஆவணி 16 திகதியில் அலையெனத்திரண்ட சொந்தங்கள் முன் கால்பதித்தீரே!

உங்களால் உயர்வு கண்ட உள்ளங்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், உதவி இயக்குனர்கள் ஒன்றுகூடி கல்விக்குரிய விஜயதசமி நாளன்று (06.10.2019) கனடா வாழ் புலம்பெயர் BEACON கல்வி நிலைய பழைய மாணவர்களின் பாராட்டுக்குரியவரானீரே!





உங்கள் எண்ணங்களோடு உயரத்தில் "வடமராட்சியின் கல்வியின் தலை" என்ற வாசகத்தை கனேடியப்பத்திரிகை E-குருவியின் பதிப்பாசிரியர் தலைசிறந்த உங்கள் மாணவன் திரு. நவஜீவன் அனந்தராஜ் எழுத்துக்களுக்கு ஊடாக உண்மைகளை உலகு அறிய எடுத்துரைத்து உணர்ச்சிபூர்வமான விழாமேடைக்கு வாழ்த்து உரைத்தமையை செய் நன்றியாக உங்கள் பேச்சில் மீளப்பார்த்தீரே!

APEX CREATION நிறுவன உரிமையாளர் திரு.வேணுகானன் உங்கள் அழகு குன்றாத் தோற்றப்பொலிவை அச்சொட்டாக பதாதையில் பொறித்து அதனுடன் பாராட்டுவிழாவுக்கான அழைப்பிதழை திரு.தினேஷின் கைவண்ணத்தில் அரங்கம் நிறைவு காண்பதற்காக அச்சிட்டமையை மெச்சினீரே !





கனடா ஒன்ராறியோ பாராளுமன்ற உறுப்பினர் திரு. விஜய் தணிகாசலம் உங்களுக்காக விழாவிற்கு வருகை தந்தமை முக்கியமான நிகழ்வு நம்மவர்க்கு!

பாராட்டு விழாவில் உங்கள் அன்பான மாணவன் திரு இராஜமுகுந்தன் நாகேந்திரம் அவர்கள் தனது குரல் தொகுப்பின் பின்னணியில் செந்தமிழின் சிகரம் தொடும் தேன்கவிதை வரிகளை காணிக்கியாக்கி ஒலிவாங்கி முன் விழாவின் ஆரம்பம் முதல் இறுதிவரை பல நிகழ்ச்சிகளை சுவை கலந்து சொற்பா சமைத்தமையை பலமுறை ருசித்தீரே !



"செந்தாமரை" எனும் முகவரியில் விஜயதசமி அன்று ஆசிரியர்கள், மாணவர்கள், நண்பர்கள், உதவி இயக்குனர்கள் முன்பு உங்களை உயர அமர்த்தி உச்சி முகர்ந்து விழா ஆரம்பித்தோம். சந்தனநிற ரோஜா மாலையை செல்ல மாணவி கீத்தா வேணுகானன் அவை அடக்கத்துடன் அணிவிக்க பொன்னாடையை பிரியமான மாணவி வித்தியமாலா சுற்றிவிட இருகரங்களிலும் வண்ணமலர்ச் செண்டுகளை திரு. கோபிராஜ், நிமால், குயிலி, முரளி வாஞ்சையுடன் கையளிக்க பாராட்டுவிழா மேடை வாழ்த்துக்களுடன் விஞ்சியதை வியந்தீரே!



கனடாவாழ் BEACON பழைய மாணவர்கள் உங்கள் முன் கடந்த கால கல்வி அனுபவங்களை மீட்டிப்பார்க்கும் தருணத்தில் தாமாகப் பல மாணவர்கள் மேடை ஏறி சிரத்தையுடன் கற்ற அனுபவங்களை சபைமுன் பகிரங்கமாகப் பேசிய வரிசையில் சுகர்ணா, கோபிராஜ்,நிமால், முரளி,குயிலி, கீத்தா, சஞ்சுதா, ராஜ்குமார்,விஜயன்,கருணாகரன், சிவராஜா ..... போன்றோர் நினைவுகளை மீட்டிப்பார்க்க நேரத்தை ஒதுக்கியவர்கள் உமக்காக!

மிகப்பிரதானமாக தொழில்நுட்பத்திறன் செயற்பாட்டுக்காக சிறந்த மாணவன் திரு. உதயராஜ் குலவீரசிங்கம் மற்றும் A/L96 BATCH மாணவர்கள் சிற்றுண்டிகளுக்கான சேவைகளில் பொறுப்பாக செயலாற்றியத்தைப் பார்த்தீரே! உயிர் நண்பன் DR தம்பிராஜா வசந்தகுமார் தாமாக வரவேற்பில் பங்கேற்று பிரதான உரை ஆற்றி 'AWARD OF EXCELLENCE'என்று விருதுக்கு பெயரிட்டு உங்கள் தியாகமனப்பான்மை, கடின உழைப்பு, கல்வியின் நிமித்தம் வடமராட்சியில் பங்களிக்கும் செயல்திட்டங்கள் என பலகோணங்களில் விஸ்வரூபமான சேவைகளை ஒரு குடையின் கீழ் உங்கள் உருவப்படம் தாங்கி SOCIETY FOR THE AID OF COMMUNITY EMPOWERMENT நிறுவன ஒத்தாசையுடன் கையளித்து கௌரவித்தாரே!

அன்புச்சிநேகிதர் திரு கனகசபை மகள் சஞ்சுதா சபையினருக்கு நன்றி பாராட்டி நான்கு திசையும் கைகள் தட்ட BEACON STUDY CENTRE கனடா பழைய மாணவர்கள் எல்லோரது சார்பில் திருமதி கீத்தா வேணுகானன் அழியாப் புகழ்மிக்க பெரும் விருதை DIRECTOR வியாகேசு 'கல்வி என்ற கலங்கரை விளக்கு' என்று வாழ்த்து மடலுக்கு முத்திரை பதித்து உங்களுக்கு வருகை தந்த எல்லா மாணவர்களுடனும் ஒருமித்து மேடையில் பணிவு கலந்த அன்புடன் உங்களின் இருகரம் சமர்ப்பித்தமை காலக்கணிப்பின் 44வருடங்கள் Beacon நிறுவனத்தில் இன்னும் வெற்றிகர தொழில் முயற்சிக்கான உங்களுக்குரிய சான்று அல்லவோ!

அரங்கம் அகம் மகிழ்ந்து ஆர்ப்பரித்த கரகோச ஒலிகளை என்றும் நினைவில் நிலைநிறுத்துவேன் என்றீரே! செந்தாமரையின் பொறுப்பதிகாரி திருமதி ராஜி அரசரட்ணம் பேசிய சொற்களில் உங்கள் உழைப்பின் உயர்வு கண்டீரே!

நிகழ்வுகளை நேரில் கண்டவர்களுக்கும் அப்பால் நிஜங்களாகப் புகைப்படங்களைத் தாமாகத் தந்து உதவிய, பெரிய மனம் படைத்த திரு திருச்செல்வம் முருகுப்பிள்ளை மற்றும் E -குருவி ஐயா திரு பேரின்பநாதன் கந்தையா அவர்களுக்கும் சபை நடுவே சமூகவலைத்தளங்களை தம்பக்கம் சேர்த்த சொந்தங்கள், மாணவச்செல்வங்கள், மதிப்புமிகு ஆசிரியர்கள், உண்மை நண்பர்கள்,உதவி இயக்குனர்கள், ஆதரவாளர்கள்,அவைக்கு ஒத்தாசை நல்கியவர்கள் எல்லோருக்கும் சிரம் தாழ்த்திய நன்றிகள் உரித்தாகுக.

காலத்தால் அழியாப்புகழ் சேர்த்த அந்த விஜயதசமி நாள் OCTOBER 06,2019 நினைவுப்பதிவுகளுடன் BEACON STUDY CENTRE - கனடா வாழ் புலம்பெயர் மாணவர்கள்.

படங்கள்: திரு.திருச்செல்வம் முருகுப்பிள்ளை
திரு. பேரின்பநாதன் கந்தையா (E-Kuruvi ஐயா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VJP Wedding Service

உங்கள் அனைத்து விதமான வைபவங்களையும் சிறப்புற நடத்திட அழையுங்கள்



* Weddings
* Birthday Partes
* Puberty Ceremonies
* Receptions
* Christmax Parties
* Meetings

All Other Occasions.

Serving Areas
- Scarborough
- Mississauga
- Markham
- Etobicoke
- Brampton
- Ajax

Choose from 10 Luxurious banquet Halls, Accommodating 50 to 1000 guests.

குமார் 416 302 6727




50% OFF SINGLE VISION

Book Your Kids Eye Exam for Better Focus!

Eye Examinations are covered by OHIP if you are under the age of 20 or 65 and up

தமிழர் நிர்வாகத்தில்

FIRST OPTICAL

Scarborough Professional Centre
1371 Neilson Road Suite 100
Scarborough, ON M1B 4Z8
(Neilson/Mclevin)

Tel : 416-282-2129
Fax : 416-282-9582

Hundreds of quality glasses to choose from

some terms & condition apply

KING SOFTWARE SOLUTIONS

Responsive Web Design

CHOOSE OUR PACKAGE

| BASIC CAD $ 799 | PROFFESSIONAL CAD $ 1499 | BUSSINES CAD $ 1199 |
|---|---|---|
| Free Domain | Free Domain | Free Domain |
| Free Hosting | Free Hosting | Free Hosting |
| one Page | Five Pages | Five Pages |
| Five Menus | Three page Dynamic | One pages Dynamic |
| Enquiry Form | Enquiry Form | Enquiry Form |
| Google Map | Google Map | Google Map |
| All Device Compatablity | All Device Compatablity | All Device Compatablity |
| All Browser Compatablity | All Browser Compatablity | All Browser Compatablity |
| Free SEO Interface | Free SEO Interface | Free SEO Interface |

ABOUT US

King Software Solutions is a leading software and website development company

OUR CONTACT

Call @ KING KUNA
+1-416-648-0915
+1-647-655-5124
Support@kingsoftwaresolutions.com
www.kingsoftwaresolutions.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அம்மாக்களின் கண்ணீரை நாம் எல்லோரும் அறிவோம்.

அரசியல் சமூக வெளிகளில் இயங்குகின்ற அதிகார சக்திகள், மற்றும் மக்கள் நலன் விரும்பிகள் என நம் எல்லோர் மீதும் பலவகைப்பட்ட விமர்சனங்களும், எதிர்வினைகளும், குற்றச்சாட்டுக்களும் உருவாகுவதும், அவற்றை எதிர் கொள்ள வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகும் .

எதிர்ப்பினை தெரிவிப்பதற்கு, எத்தனையோ ஜனநாயக பூர்வமான வழிமுறைகள் இருக்கும்போது, ஒருவரின் உடலின் மீதான வன்முறை போன்ற செயல்களை மேற் கொள்ள முயற்சிக்கும் வழிகளை, எவ்வகையிலும் நாம் நியாயப்படுத்திவிட முடியாது.

அம்மாக்களின் கண்ணீரை நாம் எல்லோரும் அறிவோம்.

எதிர்ப்பினை தெரிவிப்பதற்கு செருப்பு எறிதலும் ,ஆணாதிக்கவாதிகளை உடனடியாக நேரடியாக எதிர் கொள்ள செருப்பினை எதிர்ப்புக் சாதனமாக பயன்படுத்தலும் , இப் பெண்மணியின் அரசியல் நோக்கமும்உடல் மொழியும் ஒன்றல்ல..

இதனை நாம் ,கவனத்தில் கொள்ளல் அவசியம்.

எனது மதிப்பிற்குரிய நண்பர்கள் பலர் , இந்த வன்முறை முயற்சியை, நியாயப்படுத்துதல், கொண்டாடுதல் எவ்வகையிலும் ஆரோக்கியமானதல்ல.

நாம் , கருத்துச் சுதந்திரமற்ற ஜனநாயகம் அற்ற, அராஜகத்தனமான வன்முறை மனோபாவமும், செயற்பாடுகளும் கொண்ட எமது சூழலை, தொடர்ச்சியாக இத்தகையதாக பேணுவதற்கு, வழி சமைக்கிறோம் என்பதை நண்பர்கள் உணரவேண்டும்.

**Ashok-yogan Kannamuthu**




## தமிழரசுக்கட்சியை புனருத்தானம் செய்தல்

தமிழரசுக் கட்சியின் இன்றைய நிலையை பார்க்கும் போது , பரிதாபமாக இருக்கிறது.

அதற்காக, தமிழரசுக்கட்சி கடந்த காலங்களில் பெருமை சேர்த்த கட்சி என்பது அர்த்தமல்ல.

எஸ்.ஜே.வி செல்வநாயகத்தின் காலத்து தமிழரசுக்கட்சி, பல மயக்கங்களாலும் படிமங்களாலும் புனைவுகளாலும் கட்டமைக்கப்பட்டிருந்தாலும் கூட, அதன் தலைமைகள் மேட்டுக்குடித்தனத்தை கொண்டிருந்த போதிலும் கூட, அதனிடம் தமிழர் நலன் சார்ந்த அரசியல் ஓரளவு இருந்ததென்பதை யாரும் மறுத்து விட முடியாது.

உதாரணமாக , 'பண்டா செல்வா ஒப்பந்தத்தை' உதாரணம் காட்டிட முடியும்.

ஆனால்,இன்றைய தமிழரசுக்கட்சியோ,முழுக்க முழுக்க ஊழல்களாலும், பேரங்களாலும், பின்கதவு அரசியலாலும், சுய நலபிழைப்பும் இருத்தலுமே அதிமுக்கியம் எனும் சாக்கடைப் புதைகுழியில் அமுங்கி விட்டது.

எதிர் காலத்தில் தமிழ்ச் சமூகம் குறைந்த பட்சமாவது உரிமைகளை விமோசனத்தை மேம்பாட்டை அடைய வேண்டும் என்றால், தமிழரசுக்கட்சியை புனருத்தானம்செய்து,அரசியல் சமூக விழிப்புணர்ச்சியும், அக்கறையும் கொண்ட, பிழைப்புவாத அரசியல் நோக்கற்ற இளைஞர் சந்ததியை, உள்வாங்கவேண்டும்.

அதுவரை தமிழரசுக்கட்சி, இப்படித்தான் தன் தொழிலை செய்யும்.

அதற்காக, இனப்படுகொலையாளர்களுக்கு ஆதரவு கொடுக்கும் எதிர்நிலை என்பது, தமிழரசுக்கட்சியின் அரசியலை விட, மிக மிக அயோக்கியத்தனமானது.

இதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

**Ashok-yogan Kannamuthu**

## ஜப்பானும் உடல்பருமனும்

ஜப்பானில் உடல்பருமன் ஆனவர்கள் எண்ணிக்கை 3.6% மட்டுமே.

உலகின் மிக ஆரோக்கியமான நாடுகளில் ஒன்று ஜப்பான்.

எப்படி சாத்தியமானது?



முதலாவதாக ஜப்பானில் கோதுமை நுகர்வும், சர்க்கரை நுகர்வும் மிக குறைவு. அன்றாடம் அவர்கள் உணவில் அரிசியும் காய்கறிகளும் மீனும் இருக்கும். உணவுக்கு பின் கொக்கோகோலா பருகாமல் க்ரீன்டீ பருகுவார்கள். இத்தனை வளமையான நாடாக இருந்தாலும் அவர்களின் சர்க்கரை நுகர்வு பாகிஸ்தானின் சராசரி நுகர்வுக்கு சமம்தான்


கார்களை பயன்படுத்தாமல் பொதுபோக்குவரத்தை பயன்படுத்துதல். சராசரியாக மெட்ரோ ரயில் நிலையத்துக்கு நடக்க 20 நிமிடம் ஆகும் என வைத்துக்கொண்டால் அதிலேயே வீடு ›மெட்ரோ ›ஆபிஸ் ›மெட்ரோ ›வீடு என ஒரு நாளைக்கு 80 நிமிட நடை வந்துவிடுகிறது

இதைவிட முக்கியமாக டயபடிசுக்கு எதிராக சட்டம் இயற்றிய ஒரே நாடு ஜப்பான் தான். மெடபாலிக் சிண்ட்ரோம் (அ) ப்ரிடயபடிஸ், உடல்பருமன் இவை எதாவது உங்களுக்கு வந்தால் உங்கள் கம்பனிக்கு அபராதம் போடுவார்கள். உங்கள் மாநகராட்சிக்கும் கடுமையான அபராதம் விதிப்பார்கள். உடல்பருமன் உள்ள தொழிலாளிகள் கூடுதலாக இருந்தால் கம்பனிக்கு அபராதம் என்பதால் கம்பனிகள் தொழிலாளிகளின் உடல்நலனில் கடுமையாக அக்கறை காட்டும் சூழல் உள்ளது.

இதனால் தான் அங்கே ஒபிசிட்டி இந்த அளவுக்கு குறைவாக உள்ளது

**Neander Selvan**


TAMIL AND ENGLISH INTERPRETATION AND TRANSLATION SERVICES




Anjeline Thisairajah

Tel: (647) 291 1357

anjelinejeeva@hotmail.com




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழரை இழிவுபடுத்தும் 'தெமல சன்னிய': தபால் முத்திரை.




சமீபத்தில் இலங்கை தபாற் திணைக்களத்தால் 'தஹா அத்த சன்னிய' (பதினெட்டுச் சன்னிகள்) என்ற தலைப்பின் கீழ் 18 முத்திரைகள் வெளியிடப்பட்டன. அதில் ஒரு முத்திரை 'தெமல சன்னிய' (தமிழ்ச் சன்னி) என்ற பெயரின் கீழ் கரிய நிறமுள்ள ஒருவர் விபூதிக் குறி, குங்குமப்பொட்டு, தலைப்பாகை போன்ற அடையாளங்களுடன் உள்ள ஒரு சித்திரத்தைத் தாங்கி வெயிடப்பட்டுள்ளது. இது தமிழரை அவமானப்படுத்தும் ஒரு செயலாகப் பலராலும் கண்டிக்கப்பட்டு வருகிறது.

சித்த / ஆயுர்வேத வைத்திய முறையில் சன்னி என்பது ஒரு வகை நோயென்றும் அதில் பதினெட்டு வகைகள் உண்டென்றும் சொல்லப்படுகிறது. போகர் எழுதிய சித்த வைத்திய நூலில் பதினெட்டுச் சூலைகள் எனவும் கூறப்படுகிறது.

சில ஆபிரிக்கக் கலாச்சாரங்களில் காணப்படுவதைப் போலத் தீராத நோய்கள் பலவற்றைப் 'பேய் பிடித்திருக்கிறது' என்று பேயோட்டுதல் மூலம் (exorcism) நாட்டு வைத்தியர்கள் சிகிச்சை செய்வது வழக்கம். இந்தியாவின் தென் மாநிலங்களிலும் இலங்கையிலும் இந்நடைமுறை பின்பற்றப்படுகிறது. சிங்கள நாட்டுப்புற வைத்தியர்கள் (வெத மாத்தயா) இப் பேயோட்டும் முறையை இப்போதும் சிகிச்சைக்காகப் பயன்படுத்துகிறார்கள். ஆயுர்வேத வைத்தியத்தை, அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சை முறையாக மட்டுமல்லாது அதை விருத்தி செய்வதிலும் ஆர்வம் காட்டும் நாடுகளில் இலங்கை முன்னணியில் இருக்கிறது. இதன் காரணமாக இத் தொன்மையான சிகிச்சை முறையைக் கௌரவிப்பதற்காக 18 சன்னிகள் பற்றிய முத்திரையொன்றை வெளியிட்டுள்ளது.

சன்னிக்கு ஆங்கிலத்தில் delirium (ஒரு வகையான சித்தப் பிரமை) என்ற கருத்தும் இருக்கிறது. சித்தப்பிரமை உள்ளவர்களுக்கு நாட்டுப்புற சிகிச்சை, பொதுவாகப் 'பேயோட்டுதல்' (மேற்கு நாடுகளில் exorcism செய்வது போல) மூலமாக நடைபெறுவது வழக்கம்.

பதினெட்டுச் சன்னிகள்

பூத சன்னி – demon of spirits

அபூத சன்னி – demon of madness

அமுக்க சன்னி – demon causing fits of vomiting

வேதி சன்னி – caused by the disturbance of bile and phlegm

வாத சன்னி – caused by the disturbance of body wind

பீத சன்னி – demon of fear

பிஹிறி சன்னி – demon of deafness

கணா (கண்) சன்னி – demon of blindness

பித்த சன்னி – demon of bile

கோலு (செவி) சன்னி – demon of dumbness

மூர்த்து சன்னி – demon of unconsciousness

தமிழ்ச் சன்னி (Demala sanniya) – demon of Tamil

குல்மா சன்னி – demon of the disease of the spleen

கோர சன்னி – demon of lameness

கிஞ்சால் சன்னி – demon of flames

சீதள சன்னி – demon of shivering

நாக சன்னி – demon of cobra

தேவ சன்னி – demon of deity

சடங்குகளின்போது 'பேய்க்கென' ஒரு உருவத்தைச் செய்து (வழக்கமாக மாவைக் குழைத்து பொம்மை வடிவில் செய்வதுண்டு) மந்திரவாதிகள் / வைத்தியர்கள் பேயோட்டும் சடங்குகளைச் செய்வதுண்டு. இம் முத்திரைகளில் ஒவ்வொருரு வகையான நோய்களுக்கும் வெவ்வேறு உருவங்களை அடையாளமாக உருவகப்படுத்தியது முத்திரைகளை வடிவமைப்புச் செய்தவரின் அறியாமையாலோ அல்லது இனக் குரோதத்தாலோ அல்லது அரசியல்வாதிகளின் ஈடுபாட்டாலோதான் நடைபெற்றிருக்க வேண்டும். ஏடுகள் மூலமோ அல்லது வாய்வழியாகவோ வந்த சடங்குகளில் இப்படி அடையாளங்கள் கொடுக்கப்பட்டிருக்கச் சாத்தியமில்லை.

'தெமழசன்னியா' என்றபெயர் ஒருநோய்க்குக் கொடுக்கப்படிருப்பதற்கான காரணம் அறியப்பட வேண்டும். சில நோய்கள், குறிப்பாகச் சுரம், அவை உருவாகும் நாடுகளின் அல்லது மக்கள் கூட்டத்தின் பெயரால் அழைக்கப்படுவது வழக்கம். உதாரணம், African Swine, Chinese Flu, Asiatic Flu என்பன. சில வேளைகளில் தமிழர் தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட நோய் 'தெமள சன்னிய' என அழைக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால் இந்த முத்திரை வெளியிடல் விடயத்தில் தமிழரை அடையாளமாகக் காட்டிய முறை முற்றிலும் தவறு. இதன் பின்னால் இனக் குரோதம் இருப்பது அப்பட்டமாகத் தெரிகிறது. குறிப்பாக அம் முத்திரையின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பில் "பாரம்பரிய சிங்களப் பேயோட்டும் சடங்கு" ("traditional Sinhalese exoticism ritual".) எனக் கூறப்பட்டு அதில் தமிழரின் அடையாளங்களைக் கொண்ட உருவத்தைப் பொறித்திருப்பது என்பது 'தமிழரையும் இன்னுமொரு 'பேயாகக்' காட்டும் முயற்சி எனவே பார்க்கப்பட வேண்டும். இது இனக் குரோதத்தின் வெளிப்பாடே தவிர வேறொன்றுமில்லை.

## கனடா வந்த ஆளுநர் திரு. சுரேன் ராகவன் அவர்களுடன் ..

வட மாகாண ஆளுநர் திரு. சுரேன் ராகவன் அவர்கள் கனேடிய வானொலிக்கு வழங்கிய நேர்காணலில் அவர் கூறிய விடயங்கள் சுருக்கமாக வழங்கப்படுகின்றன. (நேர்கண்டவர் பாலா)

32 ஆண்டுகளுக்குப் பின் முதல் தமிழ் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள ஆளுநர் அவர்கள், கடந்த 8 மாதங்களுக்குள் செய்த சேவைகள் பின்வருமாறு :

நிலம், நீர், நிதி, நீதி என்ற அடிப்படையில் 87 விடயங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

யாழ் விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக மாற்றப்பட்டது.

மழை பொய்த்துப் போகும் போது, குடிநீர்/ கமநீர் பிரச்சனையைத் தீர்க்குமுகமாக வான்மழை அறுவடை செய்யும் திட்டம் ஆய்வு செய்யப்படுகிறது.

7500 காணி அற்றவர்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன.

4200 தமிழ் அரச உத்தியோகத்தர்கள் நியமனம்.

தமிழ் பேசும் காவல்துறை உத்தியோகத்தர்கள் 300 பேர் பயிற்சி பெறுகின்றனர்.

கலை, கலாச்சாரம் தொடர்பில் திருவள்ளுவரின் முத்திரை வெளியிடப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் ஒவ்வொரு நாளும், ஒரு குறள் ஓதப்பட்டு, அதன் பொருள் அறிந்து கொள்ளல்.

$1 மில்லியன் திருக்குறள் ஆய்வுக்காக யாழ் பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

$2.5 பில்லியன் பெறுமதியான கூட்டுறவு அபிவிருத்தி வங்கி ஆரம்பிக்கப்பட்டு அதன் கிளை Canada, Scarboroughஇல் திறக்கப்படவுள்ளது.




மக்களின் குறைகளைக் கண்டறியும் வகையில் ஒவ்வொரு வாரமும் புதன் கிழமைகளில் மக்கள் சந்திப்பு இடம்பெறுகிறது. (5 மாவட்டங்களிலும்).

ராணுவத்தின் பிடியிலிருந்த 24,900 ஏக்கர் காணிகளில் யாழ் விமானத்துக்கான 1,000 ஏக்கர் உட்பட விடுவிக்கப்பட்டு, மீதம் 2,200 ஏக்கர் மட்டுமே உள்ளது.

Smart Class room திட்டத்தின் படி ஒரு ஆசிரியரின் பாடம் (விஞ்ஞானம்), ஏனைய பள்ளிகளுக்கு நேரடியாக அஞ்சல் செய்யப்படும்.

Darshini Rajh

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### வாழ்த்துவோம் வரவேற்போம்!

### 'தமிழ்த்தேசிய எழுச்சிப் பாடல்போட்டி'

கனடா நாட்டில் தமிழ்த்தேசம் காத்த மாவீரர்களையும் தேசத்தையும் நினைவு கூர்ந்து 42 இளம் சிட்டுக்கள் 42 தமிழ்த்தேசிய எழுச்சிப் பாடல்கள் பாடவுள்ளனர். இது ஒரு போட்டி நிகழ்வாக நடைபெறவுள்ளது. இந்நிகழ்வு எதிர்வரும் 16.11.2019 அன்று தமிழிசைக் கலாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த வரலாற்று சிறப்பு மிகு நிகழ்வை நடத்துகிறது 'பைரவி நுண் கலைக்கூடம்' நிகழ்வு சிறப்புற உழைக்கும் ஆசிரியர்கள், தொண்டர்கள், பெற்றோர்கள் மற்றும் அனைவருக்கும் இனிய நல்வாழ்த்து கூறுவதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

இளம் சிட்டுக்கள் வழங்கப்போகும் தமிழ்த்தேசிய எழுச்சி பாடல் என்ற தேனிலும் இனிய இசை கேட்க மக்கள் கூட்டம் கூட்டமாக வருவார்கள் அரங்கம் நிறைந்து வழியும்..

திருமுருகவேந்தன்

## யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவனின் தற்கொலை

காலந்தோறும் பட்டதாரிகளை உருவாக் தவறாத பல்கலைக்கழகங்கள் காலத்திற்கு காலம் பெறுமதியான உயிர்களையும் பலியெடுத்துவிடுகின்றன. இதில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடமும் விதிவிலக்கல்ல.

இரண்டு தினங்களுக்கு முன்னர் பல்கலை விடுதி அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவன் நேற்றையதினம் அழுகிய உடலாக மீட்கப்பட்டு இன்றையதினம் இறுதிக் கிரியைகள் நடந்தேறியுள்ளது.

குறித்தமாணவன் மன்னாரைச்சேர்ந்தவர் இலங்கையின் கல்வித்தரத்தில் சற்றுப்பின்னுக்கு நிற்கின்ற மாவட்டமான மன்னார் மாவட்டத்திலிருந்து கனவுகளோடு பல போட்டிகளின் மத்தியிலும் சவால்களிலும் கல்வி கற்று நான்கு வருடங்களைப்பூர்த்தி செய்து ஒரு பயில்நிலை மருத்துவராக வெளிவர சில மாதங்கள் உள்ள நேரத்தில் இம்மாணவனின் விபரீத முடிவு அனைவரையும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது.



கடந்தவருடத்திலும் இதே காலப்பகுதியில் ஒரு மருத்துவபீட மாணவன் தற்கொலை செய்துள்ளதாக செய்திகள் வருகின்றது. நான் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற காலத்தில் எனது நினைவுக்கு எட்டிய வகையில் மூன்று மாணவர்கள் தற்கொலை செய்திருக்கிறார்கள். அதில் இருவர் மருத்துவபீட மாணவர்கள் அதன் பின்னரும் பல்கலை மாணவர்களது தற்கொலை குறைந்த பாடில்லை. அது தொடர்கதையாக மாறியுள்ளது. இரண்டு தினங்களுக்கு முன் தற்கொலை செய்து கொண்ட மாணவனின் சாவிற்கு மருத்துவபீட நிர்வாகமே காரணம் என குற்றச்சாட்டுகள் வெளிவந்த வண்ணமுள்ளன. இந்தக்குற்றச்சாட்டை உறுதி செய்யுமாப்போல் உள்ளது கடந்த கால தற்கொலைகள். மருத்துவ பீட நிர்வாகத்தின் தளர்வற்ற இறுக்கமான செயற்பாடுகளால் சரியான காலப்பகுதியில் எழுத வேண்டிய பரீட்சைகளை சில மாணவர்கள் எழுத அனுமதிக்கப் படுவதில்லை இதனால் சில மாணவர்கள் மனமுடைந்து தற்கொலைக்கு முடிவெடுத்துவிடுகிறார்கள். இரண்டுதினங்களுக்கு முன் மரணித்த மருத்துவ பீட மாணவன் ஒரு பல்துறை ஆற்றல் உள்ளவனாம் விளையாட்டில் மிகுந்த ஈடுபாடுடைய ஒருவன் மனஉளைச்சலில் தற்கொலைசெய்ய முடிவெடுப்பதென்பது ஆகப்பிந்திய அபத்தம். காரணம் விளையாட்டுக்கள் மனஅழுத்தங்களை சீராக்க/ விடுபட சிறந்த மருந்து என்கிறார்கள் உளவியல் நிபுணர்கள். அப்படியாயின் இந்த மாணவனுக்கு ஆற்றுப்படுத்தக்கூடிய சக நண்பர்கள் இல்லையா? இரண்டு நாட்களுக்கு முன் தனது அறையில் தற்கொலை செய்து கொண்டால் அவனை அவனுடைய நண்பர்கள் தேடவில்லையா? அவனது குடும்பம் அவனை தொடர்பு கொள்ள முடியவில்லையே என்று அங்கலய்த்து வேறு மாணவர்களைத்தொடர்பு கொள்ளவில்லையா? அறையிலிருந்து அழுகிய உடலின் மணம் வரும்வரை அவ்விடத்திற்கு யாருமே செல்லவில்லையா?

இவ்வாறு பலகேள்விகளை விட்டுச்செல்கிறது குறித்த மாணவனின் தற்கொலை.

மன உளைச்சல், விரக்தி, ஏமாற்றம், தோல்வி, ஆற்றாமை என்பவற்றுக்கு தீர்வு தற்கொலைதானா? என்றால் உறுதியாக இல்லை என்பேன். சாகிறதுக்கு ஆயிரம் வழிகள் இருக்கும்போது மேற்சொன்ன துயரங்களிலிருந்து விடுபட்டு வாழ்க்கையில் எதிர் நீச்சலடிக்க ஒருவழியாவது இருக்காமலா போய்விடும் அந்த ஒருவழியைத்தேடிக்கண்டுபிடித்துவிட்டால் தற்கொலைகள் அருகிப்போய்விடும்.

அந்த வழியைத்தேடுங்கள் வாழ்வில் வெற்றியும் கிட்டும்

மன்னார் மண் ஒரு மருத்துவனை இழந்து தவிக்கிறது என்பது மறுக்கமுடியாத துயரம்

## கனடிய பொதுத் தேர்தல் முடிவுகள் 2019

இதுவரையான முடிவுகளின் அடிப்படையில் (Tues, 12.45am) கனடாவில் லிபெரல் கட்சி சிறுபான்மை ஆட்சியை அமைக்கக் கூடியதாக இருக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் நிலவரம் :

1. Gary Anandasangaree – Liberal – Scar, Rouge Park (incumbent) வெற்றி

2. Quintus Thuraisingam – Conservative – Scar, Guildwood தோல்வி

John McKay – Liberal – incumbent வெற்றி

3. Theodore Antony – Conservative – Markham-Stouffville தோல்வி


Helena Jaczey - incumbent (Liberal) வெற்றி

4. Jeremiah Vijeyaratnam – Peoples Party – Scar Centre தோல்வி

Salma Zahid – Liberal – incumbent வெற்றி

338 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு கட்சி பெரும்பான்மை பெற, 170 உறுப்பினர்கள் வெற்றி பெறவேண்டியதாக இருக்கும்.


அண்ணளவாக 37.2 மில்லியன் சனத்தொகை கொண்ட கனடாவில் இம்முறை 27.4 மில்லியன் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றார்கள். அவர்களில் 4.7 மில்லியன் பேர் முற்கூட்டிய வாக்குப் பதிவு 4 நாட்களில் வாக்களித்திருந்தனர்.




Darshini Rajh

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






வழங்குகிறார். ஆனால் இனப்பிரச்சினை தொடர்பில் வெளிப்படையான அல்லது துலக்கமான வார்த்தைகளில் அந்த அறிக்கைகருத்துக்கூறவில்லை. அதற்கு பொழிப்புரை தேவைப்படுகிறதா? இப்படிப் பார்த்தல் சஜித்தை விடவும் கோதபாய தெளிவாகவும் வெளிப்படையாகவும் பேசுகிறார். அவர் தமிழ்

வாக்குகளைக் கவர வேண்டும் என்று பெரிதாக்க கஸ்ரப்படவில்லை. தனிச்சிங்கள வாக்குகளையே அவர் அதிகம் குறிவைக்கிறார. அவருடையதுயுத்தவெற்றிவாதம். அதற்கு முகமூடி போட முடியாது.

ஆனால் தமிழ் வாக்குகளில் தங்கியிருக்கும் சஜித்தோ மங்கலான மூட்டமான வார்த்தைகளால் கதைக்கிறார். தான் வாக்குறுதி வழங்கா விட்டாலும் தமிழ்

மக்கள் தனக்கே வாக்களிப்பார்கள் என்று நம்புகிறார். தமிழ் மக்களோடு ஏதும் உடன்பாட்டுக்கு வந்தால் அது தென்னிலங்கையில் தன்னைத் தோற்கடித்து விடும் என்பதை ஒரு வாய்ப்பான சாட்டாக வைத்துக் கொண்டு அவரும் தனிச் சிங்கள வாக்குகளை இழந்துவிடாதிருக்கப் பாடுபடுகிறார்.

இவ்வாறான ஒரு பின்னணியில் சஜித் பிரேமதாச வந்தால் ஜனநாயகம் செழிக்கும் என்பது ஓர் ஊகம் மட்டுமே. தவிர ஓர் ஆபத்தும் உண்டு. அது என்னவெனில் சஜித் மேற்கிற்கும் இந்தியாவுக்கும் நெருக்கமாக இருப்பார்.

# மேய்ப்பர் இல்லாத ஆடுகளா தமிழ் மக்கள்?

இலங்கை தீவின் மூத்த தமிழ் ஊடகவியலாளர்களில் ஒருவர் தனபாலசிங்கம். அவர் சில நாட்களுக்கு முன் தனது முகநூல் பக்கத்தில் பின்வருமாறு எழுதியுள்ளார்ஞ். "வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் ஜனாதிபதி தேர்தலில் வழமையாக தமக்கு விருப்பமான ஒரு வேட்பாளரை தெரிவு செய்வது என்பதை விடவும் நமக்கு விருப்பம் இல்லாத ஒரு வேட்பாளரின் தோல்வியை உறுதி செய்வதற்காகவே தமது வாக்குரிமையை பயன்படுத்துகிறார்கள். அவர்களை அவர்களுடைய விருப்பப்படி வாக்களிக்க விடுவதே தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை உணர் திறன் மிக்கதாக இருக்கும். தமிழ் மக்கள் விவேகமாக முடிவெடுப்பார்கள்".

தனபாலசிங்கம் மட்டுமல்ல பெரும்பாலான கூட்டமைப்பு ஆதரவாளர்களும் அப்படித்தான் கூறுகிறார்கள். ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை தேர்தலில் முன் நிறுத்துவதை எதிர்க்கும் பலரும் அப்படித்தான் கூறுகிறார்கள். ராஜபக்சவை தோற்கடிக்க வேண்டும் என்று விரும்பும் எல்லாரும் அப்படித்தான் கூறுகிறார்கள். ஐந்து கட்சிகளால் கையெழுத்திடப்பட்ட 13 அம்சங்கள் அடங்கிய ஆவணத்தை எதிர்க்கும் பலரும் அப்படித்தான் கூறுகிறார்கள். தமிழ்ப் பகுதிகளில் நடந்து வரும் பெரும்பாலான சந்திப்புகளில் மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலரும் அப்படித்தான் கூறுகிறார்கள். அதாவது மக்களை அவர்களுடைய விருப்பப்படி வாக்களிக்க விடுங்கள் என்று. ஏனெனில் தமிழ் மக்கள் தெளிவாக முடிவெடுத்து வாக்களிப்பார்கள் என்று.

இங்கு தமிழ் மக்களின் தெளிவு என்று கருதப்படுவது என்ன ? அது 2009இல் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை தோற்கடித்த ராஜபக்ச குடும்பத்தை எப்படியாவது தோற்கடிக்க வேண்டும் என்பதுதான். தமிழ் பொதுப்புத்தி அப்படித்தான் சிந்திக்கிறது. எனவே தமிழ் மக்களை அவர்களுடைய விருப்பப்படி வாக்களிக்க விடுங்கள் என்று கூறும் ஒவ்வொருவரும் சஜித் பிரேமதாச வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறவர்கள்தான்.

ஐந்து கட்சிகள் கையெழுத்திட்டு உருவாக்கிய பொது ஆவணத்தை சஜித் கண்டுகொள்ளவே இல்லை. தபால்மூல வாக்கெடுப்பு முடியும் வரை பொது ஆவணத்தை குறித்து அவர் உத்தியோகபூர்வமாக எதையும் கூறி இருக்கவில்லை. அதேசமயம் கோத்தபாய அதை நிராகரித்துவிட்டார். அனுர அதில் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதாகத் தெரிகிறது. பொது ஆவணத்திற்குரிய பதிலை சஜித் நேற்று முன்தினம் வெளியிட்ட அவருடைய தேர்தல் அறிக்கையில் கூறுவார் என்று எப்படி எதிர்பார்த்திருக்கலாம்? ஏனெனில் தமிழ் மக்களின் கோரிக்கைகளை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டால் அவர் தென்னிலங்கையில் தோற்று விடுவாரே? எனவே அவரோடு ரகசிய உடன்படிக்கைதான் வைத்துக் கொள்ளலாம். ஆனால் அவருடைய தேர்தல் அறிக்கை வரும் வரை முடிவெடுப்பதை ஒத்திவைக்கும்படி கூட்டமைப்பு பல்கலைக்கழக மாணவர்களிடம் கேட்டதை எப்படி விளங்கிக் கொள்வது?

தேர்தல் அறிக்கைகளை பொறுத்தவரை கோத்தபாயவை விடவும் சஜித் அதிகம் வாக்குறுதிகளை அவர் அபிவிருத்தி மைய இனப்படுகொலையை முன்னடுப்பாராக இருந்தால் அதை மேற்கும் தடுக்காது இந்தியாவும் தடுக்காது.

அதற்காக ராஜபக்ச வர வேண்டுமென்று இக்கட்டுரை கூறவரவில்லை. மாறாக சஜித்தை ஆதரிப்பது என்றால் அதை நிபந்தனையோடு செய்ய வேண்டுமென்று இக்கட்டுரை கேட்கிறது. ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை முன்னிறுத்தினால் அந்த நிபந்தனை ஒரு முழுப் பேரமாக மாறும். அப்பொழுது தமிழ் மக்கள் தமது முதலாவது விருப்பு வாக்கை கொள்கைக்கும் (தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுக்கும்) இரண்டாவது விருப்பு வாக்கை தந்திரோபாயமாக முடிவெடுத்தும் வழங்கலாம்.

ராஜபக்ஷவை தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக கண்ணை மூடிக்கொண்டு சஜித் பிரேமதாசவை கொண்டுவர முடியாது. தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து தந்திரோபாய ரீதியாகவும் உத்தி பூர்வமாகவும் சிங்கள வேட்பாளர்களோடு ஒரு பேரத்தை வைத்துக் கொள்ள வேண்டுமென்று இக்கட்டுரை கேட்கிறது.

ஆனால் கொடுமை என்னவென்றால் அப்படி ஒரு பேரத்தை முன்வைக்கும் நிலையில் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் காணப்படவில்லை. அவர்களுக்கு பேர நரம்பே கிடையாது? அதனால் இப்பொழுது ஜனாதிபதித் தேர்தல் களத்தை பொறுத்தவரை தமிழ்ப்பேரம் இறங்கிக் கொண்டிருப்பதாகவே இக்கட்டுரை கருதுகிறது.

இந்தோ பசிபிக் மூலோபாயத்தை பொறுத்தவரை தமிழ் மக்கள் கேந்திர முக்கியத்துவம் மிக்க ஒரு புவியியல் அமைவிடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். இதனால் தமிழ் வாக்குகள் கேந்திர முக்கியத்துவம் மிக்கவை. அதனால் தான் கடந்த 2015ல் ஆட்சி மாற்றத்திற்கு தமிழ் மக்கள் தேவைப்பட்டார்கள். அதன்பின் ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தை பாதுகாப்பதற்கு ஒவ்வொரு பட்ஜெட் வாக்கெடுப்பின் போதும் தமிழ் மக்கள் தேவைப்பட்டார்கள். ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக

**ஒரு சமூகத்தின் பொதுப்புத்தியை நீண்டகால நோக்கில் திட்டமிட்டு நெறிப்படுத்தி திசைப்படுத்தும் தீர்க்கதரிசனம் மிக்க முடிவுகளை எடுப்பதற்கே கட்சிகள் தேவை. தலைவர்கள் தேவை. செயற்பாட்டாளர்கள் தேவை. கருத்துருவாக்கிகள் தேவை. ஆனால் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் கருத்துருவாக்கிகளும் முடிவெடுக்க முடியாத அல்லது முடிவெடுக்க தயங்குகின்ற அல்லது முடிவை வெளிப்படையாகப் பேசத் தயங்குகின்ற ஒரு நிலை எனப்படுவது எதைக் காட்டுகிறது? தமிழ் மக்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளாக இருக்கிறார்கள் என்பதையா?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் ஒவ்வொன்றின் போதும் தமிழ் மக்களே அவரை பாதுகாத்தார்கள். கடந்த ஒக்டோபர் மாதம் மைத்திரிபால சிறிசேன ஆட்சியை குழப்பிய பொழுது தமிழ் மக்களே பெருமளவுக்கு ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாத்தார்கள். ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பது என்பது அதன் அனைத்துலகப் பரிமாணத்தைப் பொறுத்தவரை மேற்கு நாடுகளின் நலன்களையும் இந்தியாவின் நலன்களையும் பாதுகாப்பதுதான். இப்படிப் பார்த்தால் கடந்த ஐந்து ஆண்டுகளாக மேற்கு நாடுகள் மற்றும் இந்தியாவின் பிராந்திய பூகோள நலன்களைப் பெருமளவுக்குப் பாதுகாக்கும் மக்களாக தமிழ் மக்களே காணப்படுகிறார்கள்.

ஆயின் தமிழ் மக்கள் கேந்திர முக்கியத்துவம் மிக்க வாக்குகளைப் பெற்றிருக்கிறார்கள் என்று பொருள். அந்த அளவுக்கு பேர வாய்ப்புக்களைக் கொண்டிருக்கும் ஒரு மக்கள் கூட்டம் தனது பேரத்தை அதிகம் பிரயோகிக்க வேண்டிய ஒரு தேர்தல் களத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதனை நேற்று வரையிலும் முடிவெடுக்கவில்லை என்பது எதைக் காட்டுகிறது? அல்லது முடிவெடுக்கப் பிந்துவது எதை காட்டுகிறது? கட்சிகளும் சிவில் அமைப்புகளும் சில கருத்துருவாக்கிகளும் மக்களை அவர்களின் விருப்பப்படி வாக்களிக்க விடுங்கள் என்று கூறுவது எதைக் காட்டுகிறது? மக்கள் தங்கள் விருப்பப்படியே முடிவெடுப்பார்கள் என்றால் பிறகெதற்கு கட்சிகள்? பிறகெதற்கு பிரதிநிதித்துவ ஜனநாயகம்? பேசாமல் நேரடி ஜனநாயகத்துக்கு போய் விடலாமே?

ஒரு சமூகத்தின் பொதுப்புத்தியை நீண்டகால நோக்கில் திட்டமிட்டு நெறிப்படுத்தி திசைப்படுத்தும் தீர்க்கதரிசனம் மிக்க முடிவுகளை எடுப்பதற்கேகட்சிகள்தேவை. தலைவர்கள் தேவை. செயற்பாட்டாளர்கள் தேவை. கருத்துருவாக்கிகள் தேவை. ஆனால் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் கருத்துருவாக்கிகளும் முடிவெடுக்க முடியாத அல்லது முடிவெடுக்க தயங்குகின்ற அல்லது முடிவை வெளிப்படையாகப் பேசத் தயங்குகின்ற ஒரு நிலை எனப்படுவது எதைக் காட்டுகிறது? தமிழ் மக்கள் மேய்ப்பன் இல்லாத ஆடுகளாக இருக்கிறார்கள் என்பதையா?

கூட்டமைப்பு அதன் முடிவை இக்கட்டுரை எழுதப்படும் இந்நாள் வரையிலும் அறிவிக்கவில்லை. அவர்கள் பம்மிக் கொண்டு திரிகிறார்கள். ஒருபுறம் 13 அம்சங்கள் அடங்கிய பொது ஆவணம் இன்னொருபுறம் சஜித் தோற்று விடக்கூடாது என்ற கவனம். இரண்டுக்குமிடையே முடிவெடுக்காமல் அல்லது எடுத்த முடிவை அறிவிக்காமல் அக் கட்சியானது பம்மிக் கொண்டு திரிகிறது. அக்கட்சியின் ஆதரவாளர்கள் கடைசிக் கட்டப் போரில் கருணாநிதி எழுதியது போல பூடகமாக அரூபமாக சஜித்துக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

விக்னேஸ்வரன் தனது முடிவை கடந்த செவ்வாய்க்கிழமை ஊரளவிற்குக் கோடி காட்டிவிட்டார். ஆனால் அந்த முடிவு தமிழ் மக்களுக்கு துலக்கமான வழிகாட்டலை செய்யவில்லை. எந்த ஒரு பிரதான வேட்பாளருக்கும் வாக்களிக்குமாறு தமது விரலை சுட்டிக் காட்டுவதற்குத் தமக்கு தார்மீக உரிமை இல்லை என்று விக்னேஸ்வரன் கூறியிருக்கிறார் அப்படி என்றால் 13 அம்சக் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட சிவாஜிலிங்கத்தை ஒரு பொது வேட்பாளராக ஏற்றுக் கொள்ளலாமா? அல்லது சிறிதுங்க ஜெயசூரியவைஏற்றுக்கொள்ளலாமா?

ஆனால் விக்னேஸ்வரன் பகிஸ்கரிப்பை ஆதரிக்கவில்லை என்று தெரிகிறது. பல்கலைக்கழக மாணவர்களும் ஆதரிக்கவில்லை.

விக்னேஸ்வரனுக்கு முன்னரே கஜேந்திரகுமார் தனது முடிவை வெளிப்படுத்தி விட்டார். எனினும் அவர் தனது முடிவாகிய பகிஷ்கரிப்பை ஒரு மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கான பிரயத்தனங்கள் எதையும் இதுவரையிலும் மேற்கொண்டிருக்கவில்லை.

இப்படிப்பட்டதொரு வெற்றிடத்தில்தான் சில சிவில் அமைப்புக்களும் சில கருத்துருவாக்கிகளும் மக்களை அவர்கள் விரும்பிய முடிவை எடுக்க விடுங்கள் என்று கூறுகிறார்கள். வேறு சிலர் இப்பொழுது காலம் பிந்தி விட்டது எனவே இத்தேர்தலை குறித்து இனி எதுவும் சொல்வதற்கில்லை செய்வதற்கும் இல்லை இதை அப்படியே விட்டு விட வேண்டும் அடுத்த தேர்தலை பற்றி யோசிக்கலாம் அதாவது ஜனாதிபதி தேர்தலை பற்றி இனி சிந்தித்துப் பயன் இல்லை என்று கூற வருகிறார்கள்.

எவ்வளவு பயங்கரம்? எவ்வளவு பெரிய இயலாமை?

இந்தப்பிராந்தியத்திலேயேகேந்திர முக்கியத்துவம் மிக்க வாக்குகளைப் பெற்றுள்ள காரணத்தால் பேர வாய்ப்புகளை அதிகளவு கொண்டுள்ள ஒரு மக்கள் கூட்டத்துக்கு தபால் மூல வாக்கெடுப்பு வரையிலும் தெளிவாகவும் தீர்க்கதரிசனமாகவும் வழிகாட்ட ஒருவருமில்லையா?

பேர வாய்ப்புக்களை அதிகளவு கொண்ட ஒரு மக்கள் கூட்டம் அதன் பேரத்தைப் பிரயோகிக்க முடியாதிருப்பதற்கு யார் பொறுப்பு?

மக்கள் தமது வாக்குரிமையை கட்டாயம் பிரயோகிக்க வேண்டும் என்று வகுப்பெடுக்கும் பலருக்கும் மக்கள் யாருக்கு? ஏன்? வாக்களிக்க வேண்டும் என்று கூறத் தெரியவில்லை. அவ்வாறு துலக்கமாகக் கூறமுடியாதபடி தெரிவுகள் இறுகிப் போனதுக்கு யார் பொறுப்பு? பேர வாய்ப்புக்கள் அதிகமுடைய ஒருமக்கள் கூட்டத்தின் தலைவர்கள் இப்படி தெரிவுகளற்றமுடிவுகளற்றஓர் அரசியல் சந்தியில் வந்து நிற்கக் காரணம் என்ன? மக்களே முடிவெடுக்கட்டும் என்றால் கட்சிகள் எதற்கு? தலைவர்கள் எதற்கு? சிவில் அமைப்புகள் எதற்கு?

ஒரு காலம் உலகத்தையே திரும்பி பார்க்க வைத்த ஒரு மக்கள் கூட்டம் இப்பொழுது முடிவெடுக்க முடியாத அல்லது பேரத்தைக் கட்டியெழுப்பும் விதத்தில் திட்டமிட்டு முன்கூட்டியே தீர்க்கதரிசனமான முடிவுகளை எடுக்கத் தெரியாத அல்லது எடுத்த முடிவை வெளிப்படையாக மக்களுக்குக் கூறத்தயங்கும் நோஞ்சான் தலைவர்களைக் கொண்ட ஒரு மக்கள் கூட்டமாக மாறிவிட்டதா?

நிலாந்தன்


# DEBT FREE CREDIT SOLUTION

Seeking freedom from DEBT?

We offer Total Debt FREE SOLUTIONS



**Elankeeran .T**

*Certified Insolvency Counsellor*

By Canadian Association of Insolvency and Restructuring Professionals (CAIRP)

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்.

  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money.

- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்.

  We shield you from your creditors and offer you a guranteed protection.

SETTLEMENT
CONSUMER PROPOSAL
BANKRUPTCY

Cell. 416.834.7227 Fax. 1.877.800.789
Tel. 416.434.1522 freedebt.toro@gmail.com


**Head Office:**
10 Milner Business Court, Suite 334
Toronto, ON. M1B 3C6

**Branch Office:**
101 Palstan Road
Mississauga, ON. L4Y 4E7

www.TotalDebtFree.ca


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்களால் மலர்ந்த காவியங்கள்...




## அரும்பு

கனடா எழுத்தாளர் இணையத்தின் வெளியீடாக ஏப்ரல் 2000ம் ஆண்டில் வெளியாகியிருந்தது. அரும்பு கனடிய தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைத் தொகுப்பு. பல தடவைகள் கனடிய தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதைகள் தொகுக்க முற்பட்ட போதும், நானறிந்தவரை அவையெதுவும் சாத்தியப்படவில்லை. 12 சிறு கதைகளைக் கொண்ட இந் நூல் ஒரு குறிப்பிட்ட எழுத்தாளர்களின் சிறுகதைகளையே கொண்டுள்ளது. 2000ம் ஆண்டுகளில் எழுதிக் கொண்டிருந்த பல சிறுகதையாசிரியர்களின் கதைகளை இந் நூல் உள்வாங்கவில்லை. அவர்களிடம்கேட்டு,அவர்கள் தவிர்த்திருக்கலாம். எனவே அதனை இங்கு ஒரு குறையாக குறிப்பிடவில்லை. எனினும். கனடாவில் தொகுக்கப்பட்ட முதல் நூல் என்றளவில் இந் நூல் முக்கியம் பெறுகின்றது.

குறமகள் (வள்ளிநாயகி இராமலிங்கம்) தமிழ்நதி (கலைவாணி இராஜகுமாரன்), வல்வை கமலா பெரியதம்பி ஆகிய பெண் எழுத்தாளர்களுடன், காலம் செல்வம்(செல்வம் அருளானந்தம்), என்.கே மகாலிங்கம், ஆர். என். லோகேந்திரம், குரு அரவிந்தன், நாவாந்துறை டானியல் ஜீவா, மா.சித்திவிநாயகம், எம். பாபு, இரா. சம்பந்தன் இவர்களுடன் கவிஞர் கந்தவனம் ஆகியோரது சிறுகதைகள் இந் நூலில் உள்ளன. இவர்களுள் வல்வை கமலா பெரியதம்பி, குறமகள் ஆகியோர் அமரராகிவிட்டார்கள். கமலா பெரியதம்பியின் சிறுகதைத் தொகுப்பான 'மாங்கல்யம்' கனடாவிலேயே வெளியாகியிருந்தது. இவர் ஒரு நாவல், கட்டுரைத் தொகுப்பு என பல நூல்களை எழுதியுள்ளார். கவிஞராக பத்திரிகையாசிரியாக அறியப்பட்ட ஆர்.என். லோகேந்திரம் சிறுகதை எழுதுவதிலும் முத்திரை பதித்துள்ளார். ரொரன்ரோவில் 80களின் இறுதியில் வெளியான 'காலத்தின் பதிவுகள்' என்ற கவிதை நூலின் மூன்று ஆசிரியர்களுள் ஆர்.என்.லோகேந்திரமும் ஒருவர். மற்றைய இருவர் கவிஞர் கந்தசாமி, ரதன். பின்னிருவரும் கவிதைகள் எழுதுவதை நிறுத்திவிட்டனர் அல்லது குறைத்து விட்டனர்.

நூலின் இறுதியில் சிறுகதை வளர்ச்சி ஒரு கண்ணோட்டம் என்ற தலைப்பில் கவிஞர் கந்தவனம் உதயன் விழாவில் ஆற்றிய உரை இணைக்கப்பட்டுள்ளது. இவற்றை இவரது கதைகள் உள்வாங்கியுள்ளனவா? இது நூலின் அறிமுகம் மட்டுமே.

## யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண்களின் கல்வி நிலை ஓர் ஆய்வு

### குறமகள்

இந் நூலாசிரியர் அமரர் குறமகள். வள்ளிநாயகி இராமலிங்கம் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் பல நூல்களின் ஆசிரியர். தனது மகளை தமிழ்த் தேசிய போராட்டத்தில் இழந்துள்ளார். சுமார் ஏழு நூல்கள் எழுதியுள்ளார். இவை சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் என அடங்கும். 1933ல் பிறந்த இவர் நாடகவியல் பயின்று ஆசிரியராக கடமைபுரிந்துள்ளார். பின்னர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராகவும் இருந்துள்ளார். 1950களின் நடுப்பகுதியில் நாடகவியல் பயின்ற ஒரேயொரு பெண் இவர். ஆரம்பத்தில் யாழ்நகரில் கார் ஓட்டிய பெண்களில் இவரும் ஒருவர். பெண் சமத்துவக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வந்துள்ளார். இவருக்கு அகேனம் விருதும் வழங்கப்பட்டது. தாய் வீடு பத்திரிகையில், இவர் மரணமாவதற்கு முன்னர் அருண் மொழி வர்மனுக்கு வழங்கிய் செவ்வி பதிவாகியுள்ளது. மிக முக்கியமான ஒரு செவ்வி இது.



இவர் எழுதிய நூல்களில் மிகவும் குறிப்பிடத்தக்கது 'யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண்களின் கல்வி நிலை ஓர் ஆய்வு' என்ற நூல். இந் நூல் பற்றிய விமர்சனக் குறிப்புக்களை இணையத்தில் காணலாம். இந் நூல் ரொரன்ரோவில் யூன் 16, 2007ல் வெளியிடப்பட்டது.

பெண்கள் கல்விகற்க பிரித்தானியர் ஏற்படுத்திக் [illegible] எனக் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் பெண்கள் கல்வி பற்றிய ஆய்வுகள் மிக மிகக் குறைவு. அதுவும் தமிழ்ப் பெண்கள் பற்றிய ஆய்வு நூல்கள் மிகவும் அரிதாகவேயுள்ளன. அக் குறையைப் போக்க குறமகள் முயற்சி செய்துள்ளார். நூல் எழுதப்பட்ட காலங்களில் குறமகள் கனடாவில் வசித்தமையால், அவர் கிழக்கிலங்கை, மலையகம் போன்ற தமிழ் மக்கள் அதிகம் வாழும் பிரதேசங்களில் பெண்கள் கல்வி பற்றிய ஆய்வை செய்ய முடியாமல் போய்விட்டது. இதனை அவர் ஒரு செவ்வியில் குறிப்பிட்டுள்ளளார். நூல் அடிக்குறிப்புக்களைக் கொண்டிருப்பின் நூலின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்திருக்கும்.

இந் நூலில் இருந்து சில பகுதிகள்

குறமகள் தனது ஆய்வை 1810க்கு பின்னர், 1830-1865, 1865-1900 போன்ற பகுதிகளாக பிரித்து மேற்கொள்கின்றார். இவரது ஆய்வின் பிரகாரம் பெண்கள் கல்வியானது ஆங்கிலேயரின் வருகைக்கு பின்னரே ஏற்படுத்தப்பட்டது. இதற்கு இவர் புள்ளி விபரங்களையும் அளித்துள்ளார். இலங்கை சட்டசபையின் முதலாவது உறுப்பினர் குமாரசாமியின் மனைவிகூட எழுத்தறிவற்றவர் என்ற குறமகளின் கூற்றே பெண்கள் கல்வியறிவைப்பற்றி தமிழ்ச் சமூகம் கவலை கொள்ளவில்லை என்பதனை உறுதிசெய்கின்றது. அண்மைக்கால ஆய்வொன்றின் பிரகாரம் 70களில் க.பொ.த (சா) சித்தியடைந்த பெண்களில் 50வீதமானோர் உயர்தர பரீட்சைக்கு தோன்றவில்லை. இவர்களில் பெரும்பாலானோர் உயர்தர பரீட்சைக்கு முன்பாக திருமணம் செய்துவிட்டார்கள். இது தமிழ்ச் சமூகம் பெண்கள் மீது கொண்டிருந்த ஒடுக்கு முறை பாசத்தை வெளிப்படுத்துகின்றது. பெண்கள் கல்விகற்க விரும்பிய போதும்இ அதற்கான பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட்ட பின்னரும்இ பெண்கள் கல்வி கற்பதை ஆண்கள் எதிர்த்து வந்துள்ளனர். இவரது ஆய்வு இதனை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. பெண்கள் தொழில்சார் நிலைகளிலும்இ வர்த்தக ஈடுபாடுகளிலும் காலத்துக்கு காலம் ஆட்சி செலுத்தி வந்துள்ளனர். சிவத்தம்பி முன்னுரையில் குறிப்பிட்டது போல் 'நெல்லியடியில் மில் தொழிலகங்களை பெண்களே நிலீவகித்து வந்தனர்'. பிற்காலங்களில் பெண்கள் பெற்ற கல்வியானது குடும்ப நிலீவாகத்துக்கு முக்கியமானதாக இருந்தது. அத்துடன் சீட்டு பிடித்தல் போன்ற சில குடும்ப, வர்த்தக பண முதலீடுகளுக்கு இந்த பெண்கள் கல்வி பயன்படுத்தப்பட்டது. இதுவும் ஓர் வகை பெண் ஒடுக்கு முறையே. காலத்துக்கு ஏற்ப ஒடுக்குமுழறையின் வடிவம் மாறுகின்றது.

**விதயன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thermo Care
## HEATING & COOLING

TCHC

**For all your repairs & installation needs**

**O: 416 640 1174 | C: 416 825 9373 | F: 416 640 1175**

We offer flexible Financing Options to specifically meet your budget.
It's the fast, flexible and easy way to upgrade your home-comfort system.

**Toll Free : 1 800 416 1623**

1. Financing Loan for 1 year with No Payment and No Interest Charged.
2. Equal Payment Plans that can be arranged to be paid within 2 or 3 Years.
3. Financing Options offered for 5 or 10 years, paid with equal installation payments

- Furnace
- Air Conditioner
- Furnace Cleaning
- Humidifiers
- Air Cleaners
- Tankless Water Heater Rental

Avail up to $2350 In Rebates on Eligible Heating & Cooling Equipment

» **Heating / Cooling Protection Plan $14.99/monthly**

» **Maintenance Plan $7.99/monthly**

» **Air Conditioner, Furnace Rental Rate from $29.99/monthly**

» **Tankless Water Heater Rental Rate from $34.99/monthly**




## The Next Generation
**Water Softeners**

*Quality water better than bottled water*

EXCALIBUR
Water Systems

*Refineosoft*

- Removes Chlorine
- Softens Water
- Save 70% On Soap & Cleaners
- Removes Chemicals
- Soften Skin & Hair
- Save 27% On Hot Water Cost
- Shinny Kitchen & Bath Sink




BEST SERVICE

BEST WARRANTY

BEST PRICE

**1365 Morningside Avenue, Unit #6 | Scarborough, M1B 4Y5 | www.thermocare.ca | thermocare@hotmail.ca**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் மாவீரர் நாள்

## சில நினைவுகள்



*1989 நவம்பர் 27*

அதுவன்னி மண் தன்னை ஒரு மகத்தான புனிதத்தால் அலங்கரித்துக் கொண்ட நாள். கோணாவில் பாடசாலை மைதானமெங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகள் காற்றில் பறக்கின்றன. அலங்கார மேடை. அதன் பின் திரையில் பொறிக்கப்பட்ட புலிச்சின்னம். அதன் கீழே மாவீரர் தினம் 1989 எனப் பொறிக்கப்பட்ட பதாதை. ஒரு புனிதம் அந்த மைதானத்தில் மட்டுமல்ல அதன் சுற்றாடலிலும் கோலோச்சி வலம் வருகிறது.

ஆம். அங்கே முதல் மாவீரர் தினத்திற்கான தயாரிப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளிலுள்ள அத்தனை வாடகைக் கார்களும், வேன்களும் ஒவ்வொன்றாக வந்து சேர்கின்றன. சகல மின்பிறப்பாக்கிகளும் கொண்டுவந்துஇறக்கப்படுகின்றன. எல்லா ஒலிபரப்பிகளும் வந்துகுவிந்துவிட்டன. அத்தனை வாகனங்களுக்கும், அத்தனை ஒலி பெருக்கிகளுக்கும், அத்தனை மின்பிறப்பாக்கிகளுக்கம் அங்கு என்ன தான் தேவை வந்து விட்டது?. உண்மையாகவே எல்லாமே பாவிக்க வேண்டிய அளவுக்கு தேவை எதுவுமே இல்லை.

சிலவே போதுமானவை. அங்கே ஒரு தந்திரோபாயம். ஒன்றிரண்டு வாகனங்கள் மின்பிறப்பாக்கிகள், ஒலிபெருக்கிகள் மட்டும் அந்த மைதானத்திற்குள் கொண்டுவரப்பட்டால் அதன் உரிமையாளர்கள் அடுத்த நாளே புலியென்று நையப்புடைக்கப்படலாம். கைது செய்யப்படலாம். சித்திரவதைக்கு உட்படுத்தப்படலாம், கழுத்து வெட்டப்பட்டு வீதியிலும் வீசப்படலாம்!

அனைவருமே மாவீரர் தின நிகழ்வுக்கு தங்கள் வாகனங்களையும் சாதனங்களையும் கொண்டு வந்து விட்டால் எவரைப் பலியாக்குவது எவரைப்பிடிப்பது? எவரை அடிப்பது? எவரைக் கழுத்தறுப்பது.?

ஏறக்குறைய இரண்டு மணிக்கே வீதிகளில் நெடுந்தூரத்திற்கு வாகனங்கள் அணி வந்து நிற்கின்றன. ஒலி பெருக்கிகள் கார்களில் கட்டப்பட்டு விட்டன. மின் பிறப்பாக்கிகள் மேடையின் பின் அடுக்கப்பட்டு விட்டன.

அன்று காலையிலே இப்படி ஒரு விழா நடக்கவிருப்பதாக மக்களுக்கு வாய்மொழியாக அறிவிக்கப்பட்ட போதிலும் இரண்டு மூன்று மணிக்கே கால் நடையாகவும் சைக்கிள்களிலும் மக்கள் பெரும் திரளாக கூட ஆரம்பித்துவிட்டனர்.

நாலு மைல் தொலைவில் உருத்திரபுரத்தில் இந்தியப்படை முகாம். எதிர்ப்புறத்தில் ஆறுமைல் தொலைவில் அக்கராயனில் இந்தியப்படை முகாம். இன்னொரு புறத்தில் கிளிநொச்சி நகரில் ஆறு மைல் தொலைவில் இந்தியப்படை முகாம். ஈ.என்.டிஎல்.எவ் தேசதத்துரோகிகளின் முகாமும். மூன்று பக்கங்களிலும் ஆபத்து நாக்கை நீட்டிக்கொண்டு நிற்க நடுவே மாவீரர் நாள் விழா மெல்ல மெல்லப் பிரமாண்டமடைகிறது. இந்தியப்படையோ, ஈ.என்.டி.எல். எவ் குழுவோ வந்தால், அவர்களை எதிர்கொண்டு விரட்டி அடிக்கத் தயாராக விடுதலைப் புலிகளின் படையணி மறைவிடங்களில் காத்திருக்கிறது என்பதை மக்கள் எவரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. எனினும் மாவீரர்களின் மகத்துவம் அவர்களை துணிச்சலுடன் அணிதிரள வைக்கிறது.

மலையாக மைதானமெங்கும் மின்சார ஒளி வெள்ளம் பாய்ந்தது. விழா மாவீரர் வணக்கத்துடன் ஆரம்பமானது. தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் பலர் கொல்லப்பட்டுவிட்டனர். இன்னும் சிலர் காடுகளுக்குள் போய் விட்டனர். இன்னும் ஒரு பகுதியினர் கொழும்புக்கு தப்பியோடி விட்டனர். இப்படியான நெருக்கடியான நிலையிலும் வன்னிமண்ணிலேயே தலைமறைவாகஇருந்து கொண்டு இயக்கப் பணிகளுக்குத் தோள்கொடுத்து வந்த ஆதரவாளர்களின் ஒத்துழைப்பில் இப்பிரமாண்டமான விழா அரங்கேறுகிறது.

மைதானம் நிறைந்த மக்களின் வெள்ளம். உணர்வு பூர்வமான ஒரு சூழல் எங்கும் பரவி ஒரு உன்னதத்தைச் சொரிய வைக்கிறது. அங்கே மாவீரர் துயிலும் இல்லம் இல்லை. ஆனால், மாவீரர்களின் தியாகத்தால் விம்மிப்புடைத்த இதயங்கள் இருந்தன. அங்கே தாயகத்திற்காக உயிர் தந்த தியாகிகளின் கல்லறைகள் இல்லை. ஆனால், அவர்கள் ஒவ்வொருவரையும் காலம் காலமாக நெஞ்சில் நிறுத்தும் நினைவுகள் இருந்தன. நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன. மாவீரர் நினைவான பாடசாலை மாணவ மாணவிகளின் ஆடல்கள் பாடல்கள் அரங்கேறுகின்றன.

அடுத்து'வானம்பூமியானது.பூமிவானமானது...'என்ற ஆசிரியர் கணேசனின் பாடல் பாடகர் சாந்தனின் குரலில் செவிகளை நிறைக்கிறது. அடுத்து இந்தியப்படையின் கொடுமைகளை, தேசத்துரோகிகளின் நயவஞ்சகத்தை விளக்கும் சில உரையாடல்கள், தாளலயம் வில்லுப்பாட்டு என நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. இறுதி நிகழ்ச்சியாக நா.யோகேந்திரநாதனின் நாடகம்மேடையேற்றப்படுகிறது.

இதில் சிங்கள அரசு எவ்வாறு இந்தியாவைத் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துகிறது என்பதையும், இந்தியப்படை தோற்கடிக்கப்பட்டு விரட்டப்படும் என்பதையும் தேசத்துரோகிகளும் துரத்தப்படுவார்கள் என்பதையும் வெளிப்படுத்திய ஒரு நவீன பாணியில் அமைந்த படைப்பாக விளங்கியது.

மாவீரர்களை நினைவு கூர்ந்து நடத்தப்பட்ட இந்த முதல் நினைவு விழா, பிரமாண்டமான முறையில் அமைந்திருந்ததோடு மக்களுக்கு உணர்வூட்டி எழுச்சிபெற வைத்த ஒரு அரங்காக அமைந்தது. மறுநாள் கிளிநொச்சி நகரில் சிலரை பிடித்து வைத்து "நீ நேற்று கோணாவில் போனனீ தானே?" என்று கேட்டு கோழைத்தனமாக அடித்து துன்புறுத்தினர். ஒரு சில வாரங்களிலே அவர்கள் இந்தியப்படையினரின் பின்னே துண்டைக்காணோம் துணியைக்காணோம் என்று ஓடியதுதான் வரலாறு. மூன்று புறமும் இந்தியப் படையும் தேசத்துரோகிகளும் சூழ்ந்து நிற்க, எந்தக் கொடுமைகளையும் அவர்கள் எந்த நேரத்திலும் செய்யலாம் என்ற நிலை நிலவ இப்படிப் பெருந்தொகையான மக்கள் எப்படி இந்த நிகழ்வில் அணிதிரள முடிந்தது? இவ்வளவு பெரும் துணிச்சல் எப்படி வந்தது? இங்கு தான் மக்கள் சக்தி என்ற அற்புதம் முளைவிட்டு கிளைபரப்பி பெரும் விருட்சமாகிறது.

மக்கள் உணர்வு கொண்டு எழுச்சி பெறும்போது அதை எந்தச் சக்தியாலும் அச்சுறுத்த முடியாது, எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது, எந்த சக்தியாலும் அழித்துவிடமுடியாது. இது காலாதி காலமாக உலகம் கண்டயதார்த்தம்.இந்தியப்படையின் அச்சுறுத்தல்களோ மிரட்டல்களோ தியாகி திலீபனின் உண்ணா விரதத்தில் பல்லாயிரம் பேர் கலந்து கொள்வதைத் தடுக்க முடியவில்லை. வெஞ்சினம் கொண்டு விடுதலைக்காக உயிரையும் கொடுப்போம் என்று சபதமிட்டதை தடுத்து விட முடியவில்லை.

இவ்வாறே கோணாவில் முதல் மாவீரர் தினத்தில் பல்லாயிரம் மக்கள் கலந்து கொண்டு உணர்வெழுச்சியில் சங்கமமானதை எந்தக் கொடியவர்களாலும் தடுக்க முடியவில்லை.

மக்கள் இதய பூர்வமாக எழுச்சி பெறும்போது அவர்கள் எந்தப் பயங்கரத்துக்கும் துணிச்சலாக முகம் கொடுப்பார்கள் என்பதற்கு வன்னியில் இடம் பெற்ற முதல் மாவீரர் தினம் ஒரு நல்ல உதாரணமாகும்.

**நா.யோகேந்திரநாதன்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொரு மாவீரர் தினத்தையும் கடந்து செல்லும் போது...



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாட்களும், மாவீரர் நினைவேந்தல் வாரமும் அண்மிக்கும் தருணங்கள் மிகவும் உணர்வுபூர்வமானவை. எல்லாவற்றையும் திரும்பி பார்த்து, அழுது புலம்பி அரற்றி ஆற்றாமையின் அழுத்தத்தினால் விழுந்து புரண்டு தட்டுத்தடுமாறி எழுந்து நிற்க வேண்டியிருக்கின்றது. இந்த நிலைக்கு, எம்மிடம் வழங்கப்பட்டுள்ள பொறுப்பினையும், அதுசார் தார்மீகத்தினையும் சரியாக நிறைவேற்றமுடியவில்லையே என்கிற குற்றவுணர்ச்சியே பிரதானமாக இருக்கின்றது. இடைநடுவில் நின்ற எமது பயணத்தினை சரியான பக்கங்களை நோக்கி நகர்த்தி கொண்டு செல்ல வேண்டிய அழுத்தமும் பெரியதாக இருக்கின்றது. அது, எம்மால் தூக்கிச் சுமக்க முடியாத பாரமாகவும் இருக்கின்றது.

மலர்கள் தூவி, தீபங்களை ஏற்றி, அஞ்சலிப் பதிவுகளை எழுதிவிட்டு எமது பொறுப்புக்கள் முடிந்துவிட்டதாக நினைத்து ஒவ்வொரு மாவீரர் தினத்தையும் கடந்து செல்லும் போது, எரிந்து கொண்டிருக்கும் தீபங்கள் எங்களை நோக்கி ஆயிரமாயிரம் கேள்விகளை எழும்புகின்றன. அந்தக் கேள்விகளை எதிர்கொள்ள முடியாமல் தீபங்களை திரும்பிப் பார்க்காமல் வேக வேகமாக நடந்து செல்ல வேண்டியிருக்கின்றது.

அதில், கடந்த சில வருடங்களாக பிரதானமாக எழும் கேள்விகளையாவது நாம் எதிர்கொள்ள வேண்டிய கடப்பாடு இப்போது உண்டு.

* மாவீரர்களாக வீழ்ந்துவிட்டவர்களின் ஆயிரமாயிரம் குடும்பங்கள் பேரழிவுக்குப் பின்னராக வாழ்வை எதிர்கொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் வாழ்வை எவ்வாறு மீட்டெடுத்துக் கொடுக்கப் போகின்றோம்?
* முன்னாள் போராளிகள் வாழ்க்கையை முற்றாக தொலைத்துவிட்டு தேடிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் வாழ்வில் ஒளியை ஏற்ற வேண்டிய பொறுப்பினை எப்போது நிறைவேற்றப் போகின்றோம்?

இந்த இரண்டு கேள்விகளையும் புறந்தள்ளிவிட்டு தீபங்களை ஏற்றுவதாலோ, அஞ்சலிக் கவிதைகளை வாசிப்பதாலோ எதுவும் மாறப் போவதில்லை. நாம் அரசியல் ரீதியாக எவ்வளவு விழிப்புணர்வுடன் முன்னோக்கி செல்ல வேண்டுமோ, அதனையும் தாண்டிய அர்ப்பணிப்புடன் எங்களின் கடப்பாடுகளை நிறைவேற்றியாக வேண்டும். அதனை செய்யாமல் எவ்வளவு தூரம் சென்றாலும், எம்மோடு 'தோற்றுப்போனவர்கள்' என்கிற அடையாளம் ஒட்டிக்கொண்டு வரும். அவ்வாறான நிலையை, மாவீரர்களாக உறங்கிக் கொண்டிருக்கும் உறவுகள் என்றைக்குமே எதிர்பார்க்கவில்லை. மாவீரர்களின் கனவுகளை கொண்டு சுமப்பது போலஞ் அவர்கள் விட்டுச் சென்ற பொறுப்புக்களையும் நிறைவேற்ற உறுதி பூணுவோம். அது, தமிழ் சமூகத்தைப் பீடித்துள்ள குற்றவுணர்ச்சியிலிருந்து மீட்பதற்கும் உதவும்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமது இன்னுயிர்களை அர்ப்பணித்து உறங்கிக்கொண்டிருக்கும் உறவுகளுக்கும், போராட்ட வாழ்வில் தமது உயிர்களை கொடுத்துவிட்ட பொதுமக்களுக்கும் அஞ்சலிகள்.

விடுதலை பற்றிய நம்பிக்கையை மனதில் ஏற்றி சாத்தியமான வழிகளில் இலக்கை அடைவதுதான், எமக்காக இழக்கப்பட்ட உயிர்களுக்கு நாம் செய்யும் பெரும் மரியாதையாக இருக்கும். அதற்கான முயற்சிகளை இதய சுத்தியுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்வோம்.

அத்தோடு, தியாகங்களின் மேல் ஏறி நின்று வீர வசனம் பேசி ,கூச்சலிடும் போலிகளை இனங்கண்டு, அவர்களை புறம்தள்ளுவோம் !




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்கேஜ்



புதிய, முதல் தரம் வீடு வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், 3ஆம், Bridge, Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மோட்கேஜ்

# MORTGAGE

**T. NESAN**
**416-908-5656**

*Residential / Commercial / Industrial / Investment Properties*

- 1st, 2nd and 3rd Mortgages
- Refinance
- Secured Line of Credit
- New House Commitment, Pre-approval
- Home Equity Loan

## 1st Mortgage ('A' lender) Majaor, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 659.62 | 1319.25 | 1429.19 | 2858.37 |

## 1st Mortgage ('B' lender) Under write Banks, Trust, Cridit Union

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 765.04 | 1530.08 | 1657.59 | 3315.17 |

## 1st Private Mortgage ('C' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 698,000 | 1059.81 | 2119.62 | 2296.26 | 4592.52 |

## 2nd Mortgage ('B', 'D' lender) Private, Under write Banks

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 98,000 | 179.15 | 358.29 | 388.15 | 776.30 |

## 3rd Mortgage ('E' lender) Private lender

| Mortgage Amount | Weekly | Bi Weekly | Semi Month | Month |
|---|---|---|---|---|
| 49,000 | 113.72 | 227.43 | 246.39 | 492.77 |

## Secure Line of Credit & Loan

| Mortgage Amount | Secure Line of Credit | Home Equity Loan |
|---|---|---|
| 225,000 | 1005.95 / per month | 1276.51 / per month |

## WE DEAL WITH ALL BANKS

TD Canada Trust, Scotiabank, Street Capital Bank of Canada, radiusfinancial, First National Financial LP, Equitable Bank, Home Trust, B2B Bank, RMG, MCAP

**SUBRA MORTGAGE FINANCIAL**

mortgage@nesan.ca
www. nesan.ca

Mortgage Alliance
Brokerage # 10530
* Independently Owned and Operated

1585 Markham Rd, Unit # 407, Toronto, ON. M1B 2W1

**Office: 1-844-878-2721| Fax: 647-351-3099**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2019
Civic LX FROM
$61 @
1.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS
$0 DOWN PAYMENT/OAC
$0 SECURITY DEPOSIT

NEW CIVIC BONUS^




PLUS RECEIVE A
$500
CIVIC BONUS^
LEASE & FINANCE ON 2019 CIVIC MODELS (EXCLUDING TYPE R)

PROUDLY BUILT IN ONTARIO




2019
CR-V LX FROM
$85 @
3.99% APR
WEEKLY LEASE FOR 60 MONTHS
$0 DOWN PAYMENT/OAC
$0 SECURITY DEPOSIT

DON'T MISS OUR BIGGEST EVENT OF THE YEAR

Honda CHECKERED FLAG EVENT

HONDA

CASH INCENTIVES ON SELECT 2015 MODELS. MAXIMUM CASH INCENTIVE ONLY ON 2015 PILOT MODELS.

HONDA
Formula Honda
*Where You're Treated like Family.*



Shan Sarvananthan
*Sales & Leasing Consultant*
Cell 416-720-1184

2240 Markham Road
Scarborough,
ON, M1B 2W4
Telephone:
416-754-4555

formulahonda.com






Rajah Tharmalingam
*Sales & Leasing Consultant*
Cell 647-833-4998


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்காபரோவில் முதலீட்டாளர்களுக்கும் முதல் தடவையாக வீடு வாங்க நினைப்பவர்களுக்கும் இவை சிறப்பான தெரிவு

Complimentary Vacation Package

## THE BOROUGH
Lawrence East & Birchmount



PROJECT HIGHLIGHTS
- ❑ Two Towers with a total of 385 Suites
- ❑ Tower A: 21 Storeys
- ❑ Tower B: 7 Storeys
- ❑ Suites range in size from 299 sq. ft. to 846 sq. ft.

* Estimated Completion Date: Fall 2022

PRICE RANGES:
- ❑ Studios: $250,000 to $340,000
- ❑ 1 Bedroom: $340,000 to $430,000
- ❑ 2 Bedroom: $440,000 to $540,000
- ❑ 3 Bedroom: $670,000 to $690,000

EXCLUSIVE LIMITED TIME ONLY
PLATINUM DEPOSIT STRUCTURE:
- ❑ $5,000 on signing
- ❑ Balance of 5% in 1 Month
- ❑ Remaining 15% is broken down into 15 payments over 30 months (1% deposit every 2 months)
- ❑ 1 Free Parking Space and 1 Free Storage Locker is Included for every suite for the Platinum Sales Time Period!

## K SQUARE
Kennedy and 401



PROJECT HIGHLIGHTS
- ❑ Two Towers with a Total of 644 units
- ❑ Tower A: 34 Storeys
- ❑ Tower B: 31 Storeys
- ❑ Suites range in size From 452 SqFt Up To 1,333 SqFt

* Estimated Completion Date: Fall 2022

PRICE RANGES:
- ❑ 1 Bedroom: $340,000 to $410,000
- ❑ 2 Bedroom: $550,000 to $650,000
- ❑ 3 Bedroom: $700,000 to $690,000

EXCLUSIVE LIMITED TIME ONLY
PLATINUM DEPOSIT STRUCTURE:
- ❑ $5,000 on signing
- ❑ Balance of 5% in 1 Month
- ❑ Remaining 15% is broken down over 2 Year
- ❑ 1 Free Parking Space and 1 Free Storage Locker is Included for every suite for the Platinum Sales Time Period!



**Navajeevan** Anantharaj
*Sales Representative*

**416 272 8543**
416 287 2222
416 282 4488
anavajeevan@gmail.com
203-1265 Morningside Ave, Scarborough, ON M1B 3V9

VIP

RE/MAX COMMUNITY
Realty Inc., Brokerage
1265 Morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416-287-2222

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org